# ஞானச்சுடர்


பங்குனி 2019

255 ஆவது மலர்




வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



கூற்றங் குதித்தலுங் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு.

**பொருள்:** தவஞ் செய்தலால் உண்டாகும் ஆற்றல் உள்ளவர்களுக்கு மரணத்தைத் தவிர்த்திருத்தலும் முடியும்.

(269)

இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்.

**பொருள்:** உலகத்தில் தவஞ் செய்வர் சிலரும் தவஞ் செய்யாதார் பலரும் இருத்தலே வறியர் பலராயிருத்தற்குக் காரணம்.

(270)

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### முத்தி நல்குமே

## தன்னையறிந்தோர் தலையானோர்

வெண்பா



தன்னை யறிதல் தலையானோர் தங்கடமை
என்னப் பெரியோ ரியம்புவரால் – மின்னனைய
பொய்யான வாழ்வைப் புதுமையென வெண்ணுவரோ
கைமேற் கனியாகக் காண் 01

தெரிந்து வினையாற்றுந் தீரர்களே மண்ணில்
அருந்தவர்க ளென்றுமுனோ ராய்ந்தார் – பொருந்துவன
செய்து சிறுதொழில்கள் செய்யா தொழியவிட்டு
உய்வாய்நீ யென்னி லுறைந்து 02


சிவத்தை விடத்தெய்வம் வேறில்லை யென்போர்
அவத்தி லழுந்துவரோ வன்றே – உவத்தல்
வெறுத்தலாற் றெய்வம் பலவாய் விதித்தோம்
அழுத்தார்க்கு முண்டோ வவை 03

அவைக்கஞ்சா வீர ரவர்தம்மை நோக்கில்
சுவைமுதலாய் வென்றநல்ல தூயோர் – நவைசேரும்
இந்திரனே சாலுங் கரியென்றால் வேறெனக்குச்
சந்தேக மேன்காணுஞ் சாற்று 04

# ஞானச்சுடர்



வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை



உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 | சுடர் - 255

2019 | பங்குனி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| மனிதனும் தெய்வமாகலாம் | மு. செல்லத்தம்பி | 01 -02 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 03 -06 |
| சித்திரா பூரணை | க. சிவசங்கரநாதன் | 07 -08 |
| ஆனந்தக் கிருஷ்ணனின்... | திருமதி பா. சிவனேஸ்வரி | 09 -11 |
| சித்தமலம் அறுவித்துச்... | கே.எஸ். சிவஞானராஜா | 12 -13 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 14 -20 |
| அறத்தின் மகிமை | பூ.க. இராசரத்தினம் | 21 -23 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 24 -25 |
| சைவ தமிழ் கலை... | க. நல்லையா | 26 -28 |
| நித்திய அன்னப்பணி... | சந்நிதியான் ஆச்சிரமம் | 29 -30 |
| சிவன் வடிவம் உணர்த்தும்... | காரை எம்.பி. அருளானந்தன் | 31 -32 |
| இலங்கையில் சாவகச்சேரி... | ப. மகாகணபதிசர்மா | 33 -34 |
| ஸ்ரீ ராமன் | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 35 -36 |
| சமய வாழ்வு | இரா. செல்வவடிவேல் | 37 -40 |
| கற்பனைகளும் காட்சி... | இ. ஜெயபாலன் | 41 -45 |
| . சந்நிதியான் ஆச்சிரமம் | இ. ஸ்ரீதரன் | 46 -47 |
| படங்கள் தரும் பதிவுகள் | சந்நிதியான் ஆச்சிரமம் | 48 -52 |
| கடவுளின் மூன்று நிலைகள் | P. சோமசுந்தரம் | 53 -55 |
| இறைவனின் உண்மை... | பு. கதிரித்தம்பி | 56 -57 |
| செல்வச்சந்நிதி முருகன் | ஆ. விநாயகமூர்த்தி | 58 -59 |
| மகாபாரதம் | S.S. றஜீந்திரன் | -60 |



வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

# ஞானச்சுடர் மாசிமாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

ஞானச்சுடர் மாசிமாத மலருக்குரிய வெளியீட்டுரையினை சந்நிதியான் ஆச்சிரமத்தோடு நீண்டகாலத் தொடர்பில் உள்ளவரும், இளைப்பாறிய ஆசிரியையுமாகிய திருமதி புனிதவதி சண்முகலிங்கம் அவர்கள் மேற்கொண்டார்கள்.

ஆச்சிரமத்தினால் ஆரம்ப காலம் தொடக்கம் இன்றுவரை நடாத்தப்பட்டு வரும் சகலவிதமான சமய, சமூகப் பணிகளின் பலா பலன்கள் எந்தெந்த வகையில் மக்களைச் சென்றடைகின்றது என்பதை சபையில் இருந்த அடியார்களுக்கு ஆணித்தரமாக எடுத்துரைத்தார்.

அதனையடுத்து ஞானச்சுடர் மலர் பற்றிய தனது கருத்தினை மக்கள்முன் வைத்தபொழுது, இன்றைய மாணவர் தொடக்கம் இளைஞர் வரை தமிழ் மக்களுக்குரிய சகல சம்பிரதாயங்களிலிருந்தும் விலகிச் செல்வது ஒரு விரும்பத்தகாத காரியம் என்பதை வலியுறுத்தி அதனை நிவர்த்தி செய்யும் முகமாக அனைத்து சைவ நிறுவனங்களும் ஒன்றிணைந்து எமக்குரிய பண்பாட்டினை நிலைநிறுத்துவதற்கு ஆவன செய்யவேண்டும் என்று தனது கருத்தை வலியுறுத்தி மாசிமாத மலரின் வெளியீட்டுரையை நிறைவு செய்தார்.

**மதிப்பீட்டுரை:-**

மாசிமாத ஞானச்சுடர் மலருக்குரிய மதிப்பீட்டுரையினை யாழ் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளரும் பேரவையின் செயற்பாட்டிற்கு தன்னாலான ஆதரவை நல்கிவருபவருமான திருமதி நாச்சியார் செல்வநாயகம் அவர்கள் ஆற்றினார்கள்.

அவர் தம் ஆரம்ப உரையில் ஒரு ஆன்மீக மலரானது கடந்த இருபத்தொரு வருட காலமாக மாதாந்தம் வெளிவருவதென்பது ஒரு சாதனையே. அதிலும் சந்நிதியான் ஆச்சிரமத்திலே வெளிவந்து கொண்டிருக்கும் இம் மலரின் செயற்பாட்டுக்கு சந்நிதி வேற்பெருமானின் அருட்கடாட்சம் இருப்பதனால்த்தான் இம்மலர் தொடர்ந்து பிரகாசிக் கின்றது என்று கூறி மலரில் இடம்பெற்ற ஆக்கங்களின் உள் அடக்கத்தை சபையில் இருந்த அடியார்களுக்கு எடுத்துக் கூறினார்.

தனது மதிப்பீட்டுரையின் இறுதியில் ஆன்மீக மலர்களுக்கு ஆக்கங்கள் எழுதுவோர் ஒரு வரையறைக்குட்பட்டு மக்கள் புரிந்துகொள்ளும் வண்ணம் தமது கருத்துக்களை முன் வைக்கவேண்டும் என்று கூறியதுடன் இளம் சமூகத்தினரின் ஆக்கங்களையும் மலரில் இடம்பெறச் செய்து அவர்களது எழுத்தாற்றலை வளர்ப்பது ஒரு போற்றக்கூடிய செயல் என்று கூறித் தனது மதிப்பீட்டுரையை நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்

செல்வச்சந்நிதியில் அருளாளர்களாக வாழ்ந்தவர்கள் வரிசையில் முருகேசு சுவாமிகள் முதன்மைபெற்று விளங்குகின்றார். அன்னாரின் குருபூசை தினம் 11.04.2019 வியாழனன்று அமையப் பெற்றுள்ளதால் அன்றைய தினம் ஆச்சிரமத்தில் நடைபெறும் பூசை வழிபாடுகளுடன் நிறைவுபெற்று, மறுநாள் 12.04.2019 வெள்ளியன்று நடைபெறவுள்ள ஆச்சிரம வாராந்த நிகழ்வினில் முருகேசு சுவாமிகள் பற்றிய நினைவுப் பேருரை போன்ற விசேட நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது.



முருகேசு சுவாமிகளுக்கு ஏற்பட்ட நோய் உபாதை, செல்வச்சந்நிதி முருகன் கருணையினால் அவர் சுகமடைந்த விதம் ஆகியவையெல்லாம் சந்நிதி முருகனோடு அவருக்கிருந்த பூர்வஜென்மத் தொடர்புகளைக் காட்டி நிற்கிறது.

சந்நிதி ஆலயத்தில் அவர் ஆற்றிய திருப்பணி வேலைகள், அங்கே இன்றும் இடம்பெறுகின்ற விசேட பூசைகள்- அபிஷேகங்கள் ஆகியவற்றினை ஒழுங்குபடுத்தியமை போன்ற பல்வேறு பணிகளும் எக்காலமும் நினைவு கூரத்தக்கவை.

இதேபோன்று, சந்நிதியான் ஆச்சிரமத்தின் கட்டுமானப் பணிகள், நித்திய அன்னப் பணிகள் என்பவற்றிலும் அவரின் பங்களிப்பு எம்மால் மறக்க முடியாதது.

12.04.2019 வெள்ளியன்று சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ள முருகேசு சுவாமிகளின் குருபூசை தினத்தில் பங்குகொண்டு சுவாமிகளின் அருள் பெற்றேகுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவகுப்பு

## 14. வேல்வாங்கு வகுப்பு

திடவிய நெஞ்சுடை யடியரி டும்பைகெ டும்படி
தீயாங்குறை போயாழ்ந்தது
செயசெய வென்றிசை பரவிய வெங்கள்கொ டுங்கலி
தேசாந்தர மேசாய்ந்தது
செயலுரை நஞ்சுறழ் மயலுறு நெஞ்சினர் வஞ்சகர்
தீமான்கதர் தாமேங்கினர்
சிகரத ரங்கித மகரநெ ருங்குபெ ருங்கடல்
தீமுண்டுதன் வாய்மாண்டது
தெரியலர் சென்றடை திசைகளி லெண்கரி சிம்பெழ
மாறாங்கிரி நூறாருந்தொளை
சிகரநெ டுங்கிரி குகைகடி றந்துதி கந்தமும்
லோகாந்தமு நீர்தேங்கின
சிறையுள முந்திய குறைக ளொழிந்துசெ யங்கொடு
தேவேந்திரர் சேணாண்டனர்
திரிபுவ னங்களு மொருபய மின்றிவ ளங்கெழு
சீர்பூண்டற நேர்பூண்டன:,

விடவச னஞ்சில பறையும்வி ரிஞ்சன்வி லங்கது
கால்பூண்டுதன் மேல்தீர்ந்தனன்
விகசித சுந்தர விதரண வைந்தரு வெந்தெழில்
வீவான் பொழில் பூவாய்ந்தது
விழைவுத ரும்பத சசிதன்வி ளங்கிய மங்கல
நூல்வாங்குகி லாள்வாழ்ந்தனள்
வெருவியொ துங்கிமை யவரெவ ருஞ்சிறை வென்றித
மேலாம்படி யேமீண்டனர்
விழியொரி ரண்டொரு பதுசத நின்றெரி கண்டகன்
மேல்வாங்கிளை கால்சாய்ந்தது
வெளிமுழு துந்திசை முழுதும்வி ழுங்கியெ ழுங்கன
சூர்மாண்டற வேர்மாய்ந்தது
விபுதர்ப யங்கெட நிருதர் தளங்கெட விண்கெடு
மேடாம்படி பாடோங்கின
மிடைகுறள் வெங்கொடி கழுகுப ருந்து விருந்தென
வூனார்ந்தகல் வானார்ந்தன:,

# பங்குனிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

R. கிருஸ்ணசிவம்
(அவுஸ்திரேலியா)

இ. சங்கரலிங்கம்
(அம்மன் பல்பொருள் வாணிபம், ஊரெழு கிழக்கு)

இராமசாமி திருச்செல்வம்
(தலைவர், பர்வபத்தினி அம்பாள் தேவஸ்தானம்- ஊரெழு)

அ. வரதராசா
(வரியப்புலம் வீதி, சுண்ணாகம்)

வே. நடராசா
(தும்பளை மேற்கு)

சி. கிருஷ்ணபிள்ளை J.P.
(ஆவரங்கால்)

பொதுமுகாமையாளர்
(வலி. கிழக்கு வடபகுதி ப.நோ.கூ. சங்கம், அச்சுவேலி)

பொதுமுகாமையாளர்
(பனை, தென்னை வள அபிவிருத்தி கூ. சங்கம், அச்சுவேலி)

சி. குமாரலிங்கம்
(இளைப்பாறிய வங்கியாளர், யாழ்ப்பாணம்)

செ.க. செல்வநாயகம்
(செல்வா ஸ்ரோர்ஸ், ஆவரங்கால்)

திருமதி சு. செல்வக்குமார்
(மாநகரசபை, யாழ்ப்பாணம்)

அதிபர்
(சிதம்பராக்கல்லூரி, வல்வெட்டித்துறை)

சு. சோமாஸ்கந்தமூர்த்தி
(சித்தங்கேணி)

யோ. சிவஉமாகரன்
(உயர் பட்டப்படிப்புப்பீடம், யாழ் பல்கலைக்கழகம்)

ந. கணேஸ்வரமூர்த்தி
(கரவெட்டி)
ச. தங்கராசா J.P.
(இளை. அதிபர், நீர்வேலி)
க. மணியன்
(புத்தூர்)
வ. துரைராசா
(ஒஸ்காவீதி, உரும்பராய் தெற்கு)
கு. ரங்கநாதன்
(இணுவில் தெற்கு)
க. வைத்தியநாதன்
(சுன்னாகம்)
சி. வல்லிபுரம்
(தும்பளை, பருத்தித்துறை)
சபா இரத்தினசிங்கம் J.P.
(சபா றேடர்ஸ், அச்சுவேலி)
V. பரமானந்தம்
((முன்னாள் பொது முகாமையாளர்- தொண்டைமானாறு)
K. கேதீஸ்வரநாதன்
(புன்னாலைக்கட்டுவன் தெற்கு)
சு. மகேஸ்வரன்
(மாரியம்மன் மோட்டோர்ஸ், கோப்பாய்)
தம்பிப்பிள்ளை குணரட்ணம்
(சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி)
S. திருவாஞ்சீஸ்வரன்
(V.S.K. மானிப்பாய்)
த. விவேகானந்தராசா
(டச்றோட், சித்தங்கேணி)
அ. கோணேஸ்கரன்
(தில்லையம்பதி, கோண்டாவில்)
இ. சந்திரசேகரன்
(மாசியப்புலம் வீதி, ஏழாலை)
ஜெ. ஜெயப்பிரதாப்
(சாவகச்சேரி)

சி. அழகேசன்
(வட்டுவினி அம்மன் கோவிலடி, இணுவில்)
க. தர்மநாயகம்
(மஞ்சத்தடி, இணுவில்)
பொ. ஞானப்பிரகாசம்
(கரணவாய் தெற்கு)
உரிமையாளர்
(கண்ணாடி களஞ்சியம், நெல்லியடி)
இ. வீரசிங்கக்குருக்கள்
(கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு)
அதிபர்
(கம்பர்மலை அ.த.க. பாடசாலை)
அதிபர்
(உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி)
திருமதி சி. தருமலிங்கம்
(இமையாணன், உடுப்பிட்டி)
கனகலிங்கம் சந்திரவாசன்
(நீர்வேலி)
கி. அருள்நாதர்
(பாலாவி தெரு, பொலிகண்டி)
சறோஜினிதேவி மாணிக்கராசா
(வறாத்துப்பளை, பருத்தித்துறை)
கந்தையா காசிராசா
(குப்பிளான் தெற்கு)
மார்க்கண்டு முத்துப்பிள்ளை
(அத்தியடி, யாழ்ப்பாணம்)
க. விக்னேஸ்வரராஜா
(புலோலி)
லலிதா சண்முகலிங்கம்
(திருமகள் வீதி, அரியாலை)
சி. விவேகானந்தம்
(பருத்தித்துறை)

**K. பிரதீபன்**
(யாழ்ப்பாணம்)
**ஐ. காளிங்கநடனம்**
(கொக்குவில்)
**பா. சிவதர்ஷினி**
(கலையகம், அல்வாய்)
**க. ஜெயபாலகணேசன்**
(சிறுப்பிட்டி தெற்கு)
**Dr. அ. செந்தில்குமரன்**
(பல் வைத்திய நிபுணர், ஆதார வைத்தியசாலை, மந்திகை)
**இ. பாஸ்கரன்**
(நல்லூர், யாழ்ப்பாணம்)
**க. சிவானந்தமூர்த்தி**
(புத்தூர்)
**சி. பத்மகுமார்**
(இணுவில் தெற்கு)
**அதிபர்**
(இமையாணன் அ.த.க. பாடசாலை)
**பா. சுதாகரன்**
(கற்பகப் பிள்ளையார் ஸ்ரோர்ஸ், உரும்பராய்)
**வ. கெங்கநாதன்**
(நீர்வேலி)
**P. நடராசா**
(கல்லடி ஒழுங்கை, சாவகச்சேரி)
**சி. சிவகுமார்**
(ஆவரங்கால்)
**S. முரளிதரன்**
(அச்சுவேலி)
**V. கருணாகரன்**
(சங்கானை)
**ச. சிவலிங்கம்**
(மானிப்பாய்)
**சண்முகம் தனலட்சுமி**
(கரணவாய்)
**வ. இரத்தினசிங்கம்**
(கம்பர்மலை)

# மனிதனும் தெய்வமாகலாம்

– **திரு மு.செல்லத்தம்பி** அவர்கள் –

இயற்கை இன்பத்தின் ஊற்று; பேரின்பத்தின் பிறப்பிடம்; ஞானத்தின் சுரங்கம். இந்த இயற்கையின் நியதியால் உருவான பிரபஞ்ச உற்பத்தியில், நீண்டகால ஓட்டத்தில் படிப்படியாக எண்ணற்ற உயிர் இனங்கள் இம் மண்ணுலகில் தோன்றலாயின இத்தகைய தோற்றப்பாடுகளின் உள்ளே உய்வன, ஊர்வன, நடப்பன, பறப்பன போன்ற பல்வகை உயிர் இனங்கள் தோன்றி உள்ளபோதும் இவை அனைத்தும் ஓர் அறிவு தொடக்கம் ஐந்தறிவுக்குட்பட்டனவாகவே வாழ்ந்து வந்தன. இதனால் ஐந்தறிவுக்கு அப்பாலுள்ள ஆறாவது அறிவான நீதி, நேர்மை, நன்மை தீமை, ஏற்றத் தாழ்வு என்று பகுத்து ஆயும் தன்மையினாலான பகுத்தறிவு கொண்ட மனிதனை ஆண்டவன் சிருஷ்டித்தான்.

இந்த மனித வர்க்கத்திலே தோன்றிய ஒரு தாயானவள் பத்து மாதங்கள் சுமந்து படாத பாடுபட்டு ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கிறாள். பெற்று எடுத்த குழந்தைக்கு தன் உதிரத்தையே பாலாக ஊட்டுகிறாள். அல்லும் பகலும் அயராது கண் விழித்து தன் உயிரிலும் மேலான செல்வத்தை கண்ணை இமை காப்பதுபோல் வண்ணம் உறக் காத்து வருகிறாள். “தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்” என்ற தொன்மை வாய்ந்த பழமொழிக்கு இணங்க ஒழுக்கமும் தூய சமவாழ்வும் பொலிய அன்னை தந்தையின் அரவணைப்பில் குழந்தை அருமை பெற வளர்ந்து வருகின்றது. நாட்கள் வாரங்களாகி வாரங்கள் மாதங்களாகி மாதங்கள் வருடங்களாகி உருண்டோடிய சில வருடங்களின் பின் பள்ளிப் பராயத்தை அடைந்துவிடவே பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்படுகின்றது. பள்ளிக்கூடம் சென்றாலும் எதையும் புரிந்துகொள்ள முடியாத பருவத்தில் எதனைப் படிப்பது? என்னத்தைப் படிப்பது? முதன் முதலில் ஒழுக்கத்தையே கற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் அங்கே அந்தக் குழந்தைக்கு ஏற்படுகின்றது. ஒரு கட்டிடமானது சாயாமல் சரியாமல் சிதைந்து விடாமல் தன் ஊழிக் காலம்வரை உறுதியுடன் நின்றுதவ அதன் அத்திவாரம் எவ்வளவு முக்கியம் வாய்ந்ததோ அதுபோலவே ஒரு மனிதன் வாழும் காலம் முழுவதும் எல்லாவகையான சீரும் சிறப்பும் பெற்று உயர்ந்த மனிதனாக, உத்தமனாக வாழ அவன் முதலில் ஒழுக்கத்தையே கற்றாக வேண்டும். ஒழுக்கம் உண்மையானது, உயர்வானது, தெய்வீகமானது. இந்த நன்றிக்கு வித்தாகும் நல் ஒழுக்கத்தையே அவன் முதல் முதலில் கடைப்பிடித்து ஒழுக வேண்டும். அதன் பின்பே கல்வியில் நாட்டம் கொள்ள முடியும். இதனையே தெய்வப் புலவர் திருவள்ளுவரும்,

> **“ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
> **உயிரினும் ஓம்பப் படும்”**

என்று ஒழுக்கத்தின் முக்கியத்துவத்தையும் அதன் பின்பு

> **“கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்**
> **நிற்க அதற்குத் தக”**

என்றும் கல்வியின் பயன்பாட்டையும் கூறிச் சென்றார்.

*அன்பினால் வழிபாடு செய்கிறவனுக்கு ஆலயக் கதவுகள் தானே திறக்கும்.*

ஒழுக்க நெறிகளைப் புரிந்து அதன் படி ஒழுகத் தெரியாத ஒருவன் எவ்வளவுதான் கல்வியை கற்றபோதிலும் அவன் மனிதன் ஆகவோ மனிதாபிமானத்தை அடைந்தவன் ஆகவோ கருதப்படமாட்டான். ஒருவன் ஒழுக் கத்தைக் கைவிட்டு கல்வியில் மட்டும் சிறந்து ஓங்குவதால் பயனேதும் கிட்டுவது இல்லை. தனக்கும் பிறர்க்கும் சமூகத்திற்கும் கூடவே தீமையான செயல்களையே விழை விப்பான். இப்படியான ஒருவனையே, "கொல் லும். பாம்பின் கொடும் விசத்தை சொல்லிக் கொடுக்கத் தெரிந்துகொண்டான். குள்ளநரி போல் தந்திரத்தால் குடியைக் கெடுக்கப் புரிந்துகொண்டான். வெள்ளிப் பணத்தால் மற்றவரை விலைக்கு வாங்கத் தெரிந்து கொண்டான். மனிதனாக வாழ மட்டும் மனி தனுக்குத் தெரியவில்லை" என்று ஒரு திரைப் படக் கவிஞன் சித்தரிக்கிறான்.

மனிதன் மனிதனாக வாழ மாண்பு மிகு எண்ணங்கள் அவன் மனதில் குடியேற வேண்டும். கள்ளம் கபடம் அற்ற வெள்ளை உள்ளம் வேண்டும். சீரிய சிந்தனைகள் அவன் உள்ளத்தில் சிறந்தோங்க வேண்டும். பொய், களவு, கள், காமம் என்ற பொல்லாத பழக்கவழக்கங்களை புறம்தள்ளி, அன்பு, நன்றி, கருணை, பணிவு, பண்பு, என்ற தெய் வீக நெறிகளை வளர்த்துக்கொள்ள வேண் டும். பெரியோரைக் கனம் பண்ணுதல் வேண் டும். பிறர் குற்றங்களை பொறுத்துக்கொள்ள வேண்டும். எல்லோருக்கும் நல்லவனாக வாழ வேண்டும். உள்ளதைச் சொல்லி நன்மை யைச் செய்தால் உலகம் உன்னிடம் மயங் கும்; நிலை உயரும்போது பணிவு கொண் டால் உயிர்கள் உன்னை வணங்கும் என்ற நிலையில் தெளிந்த நினைவும் திறந்த நெஞ் சும் உடையவனாக வாழவேண்டும். அப்படி வாழ்பவனே மக்கள் மனங்களில் தெய்வமாக மதிக்கப்படுகின்றான்.

முந்திய ஜென்மங்களில் புரிந்த கர்ம வினைகளைப் போக்கவே மனிதன் மீண்டும் மீண்டும் பிறந்து வருகின்றான். தீவினைகள் முழுவதும் மாளப் பெற்றபின் நல்வினைகளை ஆற்றி பிறப்பற்ற நிலைக்கு தள்ளப்படுகின் றான்; முழு மனிதனாகின்றான்; பிறவிப் பயனை அடைந்து விடுகின்றான். இந்த நிலையில் தான் ஒரு நிரபராதி என்றும் ஆறறிவிற்கு உட்பட்ட அத்தனை இலக்கு களையும் அருமையாகவும் பெருமையாகவும் நீதியாகவும் நியாயமாகவும் வென்றெடுத்த ஒரு பரிபூரண மனிதன் என்று தன்னைத் தானே முழுமையாக நம்புகின்றான். தன்னை நிறைவு செய்தபின் அடுத்த கட்டமாக கடவுள்தான் என்று திடசங்கற்பம் பூண்டு விடுகின்றான். எனவே தன் அறிவு ஆற்றல் எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட சக்தி ஒன்று தன்னுள்ளுருவாகி ஒளி காட்டுவதை உணர்ந்து கொள்கின்றான். தனக்குள்ளேயே தன்னைக் காண்கின்றான். இப்படிப்பட்ட மனிதனையே வள்ளுவப் பெருந்தகை இன்னும் ஓர் இடத்தில்,

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"**

என்று மனிதனின் மகத்துவத்தை போற்றிப் புனைந்து சென்றார். எனவே மனிதனும் தெய்வமாகலாம்.

---

**"நான்" என்ற அகந்தை அகப்பற்று, "எனது" என்ற எண்ணம் புறப்பற்று "நான்" "எனது" என்ற எண்ணத்தை விட்டவர்களால்தான் ஆன்மிக வாழ்க்கையில் வெற்றிபெற முடியும். "நான்", "எனது" என்பன ஒருவனிடம் எந்த அளவுக்கு அதிகமாக இருக்கின்றனவோ, அந்த அளவிற்கு உலகப்பற்றும் அவனிடம் அதிகமாக இருக்கும். "நான்" "எனது" என்பவை அறவே இல்லாதநிலை ஞானியின் நிலை. அகப்பற்றையும், புறப்பற்றையும் நீக்கிக்கொண்டால் மட்டுமே நாம் முத்தி பெறமுடியும். "நான்" "எனது" என்ற எண்ணங்களும், தீய எண்ணங்களும்தான் முத்தி பெறுவதற்கு இடையூறாக இருக்கின்றன.**

*ஒருவனுடைய முகத்திற்கு நேராகச் சொல்வது அவதூறல்ல.*

# திருச்சதகம்

(தொடர்ச்சி...

## பக்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
–சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்–
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

## 08. ஆனந்தத்தழுந்தல்

**இறைவனது பேரின்பத்தில் முழுகி நிற்றல்**

**எழுசீர்க் கழி நெடிலடி யாசிரிய விருத்தம்**

79 வணங்கும் நின்னை மண்ணும் விண்ணும் வேத நான்கும் ஓலமிட்
டுணங்கு நின்னை யெய்த லுற்று மற்றொ ருண்மை யின்மையின்
வணங்கி யாம்வி டேங்க ளென்ன வந்து நின்ற ருளுதற்
கிணங்கு கொங்கை மங்கை பங்க என்கொ லோநி னைப்பதே.

**ப-ரை:**

இணங்கு கொங்கை மங்கை பங்க- ஒத்த கொங்கைகளையுடைய மங்கையது கூற்றையுடையவனே, மற்று ஓர் உண்மை இன்மையின்- நின்னொடொத்த பிறிதொரு உண்மைப் பொருள் இல்லாமையினால், நின்னை மண்ணும் விண்ணும் வணங்கும்- இணையிலியாகிய நின்னை மண்ணுலகத்தவரும் விண்ணுலகத்தவரும் வணங்குவர்; வேதம் நான்கும் நின்னை எய்தல் உற்று ஓலம் இட்டு உணங்கும்- நான்கு வேதங்களும் நின் உண்மைத் தன்மையைக் கூறத்தொடங்கி மாட்டாமையால் இஃதல்லை எனக் கூறி அடைக்கலம் வேண்டி வாடி நிற்கும்; அங்ஙனம் அருமையுடையையாயினும், யாம் வணங்கி விடேங்கள் என்ன- நின் அடியோமாகிய யாங்கள் நின்னை வணங்கி விடமாட்டோம் என்று பெருமகிழ்ச்சியால் கூற; வந்து நின்று அருளுதற்கு நினைப்பது என் கொல்- வெளிப்பட்டு வந்து நின்று அருள் செய்வதற்குத் தடையாகத் திருவுள்ளத்துக் கருதுவது யாதோ?

மங்கை பங்கனே, நின்னொடு ஒத்த பிறிதொரு உண்மைப் பொருள் இன்மையின் மண்ணவரும், விண்ணவரும் நின்னையே வணங்குவர்; வேதம் நான்கும் நின் உண்மை இயல்பைக் கூறத் தொடங்கி மாட்டாமையால் ஓலமிட்டு வாடா நிற்கும்; அங்ஙனம் அருமை உடையையாயினும்; நின் அடிமையாகிய யாங்கள் நின்னை வணங்கி விடமாட்டோம் என்று பெருமகிழ்ச்சியால் கூற வெளிப்பட்டு வந்து நின்று அருள் செய்வதற்குத் தடையாகத் திருவுள்ளத் துக் கருதுவது யாதோ என்பதாம்.

மண், விண் என்பன ஆகுபெயர்; வேதம் நான்கும் எய்தலுற்று வேதம் நான்கும் நின்னை அடையத் தொடங்கி என்றது நின் உண்மைத் தன்மையை உரைக்கத் தொடங்கி என்றவாறு. ஓலமிட்டு உணங்கும் என்றது அங்ஙனம் உரைக்கத் தொடங்கி மாட்டாமையால் இஃதல்லையாயிருக்கின்றாய் இஃதல்லையாயிருக்கின்றாய் என்று கூறி ஓலமிட்டு வாடி நிற்கும் என்றவாறு, வேதங்கள் அன்மைச் சொல்லினாற் கூறி வணங்குதலை,

*ஒரு குழந்தைக்கு தாய் இருக்குமிடம்தான் சொர்க்கம்.*

"அல்லை யீதல்லை யீதென மறைகளு மன்மைச்
சொல்லி னாற் றுதித் திளைக்குமிச் சுந்தரன்"

கடவுள் 29.

"பூதங்க ளல்ல பொறியல்ல வேறு புலனல்ல உள்ள மதியின்
பேதங் களல்ல விவையன்றி நின்ற பிறிதல்ல வென்று பெருநூல்
வேதங் கிடந்து தடுமாறும் வஞ்ச வெளியென்ப கூடன்மறுகிற்
பாதங்க ளோவ வளையிந்த னாதி பகர்வாரை யாயு மவரே

(19:1)

எனத் திருவிளையாடற் புராணத்து வருதலானுமறிக.

ஓலமிடுதல்- அடைக்கலம் வேண்டியழைத்தல். உணங்குதல்- உலர்தல், வாடுதல். எய்தலுறுதல்- அடைய முயலுதலாயினும் உண்மைத் தன்மையைக் கூறத் தொடங்குதல் எனப் பொருந்துமாறு பற்றி உரைக்கப்பட்டது. மற்றோர் உண்மை இன்மை அளவைகளானும் பொருந்துமாற்றானும் ஆராய்ந்தவழி நிறைவுடைய இறைமைக் குணங்களையுடைய நின்னை ஒத்த பிறிதொரு பொருளின்மை கண்டதாகும்.

வணங்கி யாம் விடேங்கள் என்ன என்றது அங்ஙனம் அருமையுடையையாயிருந்தும் வலிய வந்து ஆட்கொண்டருளிய பின்னர் பிரிந்த நின்னை அடியேங்கள் வணங்கி விடமாட்டோம் என்று பற்றிக்கொண்டு பெருமகிழ்ச்சியாற் கூறத்தக்கதாக என்றவாறு. அருளுதற்கு என்பது குவ் விகுதியீற்றுச் செயவெனெச்சம். அருளுதற்கு என்கொலோ நினைப்பது என இயைக்க. வெளிப்பட்டு அருளுதற்கு தடையாக திருவுள்ளத்துக் கருதுவது யாதோ? என்பதனால் தடையா தொன்றும் இல்லை என்பதும் அதனால் வெளிப்பட்டு அருள் செய்ய வேண்டும் என்பதும் யாதும் தடையுளதாயின் முன்னர் வெளிப்பட்டு ஆட்கொள்ள மாட்டாய் என்பதும் போதரும்.

இதன்கண், வணங்கி யாம் விடேங்கள் என்ன வந்து நின்றருளுதற்கு நினைப்பது என்கொலோ யாதுமில்லையே வெளிப்பட்டருள்க என வேண்டிக் கொள்ளுதலால் ஆனந்தத் தழுந்தல் என்னும் எட்டாம் பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 75

80 நினைப்ப தாக சிந்தை செல்லும் எல்லை யேய வாக்கினால்
தினைத்த னையு மாவ தில்லை சொல்ல லாவ கேட்பவே
அனைத்து லகு மாய நின்னை ஐம்புலன்கள் காண்கிலா
எனைத்தெ னைத்த தெப்பு றத்த தெந்தை பாதம் எய்தவே.

**ப-ரை:**

எந்தை- எங்கள் தந்தையே, சிந்தை நினைப்பதாக எல்லைஏய செல்லும்- என் மனம் நின்னை நினைந்தறிவதற்காகத் தனது ஆற்றலின் எல்லையளவும் மேற்பட்டுச் செல்லும்; நீ மனோதீதனாதலின் நின்னை அறிதல் அதனால் முடியாது. வாக்கினால் சொல்லல் ஆவ கேட்பவே- வாக்கினால் சொல்லத்தக்கன கல்விகேள்வியால் அறியப்படுவனவே; தினைதனையும் ஆவது இல்லை- அதனால் நின்னைப்பற்றிச் சொல்வதற்குத் தினையளவும் முடிவதில்லை; அனைத்து உலகும் ஆய நின்னை எல்லாவுலகங்களிலும் உடனாயும் வேறாயும் அமைந்த நின்னை; ஐம்புலன்கள் காண்கிலா- மெய்யின்கணுள்ள ஐம்புலன்களும் காணும் ஆற்றலுடையன வல்ல; அங்ஙனமாயின், பாதம் எய்த- நின் திருவடியை அடைய; அது எனைத்து எனைத்து-

*திருப்பிக் கொடுக்கப்படாத கடன்கள் மன்னிக்கப்படாத பாவங்கள்.*

அது எவ்வெத் தன்மைகளையுடையது; எப்புறத்து- எவ்விடத்துள்ளது அறிகிலேன் ஆதலால் அதனையடையுமாறு அருள் செய்ய வேண்டும்.

எந்தையே என் மனம் நின்னை நினைந்தறிவதற்காய்த் தனது ஆற்றலின் எல்லையளவும் மேற்பட்டுச் செல்லும்; நீ மனோதிதனாதலின் நின்னை அறிதல் அதனால் இயலாது வாக்கினால் சொல்லத்தக்கன கல்விகேள்விகளால் அறியப்படுவனவே; அவற்றால் நின்னைப் பற்றிச் சொல்வதற்குத் தினையனவும் முடிவதில்லை. எல்லாவுலகங்களிலும் உடனாயும் வேறாயும் அமைந்த நின்னை ஐம்புலன்களும் காணும் ஆற்றலுடையவனல்ல. நின்னுடைய திருவடியை அடைய அது எவ்வெத்தன்மைகளையுடையது. எவ்விடத்துள்ளது அறிகிலேன்; ஆதலால் அதனை அடையுமாறு அருள் செய்ய வேண்டும் என்பதாம்.

எல்லை- அளவு "நன்னா டலைவரு மெல்லை" கலி 39:31. சிந்தை நினைந்தறிவதற்குத் தனது ஆற்றலில் எல்லையளவும் மேற்பட்டு செல்லினும் அதனால் நினைந்ததற்கரியன என்பது "யாவரும் சிந்தையாலும் அறிவருஞ் செல்வனே" (சத 47) என அடிகள் அருளியவற்றானு மறியப்படும்.

தினை- சிறுமையைக் குறிக்கும் ஓரளவை, தனை- அளவு,

"இத்தனையும் வேண்டும் எமக்கே லோரெம்பாவாய்" திருவெம் 3.

சிறுமைக்குத் தினைத்தனையை எடுத்துக் கூறுதலை,

"தினைத்தனை யுள்ளதோர் பூவினிற் றேன்" திருவா. கோத் 3.
"தினைத்தனைப் பொழுதும் மறந் துய்வனோ" தே. 116:1.
"தினைத் தனையாம் பொழுது மறந்துய்வனோ" பெரிய- திருநாவு, 174

என வருவனவற்றிலுங் காண்க.

இறைவன் அனைத்துலகும் ஆயமையை,

"பண்ணும் பதமேழும்.... விண்ணும் முழுதானால்" ஞான 11:4.
"எல்லா வுலகமு மானாய் நீயே" நாவு 251:7.
"உலகெலா நீயே யாகி யமைந்தவனே" நாவு 257:6.
"உலகமெல்லாம் ஆயவனை" நாவு 279:1.
"அனைத்துலகு மானானை" நாவு 293:1.
"பாரொடு விண்ணும் பகலுமாகி" சுந் 2:10.

எனத் தேவாரத்து வருவனவற்றாலுமறிக.

ஐம்புலன்கள் என்றது சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பவற்றை உணரும் ஐம்பொறிகளை உணர்த்தியது. இறைவன் அனைத்துலகினும் உள்ளானாயினும் அவன் தன்னைக் காட்டினாலன்றி அறியமுடியாமையின் "ஐம்புலன்கள் காண்கிலா" என்றார். "மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி மயானத்தான் வார்சடையான் என்னினல்லான், ஒப்புடையனல்லன் ஒருவனல்லன் ஓருரனல்லன் ஒருவமனில்லி, அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும் அவனருளே கண்ணாகக் காணினல்லால் இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே" (310:10) என அப்பரடிகள் அருளியமையுங் காண்க.

இறைவன் திருவடியின் தன்மையும் இடனும் அளந்தரிய வொண்ணா என்பார், எனைத்தெ னைத்த தெப்புறத்த தெந்தை பாதம் என்றார்.

"அழ கெழுத லாகா வருட் சேவடி" நாவு 220:4.

*இதயம்தான் ஒருவனை நரகத்திற்கோ சொர்க்கத்திற்கோ கொண்டு செல்கிறது.*

"உரையா லுணரப் படாதவடி.... அகல மளக்கிற் பாரில்லாவடி" நாவு 219:7.
"அணியனவும் சேயனவு மல்லாவடி அடியார்கட் காரமுத மாயவடி" 219:9.
"எழுவாய் இறுவாயிலாதன..... ஐயாறனடித் தலமே" நாவு 92:5.
"என்றும் நீங்காப் பிறவி நிலைகெடுத்துக் கழலா வினைகள் கழற்றுவ" நாவு 92:19
".....ஐயாற னடித்தலமே"

எனத் திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியவாறுங் காண்க. எனைத் தெனைத்து என்பதற்கு எவ்வளவினது எவ்வினது எனப் பொருள் கொண்டு பிரகிருதி மாயை, அசுத்த மாயை, சுத்த மாயை என்பவற்றைக் கடந்து நிற்றல் பற்றி அங்ஙனம் கூறப்பட்டது என்பாருமுளர்.

இதன்கண், எந்தையே நின்பாதம் எய்த அது எனைத்து எனைத்து எப்புறத்தது என்பதனால் திருவடியையடையும் ஆர்வம் புலப்படுதலின் ஆனந்தத்தழுந்தல் என்னும் எட்டாம்பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 76. (தொடரும்...

## திருப்புகழைப் பாடுமவர் சிந்தை வலுவாலே
## ஒருத்தரையும் மதிப்பதில்லை கந்தன் அருளாலே.

கலியுகத்திலே கண்கண்ட தெய்வமாகக் கந்தவேற் பெருமான் போற்றப்படுகின்றார். கலியுகவரதனாகிய முருகப்பெருமானின் திருவருட் பேற்றினாலேயே அருணகிரிநாத சுவாமிகள் அருளிய திருப்புகழ்ப் பாமாலையைத் தினமும் கலியுகவரதனாகிய கந்தவேற் பெருமானைப் பாடிப் பணிவோர்க்கு வேண்டும் வரங்களைத் தருவதனால் உண்மையான முருகபக்தர்கள் சிந்தையிலே முருகனை நிலையாகக் கொண்டவர்களாக வாழ்வதனால், அத்தகு முருக பக்தி கொண்டவர்கள் கலியுகவரதனாகிய கந்தப்பெருமானை விட்டு வேறெதனையும் பெரிதாக மதிப்பதில்லை.

நாமும் நமது வாழ்வியல் நடைமுறையில் கதிர்காமம், சந்நிதி, நல்லூர், மாவிட்டபுரம் போன்ற ஈழத்து முருகன் ஆலயங்களிலும், மற்றும் ஆறுபடை வீடுகளிலும் வழிபடும் அடியவர்களின் சிந்தனைகள், செயல்கள், வாழ்வியல்களின் மூலமும் திருப்புகழைப் பாடும் அவர் சிந்தை வலுவாலேதான் அவர்கள் ஒருத்தரையும் மதிப்பதில்லை என்பதனை நன்குணரவும், அறியவும் முடிகின்றது.

கலியுகவரதனாகிய கந்தவேற் பெருமானின் பூரணமான திருவருள் திருப்புகழ் மனம்விட்டுப் பாடுபவர்களின் உள்ளத்தை உறுதியாகப் பற்றிவிடுகின்றது. முருகன் அருளை உறுதியாகக் கொண்டவர்கள் இறை பித்தர்களாகவும் எதற்கும் யாருக்கும் பணியாதவர்களாகவும் சிந்தை வலுப்பெற்றிடுவதனால் கந்தனின் அருளே எல்லாம் எனக்கொண்டு உலகியல் வாழ்வில் ஒருத்தரையும் பெரிதாக மதிக்காது, தாமும், தம் பக்தி மார்க்கமும் இறைவன் விட்டவழி என உறுதிபெறுகின்றனர். கலியுகவரதனாகிய கந்தப்பெருமான்மீதுகொண்ட அளவற்ற பக்தியினாலேயே அருணகிரிநாத சுவாமிகளும் திருப்புகழைப் பாடி முருகனை வேண்டுதல் செய்து முருகனுடன் இரண்டறக் கலந்தார்.

முருகபக்தர்கள் சிந்தையில் வேறு எதற்கும் இடம் தராது கந்தன் அருளே மேலாகக் கொண்டு திருப்புகழைப் பாடி அவனருள் பெறவேண்டும். திருப்புகழைப் பாடுவதன்மூலம் சிந்தையானது இறை வலுமிக்கதாகத் ஒருத்தரையும் மதிக்காதவர்களாக கலியுகவரதனாகிய கந்தப்பெருமானே அருள் எனச் சிந்தை வலுமிக்கவராக வாழலாமன்றோ

"திருப்புகழைப் பாடுபவர் சிந்தை வலுவாலே கந்தன் அருளாலே
ஒருத்தரையும் மதிப்பதில்லை கந்தன் அருளாலே"

கலியுகத்திலே கண்கண்ட தெய்வமான முருகனை நம்பினோர்க்கு அருள்புரிவார். ஆதலாற் திருப்புகழைப் பாடி சிந்தை உருகி வழிபட்டு நற்பேறடைவோமாக.

-நீர்வைமணி-

*உழைப்புதான் ஒரு மனிதனை மற்றொரு மனிதனைவிட முந்தச் செய்கிறது.*

# சித்திரா பூரணை

– திரு க. சிவசங்கரநாதன் அவர்கள் –

தமிழ் மக்களது ஆண்டுப் பிறப்பும் சித்திரை மாதப் பிறப்பும் இரண்டும் ஒன்றே தான். மாதத்தில் சித்திரை சிறந்ததாகவும் முதலாவதாகவும் அமைந்துள்ளது. சித்திரை மாதம் சித்திரை நட்சத்திரம் கூடிய பூரணையே சித்திரா பூரணையாகும். அன்று சித்திரகுப்த விரதம் நோற்பார்கள். அந்நாளில் பொங்கி வழியும் பால் நிலவைப்போல் மக்கள் உள்ள மும் மகிழ்ச்சியில் பொங்கித் திளைக்கும். அந்நாளில் பொங்கலிட்டு தெய்வங்களை மக்கள் வழிபட்டு விழாவாக்கி வந்தார்கள். ஏழைகளுக்குக் கஞ்சி காய்ச்சி ஊற்றுவார் கள். இதற்குச் சித்திரைக் கஞ்சி என்று பெயர். மாலையில் சித்திரகுப்தருடைய கதையை ஒருவர் வாசிக்க மற்றவர்கள் எல் லாரும் பயபக்தியாய்க் கேட்டு அநுபவிப்பார் கள். பொன், வெள்ளி இவைகளாலான பதுமையில் சித்திரகுப்தனை இருத்தி நியமப் படி வழிபாடு செய்ய வேண்டும். அன்னம் வெல்லத்துடன் கலந்த எள், பால், நெய் முதலியவை படைக்கும் பொருள்கள். வழி பாட்டின் முடிவில் பாயாசம் நிறைந்த வெண் கலப் பாத்திரம் தானமாகக் கொடுப்பது வழக்கம். அன்று முழுவதும் உப்பில்லாத உணவுண்டு விரதம் இருத்தல் வேண்டும்.

மாதந்தோறும் பூரணைவிரதம் அனுட் டிக்க முடியாதவர்கள் சித்திரா பூரணை யாவது அனுட்டிக்கவேண்டும். இப் பூரணை விரதம் மற்றைய பூரணை விரதங்களை அனுட்டிப்பதன் பலனைக் கொடுக்கவல்லது. முதன்முறை விரதம் தொடங்கும்போது 5 அல்லது 9 கலசங்கள் வைத்து அவைகளில் சித்திரகுப்தனையும் மற்றும் எட்டுத்திக்கு பாலகர்களையும் (அல்லது நான்கு திக்கு பாலகர்களை) இருத்தி வழிபட்டுப் பிறகு தானம் யாகம் பிராமண போசனம் முதலியன செய்ய வேண்டும். அன்று எல்லாப் பலன் களையும் கொடுக்கவல்ல இந்திர வழிபாடு செய்தல் வழக்கம் என்று தேவிபுராணம் கூறுகின்றது. மருக்கொழுந்தினால் இந்திரன் முதலிய தேவர்களை வழிபட வேண்டும். அத் திதி சனி ஞாயிறு அல்லது வியாழன் அன்று வருமாயின் மிகவும் விஷேசமானது.

இயமனுடைய கணக்குப்பிள்ளையே சித்திரகுப்தர் என்று அழைக்கப்படுவார். ஒரு வர் செய்த நன்மை தீமைகளை எழுதி வைத்துக் கடைசியில் உத்தரிக்கின்ற காலங் களிலே அக்கணக்கை வாசிப்பவர் சித்திர குப்தர் ஆவார். சித்திரகுப்தருக்கு காஞ்சிபுரத் தில் ஒரு ஆலயமும், திருவண்ணாமலையில் ஒரு சந்நிதியும் உண்டு. வேறு எங்கும் கிடை யாது. யமதேவன் தென்திசைக்கு அதிபதி. யமனுக்கு பதினான்கு பெயர்கள். இந்த யமனையும் வெல்ல வேண்டும் என்பதே அடியார்களின் அவா.

"கார் மாமிசை காலன் வரிற் கலபத்
தேர் மாமிசை வந்தெதிரப் படுவாய்"

என்பது அருணகிரியார் வேண்டுதல்.

எல்லாத் தருமங்களும் அன்பில் அடங்கும். அந்த அன்பே சிவம். அச் சிவமே காலகாலன். இந்த சிவத்தைப் பூசித்து மார்க் கண்டேயன், சாவித்திரி போன்றோர் யமனை வென்ற வரலாறுகள், யமனை வெல்ல இரண்டே மார்க்கம் உள்ளன என்பதை

*பூமிக்கு உணவளி, அது உனக்கு உணவளிக்கும்.*

உணர்த்துகின்றன. ஒன்று சாவித்திரி மார்க்கம். இதனைக் காலவந்தனம் எனலாம். மற்றொன்று மார்க்கண்டேய மார்க்கம். இதனை காலவஞ்சனம் என்கிறார்கள். காலத்துக்குட்பட்டுக் காலனை வெல்வது காலவந்தனம், கடவுளை வழிபட்டு காலத்தை வெல்வது காலவஞ்சனம். சாவித்திரி மார்க்கண்டேயர் விஷயங்களில் யமன் தன் கால தருமத்திற்கு விலக்காக நடந்து கொண்டார். சத்தியவான் விஷயத்தில் சாவித்திரியின் அளவுகடந்த அன்பில் ஈடுபட்டு அநுக்கிரக வாக்கைக் காக்கும் பொருட்டு வரமளித்தார். இது காலவந்தனத்துக்கு உவந்து அளித்தவரம். மார்க்கண்டேயனோ காலனைச் சிந்தியாமல் சிவத்தைச் சிந்தித்து வந்தவன். கால நியமப்படி அவனது முடிவு காலம் வந்தபோது காலந்தகன் தன் கடமையைச் செய்ய வந்தான். ஆனால் மார்க்கண்டேயன் ஆதியந்தம் இல்லாத சுயம்பிரகாச வெளியில் சிவதரிசனத்தைக் கண்டு காலாதீதனாக விளங்கினான். அதனால் யமனின் அதிகாரம் மார்க்கண்டேயன் விஷயத்தில் தோற்றது.

மிருத்யுவை வென்று அவரையே குருவாக அடைந்தவர் நசிகேதஸ். இவர் யமன் அருளால் காலச்சக்கரத்தை வென்றவர். தஞ்சை மாவட்டத்தில் ஸ்ரீவாஞ்சியம் என்ற இடத்தில் யமதேவனுக்குச் சந்நிதி இருக்கிறது. யமதேவனும் சனி பகவானும் சூரியனுடைய திருக்குமாரர்கள் என்று புராணம் கூறுகின்றது. சித்திரா பூரணையிலன்று போடப்படும் கோலத்தில் தென்புற வாசலை மூடியதுபோல போடுவது வழக்கம். தாயை இழந்தவர்கள் தாயை நினைத்து பன்னிரு மாத பூரணை விரதத்தை அனுட்டிக்க முடியாதுவிட்டால் சித்திரைமாத பூரணை விரதத்தை தவறாது அனுட்டிக்க வேண்டும். சமய குரவர்களில் நீண்டகாலம் வாழ்ந்து தேவாரத் திருப்பதிகங்களைப் பாடி சரியைத் தொண்டுகள் புரிந்த திருநாவுக்கரசு நாயனார் குருபூசைத் தினம் சித்திரைச் சதயம் ஆகும். இவரின் வாழ்க்கை வரலாற்றை சைவத் தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டும். சித்திரை மாத பூரணை தினத்தை தீர்த்த உற்சவமாகக் கொண்டு சைவாலயங்கள் பல அலங்கார உற்சவம், மகோற்சவம் போன்றவற்றை செய்தும் வருகின்றார்கள். அதில் சில: சுண்ணாகம் கதிரமலைச் சிவன் கோயில், கைதடி வீரகத்தி விநாயகர் ஆலயம், வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம், திருகோணமலை ஆலடி விநாயகர் ஆலயம், வவுனியா சிந்தாமணிப் பிள்ளையார் கோயில் போன்றவையாகும். மேற்படி ஆலயங்கள் உள்ள இடங்களில் மக்கள் வழிபாடுகளில் ஈடுபடுவது சிறப்பாகும்.

**வல்வினை களைந்திட சந்நிதி வந்து சேரு**

தூயவெண் திருநீற்றை தினம் பூசு - உனது
துயர் விலகிப்பறந்து ஓடும் காணு
வாய் திறந்து ஓம் முருகா என்று கூறு - தினம்
நலம் வந்து உனைச் சேரும் பாரு - சந்நிதி
வேல் முருகன் புகழ்தினம்தினம் பாடு
வல்வினை பறந்தோட தலம் வந்து சேரு
வேல் விரைந்து வந்து காக்கும் அப்போது
வரும் துன்பம் விலகிட இனிக்கும் எம் வாழ்வு.

-சின்னப்பு தனபாலசிங்கம்-

*எழுதப் படிக்கத் தெரிந்தவனுக்கு நான்கு கண்கள் உண்டு.*

# ஆனந்தக் கிருஷ்ணனின் அற்புத லீலைகள்

(தொடர்ச்சி...)

– **திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன்** அவர்கள் –

## வெண்ணெய்க்காடும் புண்ணியமூர்த்தி

நந்தலாலாவின் கோஷ்டியினர் மறுநாள் யார் வீட்டில் வெண்ணெய், தயிர் திருடுவது என்பது பற்றித் தீர்மானித்தனர். மறுநாள் காலையில் ஆயர்கள் மாடு மேய்க்கச் சென்று விட்டனர் பிருந்தாவனத்திற்கு. ஆய்ச்சியர்கள் மோர், பால் விற்க மதுராவிற்குச் சென்று விட்டனர். கண்ணன் கோஷ்டியினர் வீட்டிலுள்ளவர்கள் வெளியே சென்றதும் வெண்ணெய் திருட திட்டமிட்டபடி வந்தனர். அந்த வீட்டு ஆய்ச்சி அன்று மதுரா செல்லவில்லை. யமுனைக் கரைக்குத்தான் சென்றிருந்தாள். வீட்டிற்குள்ளே நுழைந்த கண்ணனும் பரிவாரங் களும் உறியில் வெண்ணெய் இருப்பதைக் கண்டனர். உறியின் கீழே ஒரு உரலை உருட்டிப்போட்டு அதன்மேல் ஒருவனும், அவன் தோளில் ஒருவனும் ஏறி, கடைசி யில் கண்ணனும் ஏறினான். கண்ணன் அனைவருக்கும் வெண்ணெயை உருட்டிப் போட்டான். தானும் வாயில் போட்டு விழுங்கினான். உடன் வந்த குரங்குகளுக் கும் கைகளை நீட்டினான். பாவம், ராம அவதாரத்தில் இலங்கைப் போரில் கஷ்டப்பட்டவைகளாயிற்றே! அவற்றிற்கும் கண்ணன் வெண்ணெயை உருட்டிப் போட் டான். பிறகு தயிர்ப்பானையில் ஓட்டை போட, அனைவரும் உறிஞ்சிக் குடித்தனர். தயிர் மணமாக, இனிப்பாக கோபி மன தைப்போல் இருந்ததால் கண்ணனும் தலையை ஆட்டி சுவாரசியமாக கையில் ஏந்தி உறிஞ்சினான். அதற்குள் கோபி திரும்பி வந்துவிட்டாள். குரங்குகளும், மற்றப் பிள்ளைகளும் ஓடிவிட்டனர். கண் ணன் மேலே இருந்ததால் உறியில் பிடித்த படி தொங்கினான். வீட்டுள் நுழைந்த ஆய்ச்சி கண்ணன் கோஷ்டியினர்



*புத்தகங்களின் தோற்றம் உள்ளத்திலிருந்து கவலைகளைப் போக்குகிறது.*

ஓடுவதையும், வீடு முழுவதும் தயிரும், வெண்ணெயுமாக சகதியாக இருப்பதையும் கண்டு விக்கித்தாள். கண்ணன் உறியில் பிடித்துக்கொண்டு தொங்குவதைக் கண்டாள். அவனுக்குப் பயம் என்றால் என்னவென்று தெரியாது.

கோபியின் கோபமான முகத்தைக் கண்டு சிரிப்பு வந்ததேயொழிய கண்ணனுக் குப் பயம் வரவில்லை. சரி, பயப்படுவதாக நடித்தால் சமாதானமடைவாளோ என்று "பயத்தை" வரும்படி மனதால் அழைக்க இவனிடம் பயந்து அது சிட்டாய்ப் பறந்து விட்டது. சரி, வருவதை எதிர்கொள்வோமென நிதானமாக மீதமிருந்த வெண்ணெயை நக்க லானான். வந்தவள் "குழந்தாய்! நீ யார்?" எனக் கேட்டாள். ஊரில் உள்ளவர்களுக்குப் பலராமரிடம் மதிப்பும் மரியாதையும், பயமும் உள்ளபடியால், பலராமனுடைய தம்பி என் றான். சரி, இங்கு உனக்கு என்ன வேலை? எங்கள் வீட்டு வெள்ளைக் கன்றுக்குட்டி யைக் காணவில்லை. தேடி வரும்படி யசோதம்மா அனுப்பினா. கன்றுக் குட்டியை உறியிலா தேடுகிறாய்? ஆமாம் உறியில் வெள்ளையாகத் தென்படவே எங்கள் வீட்டுக் கன்றுக்குட்டி என்றுதான் வந்துவிட்டேன். மேலே ஏறியபின் கன்றுக்குட்டியல்ல, வெண் ணெய் என்று தெரிந்துவிட்டதல்லவா? ஏன் வெண்ணெய்ப் பாத்திரத்தில் கையை அளைந்து கொண்டிருக்கிறாய்?

வெண்ணெய் அளைந்தான். மண்ணை அளந்தான். விண்ணையும் அளந்தான். கஷ் டப்பட்டு மேலே ஏறினேன். வெண்ணெயைப் பார்த்தபின் சாப்பிடாமலிருக்க முடியுமோ? இதற்காக வருந்தாதே கோபிமா, எங்கள் யசோதம்மா பிருந்தாவனத்தில் எல்லாம் நம் வீடு. எல்லாரும் நம்மவர் என்று கூறியபடி யால் வெண்ணெயை எடுத்து விட்டேன். இனி மேல் வரமாட்டேன் என்று கூறியபடியே உறியில் இருந்து கீழே குதித்தான். கையில் இருந்த வெண்ணெய் உருண்டையை வாயில் திணித்த வாறே. கோபி கண்ணனைப் போகவிடாமல் வாசற்படி வழியை அடைத்துக்கொண்டு நின் றாள். கண்ணன் ஜாடையால் விட்டுவிடும்படி கேட்டும் அவள் அசைவதாக இல்லை. கண் ணன் ஆபத்துக்குப் பாவமில்லை என நினைத்து தன் வாயிலிருந்த வெண்ணெயை அவள் முகத்தில் "தூ" என்று துப்பி எடுத் தான் ஓட்டம். பாவம் கோபி அவள் முகத் திலிருந்த வெண்ணெயைத் துடைக்குமுன், கண்ணன் அம்மாவின் பக்கத்தில் சாதுவாகப் போய்ச் சேர்ந்தான். அவன் தீராத விளை யாட்டுப்பிள்ளை. குறும்புக்காரக் குழந்தை. பொல்லாத விசமக்காரக் கண்ணன்.

ஸ்ரீ கிருஷ்ணன் வெண்ணெய் போன்ற உள்ளங்களைத் திருடுபவன். வெண்ணெய் உண்டதும் குடத்தைப் போட்டு உடைத்து விடுவது ஆத்மாவை ஆட்கொண்டதும் வெறும் உடல் தேவையில்லை என்பதைக் காட்டுகிறது.

அவன் குழந்தைப் பருவ லீலை களில் ஆழ்வார்கள் உருகுகிறார்கள். பாரதி யார் கண்ணனைக் காதலனாக, சேவகனாக, சின்னஞ்சிறு கிளியாக, பிள்ளைக் கனி அமு தாக, பேசும் பொற் சித்திரமாக ஆடிவரும் தேனாகக் குழந்தைப் பருவ லீலைகளைக் கற்பனையில் கண்டு களித்திருக்கிறார்.

**ஆடாது அசங்காது வாவா கண்ணா**
**ஆனந்தக் குழலூதி வாவா கண்ணா - உன்**
**ஆடலில் ஈரேழு புவனமும் அசைந்தாடுதே எனவே**
**ஆடாது அசங்காது வாவா கண்ணா**
**கண்ணா கண்ணா கண்ணா கண்ணா.**

ஆடிவரும் அழகனுக்குக் கண்பட்டுப் போனால் மனம் புண்பட்டுப் போகுமே என உருகுகிறார் கவிஞர் ஸ்ரீ நாராயணதீர்த்தர். கிருஷ்ணனின் லீலைகளை அனுபவித்து "கிருஷ்ண லீலா தரங்கிணி" எனும் அருமை யான காவியத்தை உருவாக்கியவர்

*பணத்தைத் தவிர மற்றவை யாவும் உன்னைத் திருப்திப்படுத்தும்.*

கிருஷ்ணனைப் பிரம்மமாகக் கண்டார். "பரப்பிரம்மம் அம்மா என்றழைக்க என்ன தவம் செய்தனை" பிரம்மஸ்ரீ பாபநாசம்சிவன் அவர்களும் உணர்ந்தார்கள். கிருஷ்ணன் என்று பாடாமல் "பரப்பிரம்மம்" என்கிறார். இப் பேருண்மையை கோபியர்கள் ராச லீலையில் அனுபவித்ததாக கிருஷ்ண லீலாதரங்கிணியில் தீர்த்தர் அற்புதமாக விளக்கியுள்ளார். கோபிகைகள் கண்ணனை ஒரு தெய்வமாகக் காணவில்லை. உருவவடிவாகக் காணவில்லை. பிரம்மமாகக் கண்டார்கள். கண்டார்களா? இல்லை. தன்னுள் கொண்டார்கள்.

வெண்ணெய்க்காக கட்டுண்ட எங்கள் புண்ணிய மூர்த்தியாம் கண்ணன்
பத்துடை அடியவர்க்கெளியன், பிறர்க்கு அரிய வித்தகன்
மத்துறு கடைவெண்ணெய் களவினில் உரலிடை யாப்புண்டு எத்திறம், உரலினொடு
இணைந்திருந்து ஏங்கிய எளிவே. (நம்மாழ்வார்)

கண்ணன் அவனை அன்பு செய்யும் காதல் மனமுடையோர்க்கு எளியவன். பக்தியற்ற வர்களுக்கெல்லாம் அரியவனாய் வியக்கத்தக்க குணங்கள் உடையவன், தாமரை மலரில் வீற்றிருக்கும் பெறற்கரிய எம்பெருமான் மத்தினை உறுத்தி கடையப்பெறும் வெண்ணெயை களவு செய்கையில் அன்னை யசோதாப் பிராட்டியால் இடுப்பிலே கண்ணிநுண் சிறு தாம்பினாலே கட்டுண்ணப்பண்ணி உரலினோடு ஒத்தாற் போலிருந்து ஏங்கிய எளிமைத் தன்மையைக் கொண்டவன். பரமபத நாதனாயினும் நம்மவரின் பக்திக்கு கட்டுண்ட கண்ணன் எளிமைக்கு எளிய மூர்த்தி. இதனை நம்மாழ்வார் பகவான்மீது கொண்ட மாசறு காதலால் பரத்துவத்தையும், சௌலப்பியத்தையும் எண்ணி எத்திறம் என்று 6 மாதங்கள் மோகித்து மயங்கிக் கிடந்தார்.

சின்னஞ்சிறு கண்ணன் சிங்கார வண்ணன்
திருட்டுக்களும் புரட்டுக்களும் செய்வதில் மன்னன் (சின்னஞ்)
வெண்ணெயும் பாலும் திருடித் தின்பானாம்
வெறும் சட்டியானால் போட்டுடைப் பானாம்
கண்ணன் எங்கள் கண்ணனாம் கார்மேக வண்ணனாம்
வெண்ணெய் உண்ட கண்ணனாம் மண்ணை உண்ட கண்ணனாம்.
(சின்னஞ்சிறு) (தொடரும்...

## வாசகர் உள்ளத்திலிருந்து...

பேரவை மாந்தர்க்கு,

### சந்நிதியான் ஆச்சிரமம் ஓர் அனந்த சக்தி

250ஆவது "ஞானச்சுடர்" மலர்மூலம் சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றிவரும் பணிகள்பற்றி மிகத் தெளிவாகவும் விரிவாகவும் அறியத்தந்தமைக்கு மிகுந்த நன்றிகளும், பாராட்டுக்களும்.

மோகனதாஸ் சுவாமிகள் சந்நிதி முருகன் மேற்கொண்ட அளவிலாக் காதலையும், முருகன் அடியார் மேற்கொண்ட ஜீவகாருண்யத்தையும், சமயத்தோடு கல்வியையும் மேம்படுத்த அவாவி நிற்கின்ற உள்ளக்கிடக்கையும் புலப்படுத்தி ஆச்சரியப்பட வைக்கின்றன.

சுவாமிகளின் தெய்வீக, சமய, சமுதாய பணிகளினாலும், பேரவையினராலும், பணியாளர்களினாலும், ஆதரவாளர்களினாலும் "சந்நிதியான் ஆச்சிரமம் ஓர் அனந்த சக்தி ஆகிறது".

ஆச்சிரமப் பணி தொடர சுவாமிகள் நீடூழி வாழவேண்டுமென்பதே என் பணிவு.


-சீ. சாந்தநாதன்-

*மிதமான பழக்கமும், நோன்பும் அநேக நோய்களைக் குணப்படுத்துகின்றன.*

# சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எமையாண்ட அத்தனே

## சிவ. மகாலிங்கம் ஐயா

**– திரு கே.எஸ். சிவஞானராஜா** அவர்கள் –



கற்கண்டுத் தமிழை அற்புதமாக்கி
கருதரிய மந்திரத்தைப் பொற்பதமாக்கி
சொற்கண்டு உரைப்பதில் சிற்றம்பலமாகி
சோர்விலாத் திருமுலக விற்பன்னரானார்.

சைவ சமயத்தை அருமருந்தாக்கி, சிவத்தமிழை திரு விருந்தாக்கி, தான்பெற்ற இன்பத்தினை இவ்வையகத்துக் காக்கி, வான்பற்றி நின்ற மறைப்பொருளை ஊன்பற்றுமாறு உணர்த்திய சிவத்தமிழ் வித்தகரே, குப்பிளான் சிவ மகாலிங்கம் ஆவார். சிவமும் தமிழும் ஒன்றோடொன்று இணைந்து பேறாகும்போது தேன்பாயுமாறு சிவ சாம்ராஜ்ஜியத்தினைச் சிவபூமியில் விளையச் செய்தவர். சைவ கலாசார பண்பாட்டு விழுமியங்களில் சிவசின்னங்களைப் பொலியவும் அணியவும் செய்தவர். சிவபூசைக்கும், சிவதீட்சைக்கும், சிவ தர்மத்திற்கும் முதலிடமளித்து, திருமூலரின் திருமந்திரத்தேன் கலசத்தைப் பத்திரமாகவும், பாத்திரமாகவும் உபகாரம் செய்தவர். இதன் பேறாகப் பலர் இவருக்குச் சீடராக வாய்த்தார்கள்.

"தோத்திரத்திற்குத் திருவாசகம்
சாத்திரத்திற்கு திருமந்திரம்"

என்ற மந்திரத்திற்கமைவாக சிவ மகாலிங்கம் ஐயா திருவாசகத்திலும், திருமந்திரத்திலும் மிகத் தெளிவான புலமை பெற்றிருந்த காரணத்தினால் கனடா, மலேசியா, இலண்டன் ஆகிய நாடுகளில் இவரது தொடர் பேருரைகள் காத்திரம் பெற்றிருந்தன. பதிவு செய்யப்பட்ட இவரது பேச்சுக்களால் சைவ உலகம் விழிப்படைந்தது மட்டுமல்ல, ஒவ்வொரு கிராமங்களும் களிப்படைந்தன. குப்பிளான், நீர்வேலி, அளவெட்டி, இணுவில், தொண்டைமானாறு, சாவகச்சேரி, தெல்லிப்பளை இன்னும் வன்னிப்பிராந்திய கிராமங்களும் இவரது கனிந்த வாசகங்களினால் கவரப்பட்டு ஈர்க்கப்பட்டுச் சிவ சாம்ராஜ்ஜியத்தில் திளைத்தன. இதன் பேறாக சைவ சமயம் தனது அற்புதங்களினாலும் அதிசயங்களினாலும் இனித்தது.

இவரது ஒவ்வொரு உரை, நடை, மொழி, உடல், உள்ளம், உபகாரங்களும் ஒவ்வொரு கைம்மாறினை உபகரித்தன.

| | |
|---|---|
| தமிழ் உரை - எளிமையானவை | தமிழ் நடை - இலகுவானவை |
| தமிழ் மொழி- கலப்பில்லாதது | உடல்மொழி- சிவமயமானது |
| உள்ளம் - திருமந்திரமானது | உபகாரங்கள் - பலன் கருதாதவை. |

*மனத்தூய்மையே நேர்மை, மற்றவையெல்லாம் வெறும் கூச்சல்.*

இத்தனை பெறுமதிகளையும் உள் அடக்கிய பல நூல்களை இம் மண்ணுக் காய் படைத்துள்ளார்.

திரு ச. லலீசன், திரு ஏ. அனுசாந் தன், திரு ஸ்ரீ. பிரசாந்தன் ஆகியவர்களின் ஆளுமையான பேச்சினை வைத்துக்கொண்டு அவர்களை ஆளாக்கிய அமரர் சிவ. மகா லிங்கம் அவர்களை நாம் ஆயிரமாகவும், ஆயிரமாக்கியும் பார்க்கலாம்.

விஞ்ஞான, கணித ஆசிரியராகப் பணியாற்றியபொழுதே இவரது சீவனுள் சிவம் கலந்துவிட்டது.

கொழும்புத்துறை சைவாசிரிய கலா சாலை, உரும்பராய் இந்துக் கல்லூரி, யாழ் இந்துக்கல்லூரி, பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ் பல்கலைக்கழகம், இந்து கலாசாரத் திணைக் களம் ஆகியவற்றில் பணியாற்றியதன் பேறாக, சைவ சமயத்தின் படிமங்களை அடையாளப்படுத்தினார்.

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகனோடும், சந்நிதியான் ஆச்சிரமத் தோடும் நெருங்கிய அடியவராக ஒன்றித்த இவர் "ஞானச்சுடர்" சஞ்சிகையில் ஏராள மான ஆன்மீகக் கட்டுரைகளை எழுதி உல கையே வலம் வந்தவர். பெரும் பெரும் சம்பளங்கள் எடுக்கும் பிரமுகர்கள் எல் லோரும் பேனாக்களுக்கு ஓய்வு கொடுத்து உல்லாசம் அனுபவிக்கின்ற கால கட்டத் தில், அமரர் சிவ மகாலிங்கப் பேராசான் இளைப்பாறிய பின்னரும் சைவ சமய ஆன் மீகக் கட்டுரைகளை எழுதிய பெருங் கன வானாக மிளிர்கின்றார். ஈழத்துச் சித்தர்கள் பற்றிய கட்டுரைகள் பல்கலைக்கழக மாண வர்களுக்கு மிகவும் பிரயோசனமாக இன்றும் கைகொடுக்கின்றது.

மேலும் கொழும்பு, யாழ்ப்பாண ஊடகங்களிலும், தொலைக்காட்சிகளிலும் அதிகளவில் சமயப் பணியாற்றிய சைவ சமயப் பிரசாரகர் இவராகத்தான் இருக்க முடியும். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் எதை எதையெல்லாம் ஆற்றவேண்டுமென்று விரும் பினாரோ அதையதையெல்லாம் சொல்லிலும் செயலிலும், உரையிலும், உபந்நியாசத்திலும், பயன் சொல்லுவதிலும் பஜனாவளியிலும், வழிபாட்டிலும், சிவபூசையிலும், சிவதீட்சை யிலும், சிவசின்னங்களிலும், இல்லறத்திலும் சாதித்துக் காட்டினார்.

இத்தகு பேற்றின் விளைவாக ஐந்து ஆண் மகவுகளைப் பஞ்சசீலப் புத்திரர் களாக்கி குப்பிளான் கிராம நாமம் சொல்லி வாழுமாறு இறைவன் கருணை கூர்ந்துள் ளார். இவரது பாசமிகு மனைவியார் அவர் களும் தான தரும உபகார உபதேசங் களில் வல்லவொரு பெண்மணியாகத் திகழ் கின்றார்.

கலாபூஷணம், திருமந்திர வாரிதி, சிவத்தமிழ் வித்தகர், சிவகலா ஜோதி, சிவமான்மிய பூபதி ஆகிய விருதுகளையும், முருக மந்திரம், சைவசித்தாந்தமும் ஈழத் தவர் பங்களிப்பும், திருமுறைச் செல்வம், ஞான விளக்கு, ஈழத்துச் சித்தர்கள் ஆகிய படைப்புக்களையும் ஏராளமான கட்டுரை களையும் பொக்கிஷங்களாக நாம் அனு பவிக்க முடியும். பல்கலைக்கழகங்கள் இவரது புலமையைப் பொருட்படுத்தியிருந் தால் நாடு புண்ணியம் பெற்றிருக்கும். சமய வாதிகள் இன்னுமே உருப்படியானவர் களைக் கண்டுபிடிக்க ஞானம் பெற வேண் டும். இவரது காலம் 01.03.1949 - 13.02.2019 சிவபூமியின் தவத்துக்கானதாகும்.

*ஞானத்தைப் பெற்றவர்கள் ஞானிகளின் நட்பையும் பெறுகின்றனர்.*

(தொடர்ச்சி...)

# உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன்

## (விரிவான பொருளுரையும் தெளிவுரையும்)



முனைவர் ஆ. ஆனந்தராசன்

### 91. பேசா அனுபூதி

ஓங்கு உணர்வின் உள்ளடங்கி உள்ளத்துள் இன்பு ஒடுங்கத்
தூங்குவர்; மற்று ஏதுண்டு சொல்.

**பொருள்:**

சீவன் முத்தராகிய ஞானிகள் தமது உணர்வில் மேம்பட்டு விளங்குகின்ற சிவனது ஞானமாகிய திருவருளின் உள்ளே அடங்கி நிற்பர். அங்ஙனம் அடங்கி நிற்றலால் விளைகின்ற பேரின்பம் அவர் அறிவினிடத்தே ததும்பி நிறைந்து நிற்கும். அவ்வின்பத்தையே நுகர்ந்து திளைத்து வேறொன்றையும் அறியாதிருப்பர். அந்நிலையில் அவரிடத்தில் சொல் ஏதும் ஏழாது. பேச்சற்ற மோனநிலை அது.

**சொற்பொருள்:**

(அணைந்தோர் ஆகிய ஞானிகள்) ஓங்கு- தமது உணர்வில் மேம்பட்டு விளங்குகின்ற, உணர்வின்- சிவனது ஞானமாகிய திருவருளின், உள்ளடங்கி- உள்ளே அடங்கி, இன்பு- அதனால் விளைகின்ற பேரின்பம், உள்ளத்துள் ஒடுங்க- தமது அறிவினிடத்தே ததும்பி நிற்க, தூங்குவர்- அவ்வின்பத்தை நுகர்ந்து திளைத்திருப்பர்; அது தவிர வேறொன்றை அறியார், சொல் மற்று ஏது உண்டு- அந்நிலையில் சொல் ஏதும் உண்டாகுமோ?

**விளக்கம்:**

**சிவஞானத்துள் அடங்கி நிற்றல்:**

சீவன் முத்தர்க்கு உடம்பு உள்ள வரையில், முன்னே நீங்கிய மலம் மாயை கன்மங்கள் அவரிடத்து வாசனையாய் நுழைந்து அவர் உணர்வைத் தாக்குதல் கூடும்.

மும்மலங்களுள் கன்ம மலமே முன்னர் தலையெடுக்கும். ஏனெனில் அதுவே உடம்பு இருப்பதற்குக் காரணமாய் உடம்போடு ஒட்டியிருப்பது. இங்கு கன்மம் என்பது பிராரத்த கன்மமே. அதுவே இன்ப துன்பங்களைப் பயப்பதாய் முன்னர் தோன்றி அவரது உணர்வைத் தாக்கும். அவரது உணர்வில் விருப்பு வெறுப்புக்களைத் தோற்றுவிக்கும்.

இவ்வாறு பிராரத்தத்தால் விருப்பு வெறுப்பு விளையுமாயின், எங்கும் சிவமாகக் காணுகின்ற அவர்கட்கு அக்காட்சி மறைந்து, மாயா காரியமாகிய உலகம் காட்சிப்படும். அவ்விருப்பு

*தகுதி இருந்தாலும் இல்லாவிட்டாலும் பாராட்டுதலைத் தவிர்க்காதீர்கள்.*

வெறுப்புக் காரணமாக, இன்பப் பொருள் என்றும், துன்பப் பொருள் என்றும், உறவுப் பொருள் என்றும், பகைப் பொருள் என்றும் இவ்வாறாக வேறுபடுத்தி உணரும் உணர்வை மாயாமலம் தோற்றுவிக்கும்.

அந்நிலையில், "எல்லாம் அவனே" என்னும் மெய்யுணர்வு மறைந்து, யான் எனது என்னும் தற்போத உணர்வு தலையெடுக்கும். இத் தற்போத உணர்வை ஆணவமலம் தோற்றுவிக்கும். தற்போதத்தால் நல்லதும் தீயதுமாகிய முயற்சி எழும். அம்முயற்சி பிராரத்த வினையை நுகர்தற்குத் துணையாய் நிற்கும். மேலும், அம்முயற்சியில் புதுவினையாகிய ஆகாமியம் தோன்றி அடுத்த பிறப்பிற்கு வித்தாய் விடும்.

இங்ஙனம் சீவன் முத்தர் சிறிது சோர்ந்திருந்த சமயம் பார்த்து மும்மலங்களும் மேற் கூறியவாறு நுழைந்து, அவரது உணர்வைத் தாக்கி அஞ்ஞானத்தை உண்டுபண்ணும்; பரமே பார்த்திருந்த அவரை உலகைப் பார்க்குமாறு செய்யும்.

சீவன் முத்தர் அவற்றை எங்ஙனம் நீக்கிக்கொள்ள இயலும் என்ற வினா எழுகிறது. அதற்கு விடையாகவே "ஓங்குணர்வின் உள்ளடங்கி" எனக் கூறியுள்ளார் ஆசிரியர். சீவன் முத்தர் சிவஞானமாகிய மெய்ஞ்ஞானத்துள் அழுந்தி அங்கு நிலைத்து நின்று மும்மலங்களையும் நீக்கிக்கொள்வர் என்பது விடையாகும்.

அவர் சிவஞானத்தின் உள்ளே அடங்கி நிற்றலால், பிராரத்த கன்மம் இன்ப துன்பங்களாய்த் தோன்றும்பொழுது அவைகளில் விருப்பு வெறுப்புக் கொள்ளும்போதே அவை உயிர்க்கு நுகர்ச்சியாகும். அணைந்தோர் விருப்பு வெறுப்பின்றி நிற்பதால் அவ்வின்ப துன்பங்கள் அவர்க்கு நுகர்ச்சி ஆகாது உடலளவாய்க் கழியும். இதுவே கன்ம மலத்தை நீக்குதலாகும்.

பிராரத்தத்தின் விளைவாகிய இன்ப துன்பங்களுக்குப் பற்றுக்கோடாக இருப்பவை உலகப் பொருள்கள். அப்பொருள்கள் வழியாகவே இன்ப துன்பங்கள் வந்து சேரும். சிவ ஞானத்துள் அடங்கி நிற்கும் அவர்க்கு இன்ப துன்பங்கள் நுகர்ச்சியாகாமையால், அவற்றிற்குப் பற்றுக்கோடாய் உள்ள பொருள்கள் அவர் தம் அறிவிற்குப் பொருளாய்த் தோன்றமாட்டா. அங்ஙனம் அவை தோன்றாது ஒழியச் செய்தலே மாயா மலத்தை நீக்குதலாகும்.

பிராரத்தத்தின் விளைவாகிய இன்ப துன்பங்களுக்குப் பற்றுக் கோடாய் உள்ள பொருள்கள் பொருளாய்த் தோன்றாது போகவே, அவை குறித்துச் செய்யும் முயற்சிகளில் அவர்களுக்கு யான் எனது என்னும் செருக்கு எழ மாட்டாது. சிவ ஞானத்துள் அடங்கி நின்று அச்செருக்கை எழாதபடி செய்தலே, ஆணவ மலத்தை நீக்குதலாகும்.

இங்ஙனம் சீவன் முத்தர் ஓங்குணர்வின் உள்ளடங்கி மும்மலங்களையும் களைவர் என அறியலாம்.

**தூங்காமல் தூங்குதல்:**

ஒளி குறைந்த கண்ணிற்குக் கண்ணாடியின் உதவி வேண்டும். கண்ணாடி அணிந்தால் அக் கண்ணிற்குப் பார்வை நிகழும்; கண்ணாடி இல்லாதபொழுது பார்வை நிகழாது.

ஆணவ மலத்தால் மறைக்கப்பட்ட நம்முடைய அறிவு ஒளி குறைந்த கண் போன்றது. நமக்குக் கிடைத்த மனம் முதலிய கருவிகள் கண்ணாடி போன்றவை. கண்ணாடியால் பார்வை நிகழ்வதுபோலக் கருவிகளின் உதவியால் நாம் அறிய முடிகிறது; நமக்கு நினைப்பு உண்டாகிறது. கண்ணாடி இல்லாதபொழுது பார்வை நிகழாததுபோலக் கருவிகள் செயற்படாது

*தன்னை விலையாகக் கொடுப்பவனுக்கு ஞானம் தன்னை கொடுக்கிறது.*

ஒடுங்கும்போது நாம் அறிய முடிவதில்லை; நமக்கு மறப்பு உண்டாகிறது.

நமது அறிவு ஆணவ மலத்தால் மறைக்கப்பட்டிருப்பதால் கருவிகள் செயற்படும் போது விளங்கியும், செயற்படாதபோது விளங் காமலும், இவ்வாறு நினைப்பும் மறப்புமாய் நிலைமாறிக் கொண்டேயிருக்கும்.

இனி, ஆணவ மலம் நீங்கி விட்டால் கருவிகளின் உதவி வேண்டாமற் போகின்றது. ஆணவ மலம் நீங்கிய அறிவு ஒளி குறையாத கண் போன்றது. ஒளி குறையாத கண்ணிற்குக் கண்ணாடி எதற்கு? அதற்குக் கண்ணாடி இல்லாமலே எப்பொழுதும் பார்வை நிகழும். அதுபோல ஆணவ மலம் நீங்கப்பெற்ற அறிவு எப்பொழுதும் அறிவாயே இருக்கும். அறியாமை ஆகாது. அதற்குக் கருவிகளால் ஆவதொன் றில்லை. ஞானிகளின் அறிவு இப்படிப்பட்ட அறிவு; நினைப்பும் மறப்பும் இன்றி எப்பொழு தும் ஒரே நிலையில் நிற்கின்ற அறிவு. அவர் களது அறிவில் சிவம் மறைதல் இன்றி, விளங்கியே நிற்கும்.

இதனால், ஞானிகள் எப்பொழுதும் சிவத்தை மறவாது உணர்ந்திருப்பர் என்பது விளங்கும். இந்நிலையைத் தூங்காத நிலை எனலாம். இனி, உலகத்தில் உறங்குவார் உலக நினைவை விடுத்து அல்லல் இன்றி இருப்பர். அதுபோல, ஞானிகளும் உலக வாதனையின்றி ஆனந்தத்தில் தம்மை மறந் திருப்பர். அதனால் இந்நிலையைத் தூங்குகிற நிலை என்றும் சொல்லலாம்.

இவ்வாறு, சிவத்தையே உணர்ந்து நிற்றலும், உலக வாதனையின்றி இருத்தலும் ஆகிய இரு நிலைகளும் சீவன் முத்தரிடத்தில் ஒருங்கே நிகழ்தலால் அவர் நிலையைத் "தூங் காமல் தூங்குதல்" என நூல்கள் நயம்படக் கூறும்.

இந்த ஞானத் தூக்கத்தை மேலும் சிறிது விளக்கலாம். உலகத்தில் நாம் எதனைத் தூக்கம் என்று சொல்லுகிறோம்? கருவி கரணங்கள் எல்லாம் ஓடியாடி ஓய்ந்து போய்ச் சற்றே இளைப்பாறும் நிலையையே நாம் தூக் கம் என்கிறோம். இளைப்பு நீங்கினால் அவை மீண்டும் ஓடத் தொடங்கிவிடும்.

இக் கருவி கரணங்கள் சோர்வடை யாமல் வலிமையோடு இருக்கும்போதே அவற் றின் ஓட்டத்தைத் தடுத்து மனம் அடங்கிச் செயலற்றிருப்பதே ஞானத் தூக்கம். நாம் தூங்குகிற தூக்கத்தில் கருவி கரணங்கள் ஓய்ந்துபோய் நிற்கும். ஞானிகளது தூக்கத்தில் கருவி கரணங்கள் ஒழிந்துபோய் நிற்கும்.

நம்மைப் பார்த்து ஒருவன் திட்டுகிறான் என்று வைத்துக்கொள்வோம். நாம் சும்மா இருப்போமா? பதிலுக்குத் திட்டுவோம்; பல மடங்கு திட்டுவோம். கைநீட்டி அடிக்கவும் செய்வோம். அவன் நமக்கு அஞ்சியவனாக இருந்தால், நம் கை வலிமையானது என்று தெரிந்தால், அவன் நேரே திட்டமாட்டான். ஒரு வேளை நாம் உறங்குகிற சமயம் பார்த்து நம் பக்கத்தில் வந்து நின்று ஆசைதீர நம்மைத் திட்டலாம்! அவனுக்கு அந்தத் துணிவு எப்படி ஏற்பட்டது? அவனது வசவும் திட்டும் நம் காதில் ஏறாது என்பது அவனுக் குத் தெரியும். நாம் எழுந்து சென்று அவனை அடிக்கப் போவதில்லை என்பதும் தெரியும். அதனாலேயே அவனுக்கு அந்தத் துணிவு. அந்த நேரத்தில் நமது கருவி கரணங்கள் உணராமல் இருக்கின்றன. நான் என்ற உணர்வு இல்லாமற் போகிறது.

தூங்கும்போதுதான் இப்படியிருக் கிறோம். விழித்திருக்கும்போது நம்மால் இப்படி இருக்க முடிகிறதா? விழிப்பு நிலை யில் நான் என்பது இல்லாமல் இருக்க முடி கிறதா? மனம் முதலியவை ஒழிந்து நிற்க முடிகிறதா? விழித்துக்கொண்டிருக்கும் போதும் இந்நிலை வருமானால், அதுதான் உண்மையான தூக்கம்; தூங்காத் தூக்கம்.

பக்குவப்பட்ட இருதயமே ஞானத்தின் தோட்டம்.

ஆசிரியர் உமாபதிசிவம் இந்நிலையில் நிற்பவரை "உள்ளத்துள் இன்பொடுங்கத் தூங்குவர்" என இங்கு குறிப்பிட்டார். தமது சிவப்பிரகாச நூலிலும். "ஓங்குணர் வகத்து அடங்கி உள்ளத்துள் இன்பு ஒடுங்க நேரே தூங்குவர்" (செ.93) எனக் குறித்துள்ளமை காணலாம்.

**மோன நிலை:**

சீவன் முத்தர் சிவானந்தத்தை நுகர்ந்து அந்த நுகர்ச்சியில் தம்மையும் மறந்திருப்பார்கள். இன்பத்துள் ஆழ்ந்திருக்கும் அவருக்கு எந்த நினைவும் எழுவதில்லை. நினைவு எழும்போதே அதன் வழியாகச் சொல் எழுவதாகும். நினைவு அற்ற நிலையில் சொல் எப்படி எழும்? அவர்கள் மோன நிலையில் இருப்பார்கள் என்பதனை ஆசிரியர் இங்கே குறிக்கின்றார். இன்பத்தில் திளைத்திருத்தலைத் தவிர வேறொன்றை அறியாத அவர்க்குச் சொல் ஏதும் உண்டாகுமோ? என்பாராய், "மற்று ஏதுண்டு சொல்" என்கிறார்.

மோனம் என்பது அனுபவத்திற்கு அறிகுறி. இன்ப அனுபவம் தலைப்படும்போது மோனம் தலைப்படும்.

கணவன் வெளியூருக்குச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. மனைவி கண் கலங்கி நின்றாள். அவன் புறப்படும்போது ஒரு வாரத்தில் உறுதியாக வந்துவிடுவதாக வாக்குறுதியளித்தான். அவர் இல்லாமல் இந்த ஏழு நாட்களை எப்படிக் கழிப்பது என்று கவலைப்பட்டாள் அவள். "மறக்காமல் கடிதம் போடுங்கள்" என்று சொல்லி விடை கொடுத்தாள்.

அவன் சென்று இரண்டு நாளாயின; மூன்று நாளாயின. கடிதம் ஒன்றும் வரவில்லை. அவளுக்கு ஒவ்வொரு கணமும் ஓர் ஊழியாகத் தோன்றியது. ஒரு வாரமாகியும் அவன் ஊர் திரும்பவில்லை. அவளுக்கு அடங்காத கோபம் உண்டாயிற்று. "ஆண்களே இப்படித்தான். சொன்னால் சொன்னபடி நடப்பதில்லை. கடிதம் கூடப் போட முடியாமல் அப்படி என்ன வேலை? நான் ஒருத்தி தனியாக இருக்கிறேன் என்ற கவலை துளியாவது அவருக்கு இருந்தால் இப்படிச் செய்வாரா? அவர் வந்தால் அவரைச் சும்மா விடப்போவது இல்லை" என்று அடுத்த வீட்டுத் தோழியிடம் சினந்து கூறினாள்.

"நீ என்ன செய்து விடுவாய்" என்று வேடிக்கையாகக் கேட்டாள் அந்தத் தோழி. "என்ன பண்ணுகிறேன் என்பதை நீயே நேராகப் பார்க்கத்தான் போகிறாய்" என்றாள் தலைவி.

பத்து நாளுக்குப் பிறகு தலைவன் வீடு திரும்பினான். சற்றுத் தொலைவில் அவன் வரும்போதே தலைவியின் அகமும் முகமும் மலர்ந்தன; வெட்கமும் மகிழ்ச்சியும் களிப்பும் அவளைக் கவ்விக் கொண்டன. அவன்மீது கொண்டிருந்த கோபமெல்லாம் போன திசை தெரியவில்லை. இனிய முறுவலால் அவனை வரவேற்றாள். ஏதும் பேசாமல் அவனுக்குத் தேநீர் கொண்டுவர உள்ளே சென்றாள்.

பெரிய அமர்க்களம் நடக்கப்போகிறது என்று எண்ணிய அடுத்த வீட்டுத் தோழிக்குப் பெரிய ஏமாற்றம். இத்தனை நாளும் கணவனை ஏசியும், அவனது குறைகளைப் பேசியும் வந்த இவளுக்கு இப்பொழுது என்ன ஆயிற்று? கடிந்து ஒரு வார்த்தை பேசாது வாய்மூடி மௌனமாக இருக்கிறாளே, இது என்ன விந்தை!

இதுபற்றித் தலைவியிடமே கேட்டுவிட்டாள். தலைவி பின்வருமாறு கூறினாள். கண்ணுக்கு மையிடுகிற கோல் தந்தத்தினாலோ, தங்கத்தினாலோ, செய்ததாயிருக்கும். தூரத்தில் இருக்கும்பொழுது அது தந்தமா, தங்கமா என்பது நன்றாகத் தெரிகிறது. மை தீட்டுவதற்கு அதனைக் கண்ணருகில் கொண்டு சென்றால் அந்தக் கோல் தெரிவதில்லை. அதுபோலக் கணவன் அருகில் இல்லாதபோது

அவன்மீது ஆயிரம் குறைகள் தெரிந்தன. அவன் அருகில் வந்துவிட்டால் ஒரு குறையும் புலப்படுவதில்லை.

ஆம். அவள் சொன்னது உண்மைதான். தலைவன் அருகில் வந்துவிட்டால் பேச்சு அடங்கிப் போகிறது. எதுவும் சொல்லத் தோன்றுவதில்லை.

இந்த உலக அனுபவத்தைக்கொண்டு இறையனுபவத்தை நாம் ஒருவாறு உணரலாம். இறைவனை அணைந்தவர்கள் அத் தலைவியைப்போல் மோன நிலையை அடைந்து விடுவார்கள். மோனம் என்றால் வாய் திறந்து பேசாமை என்று மட்டும் நினைக்கிறோம். அப்படியன்று. உண்மையில் அது, சீவன் சிவத்தில் அழுந்தித் தனது சீவ போதத்தை இழந்து நிற்கும் நிலையைக் குறிப்பதாகும். இப் பேசா அனுபூதி நிலையைப் பெற்றவரே அணைந்தோர்.

**நாயோட்டு மந்திரம்:**

திருவைந்தெழுத்து இறுதியில் ஓரேழுத்தேயாகி விடுவது சிவத்தை அணைந்தோர் ஆனந்தத்தில் மூழ்கி மோன நிலையைத் தலைப்படுதலைக் குறிப்பதாகும். சிகாரம் ஆகிய இந்த ஒரெழுத்து மந்திரம் நாயோட்டு மந்திரம் என நகை விளையுமாறு மறைத்துக் கூறப்படும். இது நாயை ஓட்டுவது அன்று! நாயின் தன்மையை ஓட்டுவது என்று பொருள்படும். நாயின் தன்மையாவது எப்பொழுதும் குரைப்பது. ஞான நெறியில் நில்லாது பேசும் பேச்செல்லாம் நாயின் குரைப்பைப் போன்றவை. அப்படிப்பட்ட பேச்சாகிய குரைப்பினை ஓட்டுகிற மந்திரம் இது. பேச்சை ஒழித்து மௌனத்தை உண்டாக்குவது என்ற பொருளில் இதனை "நாயோட்டு மந்திரம்" என்றனர்.

## 92. வேறொன்றையும் விரும்பாமை

ஐந்தொழிலும் காரணர்கள் ஆம் தொழிலும் போகம் நுகர்
வெந்தொழிலும் மேவார் மிக.

**பொருள்:**

படைத்தல் முதலிய ஐந்தொழில்கள் சிவனுக்கு உரியவை. அவனைப் போலத் தாமும் ஐந்தொழில் செய்தல் வேண்டும் என்ற விருப்பம் சிவனை அணைந்தோர்க்குச் சிறிதும் ஏற்படுவதில்லை.

காரணக் கடவுளர் என்போர் சிவனது ஆணையைப் பெற்றுப் படைத்தல் முதலிய தொழில்களுக்குத் தலைவராய் நின்று செய்வர். அவர்களின் நிலையைத் தாமும் பெறவேண்டும் என்ற விருப்பமும் சிவனை அணைந்தோர்க்குச் சிறிதும் உண்டாதல் இல்லை.

உலக போகங்களை நுகர வேண்டும் என்ற விருப்பமும் அவர்களுக்குச் சிறிதும் நிகழ்வதில்லை.

**சொற்பொருள்:**

ஐந்தொழிலும்- சிவனைப்போலவே தாமும் ஐந்தொழில் செய்தலையும், காரணர்கள் ஆம் தொழிலும்- சிவனது ஆணையைப் பெற்று அவற்றுள் ஒவ்வொரு தொழிற்கு முதல்வராய் நின்று செய்தலையும், போகம் நுகர் வெந்தொழிலும்- முன்னை வினையின் பயனாக வருகின்ற

உலக போகங்களை விருப்பு வெறுப்புடன் அனுபவிக்கின்ற கொடிய செயலைச் செய்தலையும், மிக மேவார்- சிவனை அணைந்தோர் சிறிதும் விரும்பார்.

**விளக்கம்:**

சிவசமவாத சைவர் என்பவரை முன்னே நாம் அறிந்துள்ளோம். முத்தியில் ஆன்மா சிவனது எண் குணங்களையும் பெற்றுச் சிவனோடு ஒப்ப நின்று, அவனது ஐந்தொழில்களையும் செய்யும் என்பது அவர் கொள்கை. சித்தாந்த சைவம் இதனை ஏற்பதில்லை. உயிர் எக்காலத்திலும் சிவனுக்குச் சமமாக முடியாது. உயிரினது அறிவு நிலை வேறு. சிவத்தின் அறிவு நிலை வேறு. உயிர் வேறொரு துணை அறிவிக்கவே அறிவது; ஒரு நேரத்தில் ஒன்றையே அறிவது. இவ்வாறு அறிவிக்க அறிதலும், ஒவ்வொன்றாய் அறிதலும் உயிரின் சிறப்புத் தன்மையாகும். இதுபோலன்றித் தானே அறிதலும், எல்லாவற்றையும் ஒருங்கே அறிதலும் முதலியவை சிவத்தின் சிறப்புத் தன்மையாகும்.

ஒரு பொருளின் சிறப்புத் தன்மை என்றும் மாறாது. ஒரு பொருளுக்குரிய சிறப்புத் தன்மையை மற்றொரு பொருள் பெறுதல் என்பதும் எக்காலத்திலும் நடவாது. ஆகவே, முத்தி நிலையில் உயிர் சிவத்தினது சிறப்புத் தன்மையைப் பெற்று ஐந்தொழில் செய்யும் எனல் பொருந்தாது.

இச்சிறப்புத் தன்மைகளினால் சிவம் என்றும் தலைமைப் பொருளாய் நிற்கும்; உயிர் என்றும் அதற்கு அடிமையாய் நிற்கும் என்பது விளங்கும்.

சிவபெருமான் படைத்தல் முதலிய ஐந்தொழில்களுக்கும் உரியன்; உயிர் சிவானுபவத்தைப் பெற்று நுகர்வதற்கு மட்டும் உரிமையுடையது என்பதனை வலியுறுத்தி,

"உம்பர் பிரான் உற்பத்தி ஆதிகளுக்கு உரியன்;
உயிர் தானும் சிவானுபவம் ஒன்றினுக்கும்
உரித்தே" என்று சிவஞான சித்தி கூறியிருத்தல் காணலாம்.

எனவே, சிவனை அணைந்தோர் சிவானந்தத்தில் மூழ்கியிருத்தலைத் தவிர ஐந்தொழில் செய்தல் போன்றவற்றைச் சிறிதும் விரும்பார் என அறியலாம்.

காரணக் கடவுளர் என்போர், விஞ்ஞானகலருள் பக்குவம் பெற்றுச் சிவஞானம் பெற்றவர்கள்; சுத்த மாயையில் தோன்றிய உலகங்களில் புவனபதிகளாய் இருப்பவர்கள். அனந்த தேவர், மந்திர மகேசுரர், அணு சதாசிவர் என்போர் அத்தகைய தலைவர்கள். மலம் நீங்கப் பெற்றவராயினும் மல வாசனை நீங்காமையால் அதிகாரத்திலும், போகத்திலும் சிறிது இச்சை உடையவராய் இருப்பர். இவர்கள் சிவபெருமானது ஆணையைப் பெற்றுத் தத்தம் அதிகார எல்லைக்கு உட்பட்டு வாழும் ஆன்மாக்களிடத்தில் படைத்தல் முதலிய தொழில்களைச் செய்வர். இவர்களெல்லாம் தாங்கள் செய்த புண்ணிய மிகுதியால் இப் பதவிகளைப் பெற்றவர்கள். கடவுளர் என்ற பெயரைப் பெறினும் இவர்களும் உயிர்க்கூட்டத்தைச் சேர்ந்தவரே என்பதை மறத்தல் கூடாது. இவர்களிடத்து நின்று அவ்வச் செயலைச் செய்வது சிவபிரானது அதிகார சக்தியே ஆகும். ஆதலால் உண்மையில் எல்லாவற்றையும் செய்பவன் சிவனே என்பதும், எல்லாச் செயல்களும் சிவன் செயல்களே என்பதும் இங்கு உணர்தற்குரியன.

சிவஞானிகள் மற்று எதிலும் பற்று இல்லாதவர் ஆதலால் காரணக் கடவுளராய் விளங்கும் நிலையையும் அவர்கள் விரும்பமாட்டார்கள்.

*வெற்றியின் அடிப்படை எடுத்த செயலில் நிலையாக நிற்பதே.*

ஒரு விருந்திற்குச் செல்கிறோம். இலையில் சிலேபி வைக்கிறார்கள். அதன் தித்திப்பில் நாக்குத் திளைக்கிறது. மேலும் ஒன்று கேட்டு வாங்கி உண்ணுகிறோம். அதற்குப் பிறகு சேமியா பாயசம் வருகிறது. அதுவும் இனிமையானதுதான். ஆனாலும், முதலில் மிக இனிமையான சிலேபியை உண்ட பிற்பாடு பாயசம் சுவையாக இருப்பதில்லை. அதனால் மீண்டும் பாயசம் கொண்டுவந்தால் அதனை வேண்டாம் என்கிறோம். அற்பமான உணவிலேயே ஒன்று மிக இனியதானால் மற்றொன்று சுவையிழந்து விடுவதைப் பார்க்கிறோம்.

அப்படியிருக்க அளப்பரிய சிவ போகத்தைத் துய்த்த ஞானிகளுக்கு உலக போகம் கைத்துப் போவதில் என்ன வியப்பு! ஆகவே போகம் நுகர் வெந்தொழிலையும் அவர் சிறிதும் விரும்பார்.

உலக போகம் என்பது விருப்பு வெறுப்போடு நுகரப்படுவது. அவ்விருப்பு வெறுப்புக்கள் புதுவினையாகிய ஆகாமியத்தைத் தோற்றுவிக்கும். ஆகாமியம் அடுத்தபிறவிக்கு வித்தாகும். இவ்வாறு உலக போகத்தை நுகர நுகர, அதனால் விளையும், வினை காரணமாகப் பிறவியும் தோன்றுமாதலின் உலக போகத்தை அனுபவித்தலை "வெந்தொழில்" எனக் குறிப்பிட்டார் ஆசிரியர்.

எல்லையின்றிப் பெருகுகிற சிவானந்த வெள்ளத்தில் திளைத்த பெருமக்கள் வேறொன்றையும் விரும்பார் என்பது இதனால் விளங்கும்.

"கொள்ளேன் புரந்தரன் மால் அயன் வாழ்வு"

(திருவாசகம்)

"போகம் வேண்டி வேண்டிலேன் புரந்தராதி இன்பமும்"

(திருவாசகம்)

"வேண்டேன் புகழ் வேண்டேன் செல்வம்
வேண்டேன் மண்ணும் விண்ணும்"

(திருவாசகம்)

"கொன்றைத் தொங்க லான் அடியவர்க்குச்
சுவர்க்கங்கள் பொருளலவே"

(சம்பந்தர் தேவாரம்)

என்பன போன்ற திருமொழிகளை அடியொற்றியே ஆசிரியர் இச் செய்யுளை அமைத்துக் கொண்டார் எனலாம். (தொடரும்...

## குருபூஜை தினங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| ஏப்ரல் | 02 | பங் 19 | செவ்வாய் | பரமகுருசுவாமி |
| ஏப்ரல் | 04 | பங் 21 | வியாழன் | குழந்தைவேற்சுவாமி |
| ஏப்ரல் | 06 | பங் 23 | சனி | செல்லப்பாசுவாமி |
| ஏப்ரல் | 12 | பங் 29 | வெள்ளி | முருகேசு சுவாமிகள் |
| ஏப்ரல் | 29 | சித் 16 | திங்கள் | திருநாவுக்கரசர் |
| மே | 05 | சித் 22 | ஞாயிறு | சிறுத்தொண்டர் |
| மே | 07 | சித் 24 | செவ்வாய் | மங்கையற்கரசியார் |
| மே | 21 | வை 07 | செவ்வாய் | திருஞானசம்பந்தர், திருநீலகண்ட யாழ்ப்பாணர் |

*நேர்வழியில் அடைய முடியாததை ஒருநாளும் தவறான வழியில் அடையமுடியாது.*

# அறத்தின் மகிமை

– திரு பூ.க. இராசரத்தினம் அவர்கள் –

பண்பின் அடிப்படையிலே எழுந்தோங்கும் இனிய மகிமை அறம். இயற்கையின் இனிய விதியிலே எள்ளளவும் வழுவாது வாழும் நெறியே அறம். மேலும் அறம் பற்றிய விரிவான விளக்கத்தைப் பெறுவதற்கு திருவள்ளுவரை நாடுவது பொருத்தமாகும்.

**"மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்..."**

குறள் 34

**"அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் நான்கும்**
**இழுக்கா வியன்றது அறம்"**

குறள் 35

மனதாலும் குற்றம் புரியாதவன் தருமத்தின் சீடராகிறான். ஒருவனுக்குப் பொறாமை, கோபம், காமம், கடும் சொற்கள் ஆகிய நான்கும் தவிர்க்கப்பட வேண்டும். வள்ளுவர் தரும் விளக்கத்தையும் கருத்தில் கொள்வது பொருத்தமாகும்.

**"அறத்தாறிது வென வேண்டா சிவிகை**
**பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை"**

குறள் 37

அறம் செய்தவன், அதன் பயனாக சிவிகையில் (பல்லக்கில்) நிம்மதியாக ஏறிச் செல்கின்றான். அறம் செய்யாதவன் சிவிகையைச் சுமந்து செல்கிறான். சிவிகையில் ஏறிச் செல்பவனிடத்திலும் சுமந்து செல்பவன் இடத்திலும் அறத்தின் பயனைக் கண்ணால் கண்டுகொள்ளலாம். இது அறம் தந்த பயன் பற்றி பலரின் பாராட்டைப் பெற்ற பரிமேலழகர் கொடுத்த விளக்கமாகும். மேலும் பொதுவான ஒரு விளக்கமும் பொருத்தமாகும்.

நாம் நடந்து செல்லும் இடங்களில் எமது அடிச்சுவடுகள் தோன்றி ஒரு பாதை ஏற்படுகிறது. அப்பாதை நாம் நடந்த பின் ஏற்பட்டது. இதேபோன்று அறத்தின் வழியும் அறத்துக்கு கால்கள் இல்லாவிடினும் அது சென்ற அடிச்சுவட்டைக் காண முடியும். எனவே அறம் சென்ற இடமெல்லாம் அதன் பயனையும் காணலாம். அறத்தின் பயன் அதைத் தொடர்ந்தே செல்வதாகும்.

இன்றைய உலகம் ஒரு பூகோளக் கிராமமாகும். ஆகவே பற்பல பிரச்சினைகள் தோன்றுவது தவிர்க்க முடியாது. பல பரிமாண ரீதியில் "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற முதுமொழிக்கு அமைய வாழ வேண்டிய தேவை முன் எப்பொழுதும் இல்லாத அளவிற்கு தேவையாகும். அறம் உலகிற்கு பொதுவானது. சாதி, இன, மொழி, நிறம், மதம், கலை, கலாசாரம் முதலிய கட்டுப்பாடுகளிலிருந்து நீங்கிப் பரந்த விரிந்த மனப்பாங்குடனும் ஆதிக்க சுயநல வெறியற்ற அன்பு நிறைந்த உள்ளத்தோடும் வானத்தே

*பிறரை விமர்சிக்கும் ஒருவன், தன் குறைகளை வெளிப்படுத்துகின்றான்.*

திரியும் வானம்பாடிபோல் கூட்டுறவு, நாட்டு உறவு என்ற தாரக மந்திரத்துக்கு அமைய வாழ்வை மேற்கொள்ள அறம், ஆதரவு என்ற அழியா வரத்தையும் வழங்கிய வண்ணம் இருக்கும் என்பது யதார்த்தமாகும். அறத்தின் மகிமையை உணராது கொடூரமான, நேர்மையற்ற, அழிவுகரமான செயல்களைப் புரிபவர்கள் வாழும் பொழுதே துன்பங்களை அனுபவிக்க வேண்டி நேரிடும் என்பதை பலரும் உணரத் தொடங்கியுள்ளார்கள். தமது பிற்சந்ததிக்கு விட்டுச் செல்லும் விரும்பத்தகாத தேட்டம் என்பதை தெளிவாக விளங்கத் தொடங்கியுள்ளார்கள். பொருத்த மற்றவர்கள், கருணையான உள்ளம் இல்லாதவர்கள், பொறுப்பற்ற முறையில் செயற்படுபவர்களைச் சமூகம் அங்கீகரிப்பதனால் அபிவிருத்தி வேலைகள் ஸ்தம்பிதம் அடைந்து வருகின்றன. அறத்தின் மகிமையை புனிதத் தன்மையை தனிநிகர் அற்ற சக்தியை பலரும் உணரத் தொடங்கியுள்ளார்கள். அறம் என்னும் மொழியை செவிடனால் கேட்கக் கூடியதாகவும் குருடனால் வாசிக்கக் கூடியதாகவும் அமைய வேண்டும். அறம் அற்ற செயற்பாடுகள் பற்றி ஆங்கில நாடக ஆசிரியர் சேக்ஸ்பியர் வெனிஸ்வர்த்தகன் என்ற நாடகத்தில் சைலாக் என்ற கதாபாத்திரம் மூலம் அறமும் நீதியும் இன்றியமையாத பண்புகள் என்பதை நன்கு விளக்கியமையால் இன்று அநீதியான செயலுக்கு "சைலொக்கின் நீதி" என்ற மரபு பிரபல்யம் அடைந்துள்ளது.

விவிலிய நூல் தரும் விளக்கத்தையும் கவனத்தில் கொள்வது நன்று. "உண்மை, நம்பிக்கை, அறம் என்ற முப்பெரும் பண்பாக்களில், மிகமிகச் சிறந்தது அறம் ஒன்றே" புதிய ஏற்பாடு சங்க காலத்துக்கு முன்னும் பின்னும் நம்முன்னோர் அறத்தின் மகிமையை நன்கு உணர்ந்திருந்தனர். அரசன் அறத்தைக் கடைப்பிடித்து நல்லாட்சி புரிந்து வந்துள்ளான். நீதியான முறையில் வரிகள் அறிவிடப்பட்டதாகவும் செலவுகள் இடம்பெற்றதாகவும் இலக்கியம் கூறுகின்றது. அறம் அற்ற செயல் மருந்துக்குப் பயன்படும் மரத்தை வெட்டுவது போலாகும் என விளக்கி உள்ளார்கள்.

அறமும் கல்வி அறிவும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. குறிப்பாக இன்றைய சனநாயக ஆட்சியில் கல்வி அறிவு இல்லாவிட்டால் அறம் தழுவிய சட்ட ஆட்சியை ஏற்படுத்த முடியாது. ஒருமுறை ஒருவர் வேலை தேடி ஒரு நிறுவனத்துக்குச் சென்றபொழுது அவருடைய தராதரத்துக்கு வேலை இல்லையென்றும் தேவைப்படின் அமைச்சர் பதவிக்கு விண்ணப்பிக்கும்படி ஆலோசனை வழங்கப்பட்டது ஏனெனின் அமைச்சர் பதவிக்கு அதிக தராதரம் தேவை இல்லை.

ஔவையார் அறத்தின் பெருமையைத் தேவையை மூன்று சொற்களில் தாராள மனப்பாங்குடன் விளக்கியுள்ளார். "அறம் செய்ய விரும்பு." இங்கு கட்டாயம் தொனிக்கவில்லை. இலக்கியம் தரும் உதாரணத்தை குறிப்பிடுவது பொருத்தமாகும். மருத்துவம் புரிவோரின் அற மனப்பாங்கைப் பற்றி நற்றங்கொன்றார் கொடுத்த விளக்கத்தை சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

"பிணியாளர் விரும்பியவைகளை எல்லாம் மருத்துவன் கொடான். அவன் தனது விசாரணை, பரிசோதனைமூலம் நோயைக் கண்டு மருந்துக்களை அறவழி நின்று கொடுப்பான்" நன்மை வெல்லும், தீமை தோற்கும் போன்ற அறம் சார்ந்த நெறிகளை நிறைவாகக் கொண்டது தமிழ் மொழி. "அறிவினிலே தெளிவு, நெஞ்சினிலே உறுதி அறத்தினிலே அன்பினோர் வெள்ளம், பேரருள் நெறியிலே நாட்டம்" பாரதி மக்கள்

தேசாபிமானிகளாக இருந்து அறம்புரிவது நன்று. "இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன" என்ற கொள்கையைக் கடைப்பிடிக்காது "எமது நாடு, தாய் நாடு" என்ற பொதுமையான நல்ல இலட்சியத்தோடு பிரஜைகள் வாழ்வதால் அறம் மேலோங்கும்.

அறச் சிந்தனையுடைய ஆங்கில கவிஞன் சேர் உவால்ரர் ஸ்கொட்டின் கவிதையிலிருந்து இரண்டு வரிகள் :

"யார் ஒருவன், இது எங்களது நாடு, எல்லோருக்கும் உரிய நாடு" என்று சொல்லத் தவறுபவன், சுவாசித்துக் கொண்டு திரியும் ஒரு நடமாடும் பிணம்" இங்கு அறத்தின் வலிமை பற்றி விளக்கப்பட்டுள்ளது.

எனவே ஆட்சி புரிபவர்களும், பிரசைகளும் சட்ட ஆட்சிக்கு மதிப்பு கொடுத்து வாழ்ந்தால் அவர்கள் நோயைக் குணப்படுத்துபவர்கள் எனலாம். எங்கள் இதயக் கதவை நாம் பூட்டாமல் உள்ளே இருந்து தாழ்ப்பாள் போடாமல் அறத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

மேகங்கள் பெரியவையாக இருந்தாலும் சூரியனை அடியோடு மறைக்க முடியாது. நற்சிந்தனையை அறத்தை தருமத்தை மறைக்க முடியாது" ஒவ்வொருவரும் மானுடப்பிறவியின் உன்னதமான இலட்சியங்களைப் பின்பற்ற வேண்டும். மற்றவருடைய வேதனை நிறைந்த அறைகூவலைக் கேட்கவும் அறச் செயல்களில் ஈடுபடவும் எல்லோரும் தயாராக இருக்க வேண்டும். அறவழியைக் கடைப்பிடிக்காது ஏமாற்றுபவன் ஏமாந்தே தீருவான்.

எனது நண்பன் கூறிய உண்மைச் சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகின்றேன். பல வருடங்கட்கு முன்பு நடந்த சம்பவம். சாவகச்சேரியிலிருந்து மானிப்பாய்வரை ஒரு பஸ்வண்டி வடகோவை ஊடாகச் சென்று மக்களுக்கு பயனுடையதாக அமைந்தது. ஒரு நாள் சாரதி வடகோவையில் பஸ் வண்டியை நிறுத்தி சேவையைத் துண்டித்து உள்ளார். உரும்பராயில் வசித்த சாரதியின் மனைவி தன் பிள்ளையை மானிப்பாய் மருத்துவசாலைக்கு அவசர சிகிச்சைக்கு கொண்டு செல்ல முடியவில்லை. கார் ஒன்றை வாடகைக்கு ஒழுங்குபடுத்தி அதிக பணத்தைச் செலவழித்தார். அன்று பிற்பகல் சாரதி மேலதிக வேலை நேரத்துக்கு கிடைத்த சொற்ப பணத்துடன் வீட்டுக்குச் சென்று நடைபெற்றதை அறிந்து கவலை அடைந்தார். அறத்தின் மகிமையை உணர்ந்து வேதனைக்கு மேல் வேதனை அடைந்தார். எல்லோருக்கும் இது ஒரு பாடமாக அமைய வேண்டும் என ஆண்டவனிடம் வேண்டிக் கொண்டார்.

## துயர் பகிர்கின்றோம்

தனது அரச சேவைக் காலத்திலிருந்தே சந்நிதியான் ஆச்சிரமத்தோடு நீண்டகாலத் தொடர்புடையவரும், "ஞானச்சுடர்" வெளியீட்டு வேளையில் வருடம் ஒருமுறை வெளியீட்டுரை நிகழ்த்துபவருமான திரு சி. சிவபாலசிங்கம் அவர்களின் மனைவியார் திருமதி வசந்தகுமாரி சிவபாலசிங்கம் 27.03.2019இல் காலமானார்.

அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் திரு சி. சிவபாலசிங்கம் அவர்கள் மற்றும் குடும்பத்தார் அனைவரதும் துயரினில் நாம் பங்குகொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா இறைவன் திருவடியில் இளைப்பாறப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*சிறு துணிவு இல்லாததால் உலகில் பல திறமைகள் சிதறிப்போகின்றன.*

# வழித்துணை 21

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 குடிகெடுக்கும் தொழிலொன்றை கூடவே செய்துகொண்டு
அடிவயிற்றைப் பலபேற்கும் எரித்துநாம் உயர்வதிலும்
படியேறிப் பலவீட்டில் பிடியரிசி தான்வாங்கிக்
குடித்தாலும் கஞ்சியது குவலயத்தில் உயர்ந்ததுவாம்.

02 சாதியென்பார் சமயமென்பார் கோடியென்பார் குபேரனென்பார்
கூறிவிட்டால் அவர்க்கேதும் கொம்புதான் முளைப்பதுண்டோ
வீதி பெருக்கினாலும் வீட்டமுக்கை எடுத்தாலும்
நீதி நெறிநடந்தால் அவர் வாழ்க்கைக்கோர் வழித்துணைதான்.

03 அக்கறை இல்லையென்றால் ஓர் கருமம் பெரிதாகும்
அக்கறைதான் உண்டென்றால் அதேகருமம் சிறிதாகும்
பக்கத்து அறைகூடப் பாசமின்றேல் தூரம்தான்
எத்திக்கில் இருந்தாலும் தித்திப்பின் பக்கம்தான்.

04 ஒருதவிகேட்டு அவர் செய்யாமல் விட்டதனால்
பாருக்குள் அவரைநீர் பகைவராக்கிக் கொள்ளாதீர்
பேருதவி ஒன்றினையும் பின் அவரே செய்திடுவார்
யாருதவி உமக்கென்று பரிந்துவந்து நன்றே.

05 காரணம் ஒன்றுசொல்லி வேறுகாரியம் செய்பவர்கள்
பாரதனில் உயர்ந்தோராய் பார்வைக்குத் தெரிவதுண்டு
மார்பதனைத் திறந்து அவர் மனத்தினைநாம் அறிந்தால்தான்
கூர்மையதாய்த் தன்னலமே அவர்குறிகோளாய்த் துலங்கும்.

06 பாலோடு இளநீரும் பஞ்சா அமிர்தங்களும்
வேலோனும் இறையோரும் படைத்தவைகள் ஆகும்
மாலோனின் மருகோற்கு அவைகொடுத்து மகிழ்வதிலும்
சாலோடு சமயத்து நெறி நடத்தல் மேலாம்.

*வறுமை இனிய பண்புக்குச் சோதனைக் கருவி.*

07 உருவத்தால் இறைவனைநீர் உண்மையென்று நம்பிவிட்டால்
அருவத்தால் வந்தவனே அருகினிலே இருந்திடுவான்
அருவத்தால் வந்திறைவன் அருகுள்ளான் என்றுணர்ந்தால்
திருவருளால் உம்முள்ளோர் கருவாக அவனெழுவான்.


08 இறைக்க இறைக்க நீரூறும் தன்மையைப்போல்
நினைக்க நினைக்க நீண்டுவரும் பக்தியினால்
மறைக்கின்ற மாயைத் திரைநீக்கி நீரெழுந்தால்
நினைக்கவே முடியாத நீடின்பம் அவனருள்வான்.

09 பிறர்துயரை நம்துயராய் எண்ணிடும் பண்பும்
நம்மகிழ்வை பிறர்மகிழ்வாய் ஆக்கிடும் தன்மையும்
உறவுகளாய் உலகோரை ஒன்றாய் இணைத்தே
இறவாமல் மானிடத்தை மலரவைக்கும் நன்றே.

10 திறமைகட்கு பாராட்டை உடன்பெற விரும்புவர்
தவறினிற்கும் உடனேயே வருத்தம் சொல்லவேண்டும்
தவறொன்றை ஏற்பதற்கு தாமதம்நீர் காட்டும்வரை
திறமைகட்கும் காரணம் தவறென்றுதான் பிறர்நினைப்பர்.

## துயர் பகிர்கின்றோம்

நெல்லியடியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் கணபதிப்பிள்ளை நவரத்தினம் அவர்கள் 08.03.2019 வெள்ளியன்று இறைவனடி சேர்ந்தார்.



அன்னார் "ஞானச்சுடர்" வெளியீட்டு வேளையில் மதிப்பீட்டுரை நிகழ்த்துவதுடன், சந்நிதியான் ஆச்சிரமத்திற்கு தன்னாலான ஒத்துழைப்பினை நல்கி வந்தவர் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

*உற்சாகம் உள்ளவனை எந்த எதிர்ப்பாலும் தடைசெய்துவிட முடியாது.*

# சைவ தமிழ் கலை பண்பாட்டை வளர்த்தெடுத்தல்

— திரு க. நல்லையா அவர்கள் —

எமது இலங்கையில் சைவசமயம் எப்போது வந்ததென்பது தெரியாது. அத்தோடு சைவம் வந்திருந்தால் தமிழும் வந்திருக்க வேண்டும். இதன் காலமும் தெரியாது. இதன் தொன்மையும் தெரியாது. முடிவும் தெரியாது. இராவணன் வாழ்ந்த காலத்திலும் இது இருந்திருக்கிறது. இலங்கையில் நடந்த மேலைத்தேச ஆக்கிரமிப்பென்றாலும் சரி, தற்போதைய சூழல் என்றாலும் சரி வாழையை வெட்ட வெட்டத் தழைக்கின்ற மாதிரி எமது சைவ சமயமும், தமிழும் கலை பண்பாடும் சரி தழைத்துக் கொண்டே இருக்கின்றது. இனிமேலும் இருக்கும். இதற்கு எந்தப் பங்கமும் இருக்காது. உலகம் இருக்கும் மட்டும் சைவமும் தமிழும் அழிவில்லாது இருந்துகொண்டே இருக்கும்.

இந்தச் சமயமும், தமிழும் ஒரு காலத்தில் உலகம் முழுவதும் பரவி இருந்ததாக அறிஞர்கள் கூறியுள்ளனர். காலப் போக்கில் இலங்கையில் சைவம் குறிப்பாக வடமாகாணத்திலும், தென் இந்தியாவிலும், எமது சைவத் தமிழர்கள் சென்று வாழுகின்ற புலம்பெயர் நாடுகளிலும் இன்று சைவ தமிழ்ப் பண்பாடுகள் பேணிப் பாதுகாக்கப் படுகின்றது.

இடையில் மேற்கத்திய ஒல்லாந்தர், போர்த்துக்கேயர், ஆங்கிலேயர் ஆதிக்கத்தினால் எமது சைவ தமிழ் கலை பண்பாட்டுக்குப் பேராபத்து வந்தது. அவர்கள் தமது சமயத்தை வளர்ப்பதற்காக கிறிஸ்தவ கோயில்களைக் கட்டிச் சமயத்தை வளர்த்ததோடு கல்வியை எம்மீது செலுத்துவதற்காக பாடசாலையும் கட்டி ஆங்கில மொழியைப் போதித்ததோடு உத்தியோக மோகங் காட்டி தமது சமயத்திற்கு மாற்றினார்கள்.

அந்நிய ஆதிக்கம் ஒழிந்தபின் எமது பேரினவாதிகள் தமது சமயத்தை எந்த வழியால் புகுத்தலாம் என கங்கணம் கட்டிக் கொண்டு இருக்கின்றார்கள். உதாரணமாக எமது கதிர்காமத்தை எடுத்துக்கொண்டால் இன்றைய நிலை தெரியும். இப்படி ஏனைய பிரதேசங்களிலும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. வடமாகாணத்திலும் அதனைப் புகுத்துவதற்கு முயற்சிக்கின்றார்கள். இதனை சைவ தமிழ் மக்கள் பல வகையிலும் எதிர்ப்பைக் காட்டிச் சைவத்தையும், தமிழையும் வளர்த்துக்கொண்டே இருக்கிறார்கள்.

எமது பழைய சைவப் பண்பாடுகள், தமிழ்ப் பண்பாடுகள், கலைகள் என்பவற்றை அழியவிடாது பாதுகாப்பதோடு மேலும் மேலும் வளர்த்தெடுத்து தமிழையும் சைவத்தையும் பேணிப் பாதுகாக்க வேண்டும்.

எமது கோவில்களில் அந்தணர்கள் ஆறுகாலப் பூசை செய்து மக்களுக்கு நல்ல போதனைகளைச் செய்யவேண்டும். எமது

*களங்கமற்ற மனது மிகச் சிறந்த அறிவாற்றலைவிட மேலானது.*

கோவில்களில் தேவார பாராயணம் கட்டாயம் ஓதவேண்டும். பஞ்சபுராணம் ஓதப் பிள்ளை களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். பிள்ளை கள் தேவாரம் படிப்பதற்கு வெட்கப்படு வதைத் தவிர்த்து முன்னுக்கு வர வேண்டும். பிள்ளைகளுக்கு பஞ்சபுராணம் ஓதத் தெரி யாததால் முன்னுக்கு வருவதற்குத் தயங்கு கிறார்கள். இதனைக் கோவில் நிர்வாகத் தினர் குறைந்தது ஒவ்வொரு வெள்ளிக் கிழமையிலும் பண்ணிசை வகுப்புக்களை நடாத்தி பிள்ளைகளை ஊக்கப்படுத்துவதோடு பெற்றோரையும் கூடுதலாகத் தாய்மாரையும் பங்குபற்றச் செய்தால் கூடின பயனைப் பெறலாம். கோவில்களில் பேச்சுப்போட்டி, இன்னிசைப்போட்டி, கதாப்பிரசங்கங்கள், புராண படனங்கள் வாசித்தல், பயன் சொல்லுதல் என்பவற்றையும் நடத்தலாம். கோவில்களில் எந்த ஒழுங்கு முறையில் சுவாமி தரிசனம் செய்யவேண்டுமென்பதை யும் சொல்லிக் கொடுக்கலாம். கோவில் களில் விபூதி, சந்தனம், குங்குமம் என்ப வற்றை எப்படி வாங்கி அணிதல் வேண்டும் என்பதையும் எடுத்துக் கூறலாம். சைவத் தமிழ்க் கோட்பாட்டில் எமது உடை முழு ஆதிக்கம் செலுத்தவேண்டும். அந்நிய தேச கலாசாரத்தினால் இது மழுங்கடிக்கப்படுகின் றது. இதில் கூடிய கவனம் செலுத்தி தோய்த்து உலர்ந்த ஆடையை உடுத்தி உலகத்தில் எச் சமயத்திற்கும் இல்லாத பொக்கிஷமாகிய விபூதி, சந்தனம், குங்குமம் என்பவற்றை முறைப்படி அணிந்து வர வேண்டும். பெண்கள் எமது பண்பாட்டைக் கடைப்பிடிப்பவர்கள் சேலை அணிவதோடு பிள்ளைகள் முழுப்பாவாடை சட்டை, தாவணி அணிந்து விபூதி, சந்தனம் குங்குமம் அணிந்துவர வேண்டும். விவாகம் ஆகாத பெண்பிள்ளைகள் குங்குமம் வைப்பதைத் தவிர்ப்பது நல்லது. இதில் முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னவெனில் அந்தப் பெண்பிள்ளை விவாகம் செய்தவர் என்பதைத் தாலிக்கொடியும், குங்குமமும்தான் எடுத்துக் காட்டும். இது அந்தப் பெண்பிள்ளைக்கு கணவன் இருக்கிறார் என்பதைக் காட்டும். கணவன் இருக்கும்மட்டும்தான் குங்குமப் பொட்டும், தாலிக்கொடியும், அழகிய ஆடை கள், ஆபரணங்கள் என்பன அணிவதற்கு உரித்தானவை. ஆனால் இக்காலத்தில் இவையெல்லாம் மாறுபட்டு நடக்கின்றது. உண்மையாக கல்யாணமானவள் என்பதை குங்குமப் பொட்டுதான் குறிக்கும். அக்காலத் தில் பெண்கள் குங்குமப் பொட்டைப் பெரி தாகப் போட்டார்கள். இதில் இரண்டு வித மான கருத்துக்கள் இருக்கின்றன. ஒன்று, என்னை நெருங்கினால் சுட்டெரித்து விடு வேன் என்பதும் அடுத்தது எனது மனம், உடம்பு முழுவதும் எனது கணவன் நிறைந் திருக்கிறார் என்பதையும் எடுத்துக்காட்டு கிறது. ஆனால் இக்காலத்தில் பெண்கள் நெற்றியில் குங்குமப் பொட்டை மிகச் சிறி தாகவும், நெற்றிச் சுட்டியால் முக்கோண வடிவில் குங்குமப் பொட்டையும் அணிகிறார் கள். அல்லது ஒட்டுப்பொட்டு வைக்கிறார்கள். இது எதற்காகவோ தெரியவில்லை. அவர் கள் சைவத் தமிழ்ப் பெண்கள். உண்மை யான சைவத் தமிழ்ப் பண்பாட்டுடன் வந்தால் அவர்கள் இலட்சுமிதான். இவ் உடையோ, அலங்காரமோ வேறு எந்தச் சமயத்துக்கும் இல்லாத பொக்கிஷம். இப்படி நடந்தால் கோயிலும் வீடும், நாடும் மிகச் செல்வச் செழிப் புடனும், ஆனந்தத்துடனும் மிளிரும். இப்படி யான உடையுடன் கோவில்களுக்குச் சென்று வருவாரேயானால் அவர்கள் தமது பண்பாட் டையும், சைவத்தையும் வளர்த்தவர் ஆகி றார்கள். இவைதான் எம்மை எத்தனையோ அழிவுகளில் இருந்து பாதுகாத்து பழைய நிலையில் வைத்திருக்கின்றது. கோவில்களுக்கு

*பெற்றுக்கொள்பவன் அல்ல, கொடுப்பவனே பேறு பெற்றவன்.*

ஆண்கள் வரும்போது மேலைத்தேய கலா சாரத்தை விடுத்து சைவத் தமிழ் முறைப்படி வேட்டி சால்வை, விபூதி, சந்தனம் என்பவை அணிந்துவர வேண்டும். இது கோவில் திருவிழாக் காலங்களில் மட்டுமல்லாது ஏனைய நேரங்களிலும் கவனிக்கப்பட வேண் டும். கோவில் திருவிழாக்களில் வாடகைக்கு ஆட்கள் பிடித்து சுவாமி காவக்கூடாது. அத் தோடு எமது அந்தணர்கள் திருவாடுதண்டு பிடித்து சுவாமி காவுவதற்கு அனுமதிக்கக் கூடாது. இது பாவம் அவர்கள் எமது கோவில் களில் மூன்றுவேளை, இரண்டு வேளை, ஒருவேளை கூட சுவாமிக்குப் பூசை செய்து எமது சமயத்தை வளர்த்துக்கொண்டிருக் கிறார்கள். மற்றைய சமயத்திற்குக் கிடைக் காத கலை எங்களுடைய சைவ சமயத்திற் குக் கிடைத்திருக்கிறது. எமது கலைகளில் முதன்மையானது பரதநாட்டியம். இந்த நாட்டியத்திற்குப் பெண் பிள்ளைகள் உடம்பை மறைத்து, அழகான பட்டுடை அணிந்து, பொட்டு இட்டு, பூச்சூடி, நடனம் ஆடினார்கள் என்றால் உண்மையிலேயே அவர்கள் தேவலோகத்து தேவதைகள்தான். இதனை அந்தக் காலம் தொடக்கம் இன்று வரை பாதுகாத்துக்கொண்டு வருகிறார்கள். இனிமேலும் இதனைப் பாதுகாப்பார்கள். மேலைத் தேயங்களிலும் எமது சைவத்தமிழ் மக்கள் இதனைத் தங்கள் பிள்ளைகட்கும் பயிற்றுவித்து பாதுகாக்கின்றார்கள். இதனுடன் குச்சுப்பிடி, கோலாட்டம், காவடி ஆட்டம், கும்மி, நடனம் போன்றவையும் எமது பண் பாட்டை பாதுகாத்துக்கொண்டு வருகின்றது. கோயில் திருவிழாக் காலங்களில் கொட்டகை கள் அமைத்து சத்தியவான் சாவித்திரி, கண்ணகி கோவலன், அரிச்சந்திர மயான காண்டம் என்பவற்றை நடித்துக் காண்பிப்பது இப்போது அருகிவிட்டாலும் நகுலேஸ்வரத் தில் அரிச்சந்திர மயான காண்ட நாடகம் சிவராத்திரி தினத்தன்று நடைபெறுகின்றது.

அடுத்ததாக எமது பண்பாட்டை எடுத் துக் கொண்டால் அதனையும் கைவிடாது பாதுகாத்துக்கொண்டு வருகிறார்கள் சைவத் தமிழ் மக்கள். ஒவ்வொரு காலகட்டத்திலும் வரும் சந்ததியினர் கைக்கொண்டு கடைப் பிடிப்பார்களா? என்று பெரியோர்கள் ஏசியது உண்டு. ஆனாலும் இளஞ் சந்ததியினரும் இதனைக் கைவிடாது கட்டிக் காத்துக் கொண்டு வருகிறார்கள். ஒரு திருமணமென் றால் பொருத்தம் பார்ப்பது, சம்பந்தக் கலப்பு, திருமணச் சடங்கு வைபவம் அதன்பின் நடைபெறும் வைபவங்கள் எல்லாவற்றையும் ஒழுங்காகக் கடைப்பிடிக்கின்றார்கள். ஆனால் மேலைத்தேய நாகரிக மோகத்தால் எமது உடை அணியாது மேலைத்தேய உடையை அணிந்து அல்லற்படுத்துகின்றார்கள். இதனை உணர்ந்து வேட்டி, சால்வை என்பவற்றை அணிந்து வருபவர்களேயானால், இது எமது பண்பாட்டுக்கு மெருகூட்டும். இதுபோல பூப் புனித நீராட்டு விழா, வீடு குடிபுகுதல், பிள்ளை பிறந்து 31ஆம் நாள் வைபவம், பாற்சோறு ஊட்டுதல் இப்படியான எமது பண்பாட்டைக் கைவிடாது கடைப்பிடித்துக் கொண்டு வருகின்றவர்கள் வரவேற்கத்தக்க வர்கள். இதனால் எமது சைவமும் தமிழும் என்றும் வேரூன்றி நிற்கும் என்பதற்கு ஐயமில்லை.

வாழ்க தமிழ்; வளர்க சைவம்.

நம்பிக்கையால் உரம்பெற்று மிகப் பலவீனமான ஒருவனும் வன்மையுடையவனாக முடியும். அவனுள் இருக்கும் இறைவன் பிரபஞ்சத்தையும் எதிர்க்கும் உறுதியை அவனுக்கு அளிக்கிறான். எந்தவிதமான ஆபத்தையும் எதிர்நோக்கும் வல்லமை பெற்றதாகிறது அவனது ஆன்மா.

*எதற்காகவும் உண்மையைத் தியாகம் செய்யக்கூடாது.*

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| சு. தங்கத்துரை | வல்வெட்டி | 5000. 00 |
| ந. சுயாத்தா குடும்பம் | பிரான்ஸ் | 5000. 00 |
| திரு ராஜேந்திரம் குடும்பம் | ஜேர்மனி | 5000. 00 |
| வ. ஜெயராஜ் | பருத்தித்துறை | 1000. 00 |
| திரு பாலமுரளி குடும்பம் | புத்தூர் | 2000. 00 |
| ரமேஷ் கஜினி | அச்சுவேலி | 2000. 00 |
| வ. வரதராசா | பருத்தித்துறை | 1000. 00 |
| நாககிரிநாதன் குடும்பம், ரூபராஜா குடும்பம் | சித்தங்கேணி | 5000. 00 |
| த. திருஞானசம்பந்தர் | ஏழாலை | 3000. 00 |
| திரு கனகேந்திரன் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 2000. 00 |
| தி. நற்குணம் | புத்தூர் | 1000. 00 |
| சண்முகரட்ணம் சாந்தகுமார் | கொக்குவில் | 12000. 00 |
| ந. ஆறுமுகம் | யாழ்ப்பாணம் | 3000. 00 |
| கஜன் விது | வல்வெட்டி | 500. 00 |
| ச. நடராஜா | அவுஸ்திரேலியா | 1000. 00 |
| மகேசன் குடும்பம் | லண்டன் | 1500. 00 |
| சாந்தன் குடும்பம் | இணுவில் | 5000. 00 |
| ச. அருள்மாறன் | சங்கானை | 1000. 00 |
| வை. பவானந்தராஜா | சாவகச்சேரி | 5000. 00 |
| ப. அமுதலக்ஷா | உடுப்பிட்டி | 1000. 00 |
| M. இந்துசேகரம் | அவுஸ்திரேலியா | 85000. 00 |
| கா. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |
| திரு கணேசமூர்த்தி மூலம் வாசுகி செல்வநாயகம் | கனடா (கல்விப் பணிக்காக) | 30000. 00 |
| திரு நவரூபராஜா குடும்பம் | வல்வெட்டி | 28000. 00 |
| ச. விக்னேஸ்வரன் | இணுவில் | 4000. 00 |
| திரு ஜதுர்ஷன் | கொலன்ட் | 1000. 00 |
| திரு ஜெயக்குமார் குடும்பம் (பிரியன்) | சுவிஸ் | 5000. 00 |
| பொ.வி. திருநாவுக்கரசு | மண்டைதீவு | 1000. 00 |
| சி. சுரேஸ்குமார் | பிரான்ஸ் | 1000. 00 |
| S. கேதாரன் | சுவிஸ் | 1000. 00 |
| சி. கௌரி | புங்குடுதீவு | 1000. 00 |
| ம. அன்பழகன் | வல்வெட்டி | 5000. 00 |

*உண்மைக்காக எதையும் தியாகம் செய்யலாம்.*

| | | |
|---|---|---|
| மு. ஜெயராசா | உரும்பராய் | 1000. 00 |
| அ. இளையதம்பி | சிறுப்பிட்டி | 3000. 00 |
| திரு உதயகுமார் | டென்மார்க் | 3000. 00 |
| T. கிருசாந்தன் | கனடா | 10000. 00 |
| சி. விஷாகன் | லண்டன் | 10000. 00 |
| G. பிருந்திகா | உடுப்பிட்டி | 1000. 00 |
| தி. ரவி | தாவடி | 500. 00 |
| மு. சிவானந்தராஜா | யாழ்ப்பாணம் | 500. 00 |
| திரு ராஜ்மோகன் குடும்பம் | அமெரிக்கா | 1000. 00 |
| திரு நடராசா குடும்பம் | கனடா | 1000. 00 |
| S. உதயச்சந்திரன் | லண்டன் | 3000. 00 |
| த. தயாபரன் | உரும்பராய் | 5000. 00 |
| மு. அருந்தவம் | புன்னாலைக்கட்டுவன் தெற்கு | 5000. 00 |
| க. வெற்றி | கொடிகாமம் | 5000. 00 |
| பா. மகினி, பா. உஷானிக்கா | பிரான்ஸ் | 2000. 00 |
| ப. தனலட்சுமி | மட்டுவில்தெற்கு | 500. 00 |
| க. சிவகுரு | சுவிஸ் | 4000. 00 |
| கு. துர்க்கா | திருகோணமலை | 2000. 00 |
| V. அசோக்காந்தன் | கரணவாய் | 500. 00 |
| சு. தில்லைநாயகி குடும்பம் | நீர்வேலி | 15000. 00 |
| சி. அரியமலர் குடும்பம் | வட்டுக்கோட்டை | 15000. 00 |
| S. செல்வரட்ணம் | ஊரெழு (ஜேர்மனி) | 12000. 00 |
| நகுலன் சிவா | நல்லூர் | 10000. 00 |
| விஜயராணி சற்குணநாதன் | கொழும்பு | 6000. 00 |
| முரளிதரன் குடும்பம் (சுவிஸ்) | தொண்டைமானாறு | 20000. 00 |
| செ. செல்லம்மா | கனடா | 10000. 00 |
| ச. கவிஷேசன் | ஆத்தியடி பருத்தித்துறை (மலையக மாணவருக்காக) | 3000. 00 |
| வி. கணேசலிங்கம் குடும்பம் | இங்கிலாந்து | 5000. 00 |
| S. சுபத் | அச்சுவேலி | 10005. 00 |
| சு. யோகேஸ்வரி | அளவெட்டி | 5000. 00 |
| S. அஸ்வின் | கொக்குவில் | 5000. 00 |
| K. குமரன் | மிருசுவில் | 1000. 00 |
| இ. சொக்கலிங்கம் | கைதடி | 25மூடை சி.ப.அரிசி, 2மூடை பருப்பு |
| சி. ஞானாம்பிகை | சாம்பல்தீவு | 1000. 00 |
| ஸ்ரீ மாதவன் | யாழ்ப்பாணம் | 1500. 00 |
| வி. தயாநிதி | கிளிநொச்சி | 500. 00 |
| சிவா நறுமணப்பூங்கா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |

(தொடரும்...

*அஞ்சாமையைவிட நேர்மையாக இருத்தலே அழகானது.*


# சிவன் வடிவம் உணர்த்தும் தத்துவங்கள்

– திரு காரை எம்.பி. அருளானந்தன் அவர்கள் –

நாம் எப்படி வாழவேண்டும் என்பதைக் காட்டுவதே சிவ வடிவம். சிவனுடைய ஜடா முடியில் அவர் வைத்திருக்கும் "சந்திரன்" நம்முடைய வாழ்வில் இன்பமும் துன்பமும் மாறி மாறி வளர்பிறையாகவும், தேய்பிறை ஆகவும் வரும் என்பதைக் காட்டுகிறது.

அங்கே காணப்படும் "கங்கை" என்றும் எப்போதும் மனதைக் கங்கையைப்போல் வைத்திருக்க வேண்டும் என்று உணர்த்துகிறது. கங்கையில் எவ்வளவோ அழுக்கும் அசுத்தமும் சேருகின்றன. ஆனால் அதன் தூய்மை கெடுவதில்லை. அதைப்போல எவ்வளவோ ஆசாபாசங்கள் நம்மை அலைக்கழித்தாலும் நம்முடைய மனம் அதனால் கெட்டுப்போய் விடக் கூடாது. ஒவ்வொரு நிமிடமும் நம்மைப் பாவக் குழியில் தள்ளிவிட நச்சுப் பாம்பாக சூழ்நிலை சுற்றிக்கொண்டு காத்திருக்கிறது. ஆனால் அந்த விஷம் உள்ளே இறங்க நாம் விட்டுவிடக் கூடாது. இதையே சிவனின் கழுத்தைச் சுற்றிய பாம்பை அணிந்த சிவ பெருமான் விஷத்தைக் கண்டத்தில் தேக்கிக் கொண்டவராகக் காட்டுகிறார்.

மிருக உணர்ச்சிகள் நம்மைப் பாதிக்கலாம். ஆனால் அவற்றிலிருந்து உயர்ந்த மனித உணர்வுடன் நாம் வாழ வேண்டும். புலித்தோல் போர்த்திய பெருமான் அதையே நமக்குக் காட்டுகிறார். உடம்பில் ஒரு பகுதியில் தேவியை வைத்துக்கொண்டிருந்தாலும்



சிவபெருமான் காமத்தை வென்றவர். காம னையே எரித்தவர். அதைப்போல நாமும் உலகியலைப் பற்றி வாழ்ந்தாலும் காமத் துக்கு அடிமையாகாமல் அதைத் தூய்மைப் படுத்தி வாழப் பழகிக்கொள்ள வேண்டும்.

நாம் வழிபடும் ஈஸ்வரனின் உருவ மும் தத்துவமுமே இதை நமக்கு விளக்கு கிறது. நமக்குத் தந்தையாகவும், தாயாகவும் தோன்றுவது ஈஸ்வரனும் பார்வதி தேவியும், அவர்களுக்குக் குமாரர்களாக உள்ள தெய் வங்கள் கணபதியும், சுப்பிரமணியரும். இந் தக் குடும்பத்திலேயே நாம் முரண்பாடான கொள்கைகளை வெவ்வேறான உருவங் களில் காண்கிறோம். ஈஸ்வரன் பாம்பை ஆபரணமாகக் கழுத்தில் அணிந்திருக்கின் றார். ஆனால் சுப்பிரமணியர் (முருகக் கட வுள்) அமர்ந்த மயில் வாகனமோ பாம்பைக் கொத்தி அழிக்கக் காத்திருக்கின்றது. சிவ னின் வாகனமோ காளை மாடு, ஆனால் பார்வதியின் வாகனமோ சிம்மம். அதை ஒரே அடியில் அடித்து வீழ்த்தத் துடிக்கும் கொடிய மிருகம். கணபதியின் வாகனம் மூஞ் சூறு (எலி). சிவபிரான் அணிந்த பாம்பு அதை ஒரு நொடியில் விழுங்கி ஜீரணித்துவிடும்.

ஈஸ்வரனின் நெற்றிக் கண்ணிலிருந்து அனற் பொறிகள் சிந்துகின்றன. ஆனால் தலையில் ஜடாமுடியிலிருந்து கங்கையின் நீர்த்துளிகள் சிந்துகின்றன. நெருப்பை நீர் ஒரு நொடியில் அணைத்துவிட முடியும். இப்படி ஒன்றுக்கொன்று முரண்பாடான பல வும் ஈஸ்வரனின் குடும்பத்திலேயே ஒரே இடத்திலேயே அமைதியாக ஒற்றுமையான சூழ்நிலையில் அமைந்திருக்கின்றன.

அந்த இடம் ஆனந்தமயமான உலக மாக உணரப்படுகின்றது. இது நாம் புரிந்து கொள்ள வேண்டிய தத்துவம்.

ஈஸ்வர பக்தி என்ற நிலைமை உறுதி யாகக் கிடைக்கும் தருணத்தில் இந்த முரண் பாடுகள், வேற்றுமைகள் எல்லாமே ஒன்றுக் கொன்று அடங்கி உட்பட்டு ஒற்றுமை தரும் ஆனந்த நிலையை அளித்துவிடுகின்றன. அந்தச் சமயத்தில் வேற்றுமைகள் தலை தூக்குவதில்லை. அன்பு வழியில் ஆண்ட வனின் பக்தியில் ஈடுபடுங்கள். உங்கள் குழப்பம் யாவும் மறைந்துவிடும்.

எங்களுடைய வாழ்வியலை சித்தரிக் கும் வண்ணமாக சிவனுடைய வடிவம் எமக்குக் காட்சியளிக்கின்றது. அதுமட்டுமல்ல, அந்தக் காட்சிதான் எமது வாழ்க்கை. சிவ வடிவை சிந்திப்போம். சிவ நினைவில் வாழ்வோம்; சிவ பக்தர்களாக வாழ்வாங்கு வாழ்வோம்.

"ஓம் சிவாய நம"


**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**

செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**

செ. மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

E.mail: suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com


*துன்பத்தைச் சந்திக்கத் தெரிந்தவனுக்கு வாழ்க்கையில் தோல்வியே இல்லை.*

# இலங்கையில் சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான வரலாற்று மகிமைகள்

– திரு ப. மகாகணபதிசர்மா அவர்கள் –

மேற்படி ஆலயம் இற்றைக்கு ஏறக் குறைய 1805ஆம் ஆண்டுக்கு முன்பு தோற் றம் பெற்றதாக முன்பு இருந்த பெரியோர் களும் பழைய தோம்பு வரலாறுகளும் கூறு கிறது. இவ் ஆலயம் தென்மராட்சியில் சாவகச்சேரியில் உள்ள மட்டுவிலுக்கும் கல் வயல் என்ற ஊருக்கும் மத்தியிலே விளை வேலி என்னும் கிராமத்திலே வயலும் வயல் சார்ந்த இடத்திலே வடக்கு நோக்கி அமர்ந் திருந்து அடியார்களுக்கெல்லாம் திருக்காட்சி கொடுத்து திருவருள் பொழிகிறாள்.

இவ் ஆலயத்தின் ஸ்தலவிருட்ஷம் ஆகிய தாழை மரங்களின் மத்தியிலே அம் பாள் வீற்றிருந்து வருகிறாள். இவ் அம்பாள் விக்கிரகம் விஷ்ணு துர்க்கையாகவும் கையில் சங்கு சக்கரமும் அம்பாளின் பாதத்தின்கீழ் எருமைக்கடாவைக் கொண்டதாகவும் மகிஷனை வதம் செய்வதாகவும் காட்சி அளிக்கிறாள். ஆதிகாலத்தில் மூலஸ்தானத்தில் தாமிர விக்கிரகமாக இருந்து 1956ஆம் ஆண்டள வில் எமது தாய் நாடாகிய இந்தியாவில் உள்ள சிதம்பரத்தில் இருந்து சிலாவிக்கிரக மாகக் கொண்டுவரப்பட்டு 1956ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. பரம்பரை பரம்பரையாக பிராமண சமூகத்தைச் சேர்ந்த குருக்கள் பரம்பரையே இன்றும் ஆதீன தர்ம கர்த்தாவாக இருந்து, அதாவது சந்தணக் குருக்கள் என்று கூறப்படும் பரமசாமிக்குருக் களும், அதன் பின்னர் மகாகணபதிக் குருக் களே தர்மகர்த்தாவாக இருந்து வெகு சிறப் பாக நிர்வாகம் நடைபெற்று வருகிறது. 1956 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நீர்வேலிக் குருக்கள் பரம்பரையைச் சேர்ந்த பிட்சாடனக் குருக்களே பிரதம சிவாச்சாரியாராக இருந்து நடாத்தி வைத்தார். பின்பும் பல திருப்பணி கள் நடைபெற்று 1981ஆம் ஆண்டு மீண்டும் வெகு சிறப்பாக கும்பாபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்து இவ் ஆலயத்தில் லட்சக்கணக் கான அடியார்கள் பங்குனித் திங்கள் மற்றும் சாதாரண திங்கட்கிழமைகளில் பெரிய பெரிய பானை வைத்து பொங்கல் பொங்கி தங்கள் நேர்த்திகளை நிறைவு செய்வார்கள். இக் கோவிலுக்கு ஓர் புனிதமான தீர்த்தக் கிணறு உண்டு. சகல நோயாளர்களும் இத் தீர்த்தக் கிணற்றில் வந்து குளித்து அம்பாளின் திரு அருளினால் தமது நோய்களைக் குணமாக் கிச் செல்வார்கள். எத்தனையோ கன்னிப் பெண்களுக்கு இவ் ஆலயத்தில் திருவிளக் குப் பூஜை செய்து திருமணங்கள் நிறைவேறி உள்ளன. வெளிநாடுகூட சென்றுள்ளார்கள். மகப்பேறு இல்லாதவர்கள் நேத்திகள் வைத்து காவடி எடுத்து மகப்பேறு பெற்றுள்ளார்கள். இவ் ஆலய தலவிருட்ஷமாகிய தாளை பூப்பதுவே தவிர காய்ப்பது கிடையாது. இன்னும் ஒரு விஷேடம் இவ் ஆலயத்தின் விக்கிரகம் இந்தியாவில் சிதம்பரத்தில் சிற்பாசாரியார்மூலம் செதுக்க ஆரம்பிக்கத் தொடங்கவே, பல காலமாக திருமணம் பேசி வந்தும் தடையாக இருந்த திருமணம் இச் சிற்பாசாரியாரின் பெண்ணுக்கு வெகு சிறப்பாக

*சிந்திக்கத் தெரிந்தவனுக்கு ஆலோசனை தேவையில்லை.*

நடந்தேறியதாகவும் சொல்லப்படுகிறது. பல காலமாக இவ்வாலயத்தில் அலங்கார உற்சவம் நடைபெற்று 1989ஆம் ஆண்டு முதல் ஆடி அமாவாசை பட்சமாக மகோற்சவம் (கொடியேற்றம்) ஆரம்பித்து நடைபெற்று வருகிறது. பத்து நாட்கள் மகோற்சவம், வருடா வருடம் ஆடிப்பூரத்திற்கு 108 தீப பூஜை, நவராத்திரி ஒன்பது நாட்களும் அம்பாள் கொலு வைத்து ஸ்ரீ சக்கர யந்திர பூஜை, மானம்பூ விழா, மாசி மகத்தை பூர்த்தி அடைய லட்சா அர்ச்சனை விழா, பங்குனித் திங்கள் விழா, செவ்வாய்க்கிழமைகளில் ராகு காலப் பூஜை, வருடாவருடம் நவசண்டி ஹோமம் என தேவஸ்தானத்தில் சகல விஷேடங்களும் நடைபெற்று வருகின்றன. இவ்வாலயத்தில் இன மத பேதமின்றி சகல மக்களும் பெருந்திரளாக வந்து அம்பாளை வணங்குகிறார்கள். இன்னும் இவ்வாலயத்தின் புதுமைகள் பலப்பல உண்டு. சகல மக்களுக்கும் சாந்தி சமாதானம் ஏற்பட்டு இன்புற்று வாழ அன்னை துர்க்காதேவியைப் பிரார்த்திப்போமாக.

சுப மங்களம்.

## காத்திடும் கடலோனாய் ஏற்றிடும் செந்தில்வேல்
## மோகனதாஸ் சுவாமியின் ஆசியே குமரவேல்

அகத்திடையே யளவிறந்த வண்டங்களூறக்கிடந்த வாச்சிரமதானம்
பகட்டெழில் சேர நற்தவந் தோருளம் புகுந்து பார்ப்பளவிற் திறமிகுந்து
தகட்டுவராலுவர்க்கடல் சூழ்தரைநடுவே யதன்கீழ் மேலாயுளரும்
முகட்டளவும் பலவுலகும் முதிர்வளர்த்தினிடை யுளப்பசிகாத்த கடலோனே!
நாதங்களோரிரண்டாய் நலமருளும் சதாசிவப் பொருளாய்
பாதங்களொடு நான்கும் பல்சுடர்ஞானம் பயில்வித்த மெய்ப்பொருளாய்
வேதங்களறியாத வித்தக வடிவேல் தாங்கும் திருவருளால் சோதியாகும்
பூதங்களரைந்தும் புகலுமாறு புரையின்றி யெதிர்கொள்ளும் செல்வச்சந்நிதியே!
பண்டையூழிகள் தோறும் படைத்தவரும் பாருலகு விரிவுபடச் செய்தவரும் சந்நிதியே!
மண்டுபேருலகனைத்தும் வருத்தமறத்துடைத்தருளும் வாமபாகம் சந்நிதிவேலே!
கொண்டபேரரசு அதிகாரங் கொள்ளாது பதியவைத்துயர்வு கொள்ளும் குமரவேலே!
கண்டு பேரானந்தக் கடலில்முழ்கி கடும்வரம் பெறச்செய்வதும் செல்வச்சந்நிதியே!
உடலினுக்குயிரேபோல உயிர்க்குயிரான ஆச்சிரம மோகனதாஸ் குமரவேலே!
உடலினுக்கறிவுநல்கி உடலினை யுள்ளொளிபெருக்கி யாளும் மோகனன் ஆசிவேலே!
உடலுயிர்துறக்கா வேண்டும் அடியவர்க்கின்மை காட்டும் பதஞ்சலி வேலே!
உடலுறை யுயிர்க்குமெட்டா ஒளிர்பெருஞ்சோதி செல்வச்சந்நிதி வேலே!
விரவுதத்துவத்துநீங்கி மேலெனநின்ற கடலுடன் பாயுமாற்றுவேல்
வரமுற வுருவு கொண்டு வந்தருள் கடாட்சம்பூண்ட மோகனின் குமரவேல்
பரவுமைந்தொழிலைப் புகட்டி குகபரவருளைப் பூணும் புனிதவேலே!
துரியத்தினுள்ள மோங்க சுடர்ப்பெருங் கடலாய சொர்ணவேலே!
ஒன்றதாய்ப்பலவாய ருவாயுருவாகி பல்லருள் பணிபாகுபடுத்தும்வேல்
நின்ற வுலகெலாத்தினு முடங்கி நீக்கமிலாததுயர்மாள்வது மோகன்தாஸ் குமரவேலே!
துன்று சோதியே கதிர்வேலனேயெனச் சொல்லுநாமமே சந்நிதியான் ஆச்சிரமவேல்
நன்று தாங்கிய தறிமதி நாமெலாமுய்ய சென்றுசேர் மோகனசுவாமியின் மெய்ப்பதவேலே!

-க. தெய்வேந்திரம்-

*உயர்ந்த எண்ணம் கொண்டவர்களுக்கு தன்மை என்பதே இல்லை.*

# ஸ்ரீ ராமன்

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

இதிகாசங்களுள் ஒன்று இராமாயணம். இராமனே இக் காவியத்தின் நாயகன். விஷ்ணு பகவானுடைய தச அவதாரங்களுள் இராம அவதாரம் ஒன்றாகும். நாம் சிறு வயதிலிருந்தே இராம சரித்திரத்தைப் படித்து வருகின்றோம்.

இந்த இராம காவியம் எமக்குக் கற்பிக்கும் படிப்பினைகள் ஏராளம். புத்திரபாசம், நட்பு, அபயம் என வந்தோருக்கு அடைக் கலம் அளித்தலின் அவசியம், ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாடு, பக்தியும் சேவையும் இப்படியாகப் பல படிப் பினைகளை யாம் இக்காவியத்தில் காண்கின்றோம்.



தசரத மன்னன் இராமபிரானிடத்து வைத் திருந்த புத்திரபாசம் மிக உயர்ந்தது. அதற்கு விலை மன்னனது உயிர். ஸ்ரீ ராமபிரானுக்கும், படகோட்டி குகனுக் கும் இடையில் அமைந்த உறவு, சிறந்த நட்புக்கு உதாரணம் ஆகும்.

இலங்கேஸ்வரனுக்கு சீதாபிராட்டியை ஸ்ரீ ராம னிடம் அனுப்பி வைக்கும்படி அறிவுரை கூறுகிறான் இலங்கேஸ்வரனின் தம்பி விபீடணன். "பிறன் மனை விழைதல்" பெரும் பாவம் அண்ணா! அதிலும் நீ வேதம் கற்றவன்; வேதத்தை நன்கு புரிந்து கொண்ட வன்; சிவ பக்தன், இசையில் வல்லவன், வீணைக் கொடியோன், சாமகானத்தால் அந்தப் பரமேஸ் வரனையே மகிழ வைத்து வாளும் வரமும் பெற்றவன், பராக்கிரமம் வாய்ந்தவன் இப்பேற்பட்ட நீ இன்னொருவனின் மனைவியைக் கொண்டுவந்து வைத்திருக்க லாமா அண்ணா!"

இது விபீடணனது அறிவுரை. ஆனால் இராவண னுடைய விதி வேறு பாதை நோக்கிப் போய்க்கொண்டிருந் தது. எனவே இந்த அறிவுரைகள் எல்லாம் பயன் அற்றுப் போகின்றன. செவிடன் காதில் ஊதிய சங்க நாதம்போல.

செய்வதறியாது ஸ்ரீ ராமனிடத்தில் அடைக்கலம் புகுகின்றான் விபீடணன். அபயம் அளிக்கின்றார் ஸ்ரீ ராமச் சந்திரமூர்த்தி. ஈற்றில் இலங்காபுரியின் மணிமகுடமே

*துன்பத்தைப் போன்ற பயிற்சிக் கருவிகள் வேறு இல்லை.*

விபீடணனுக்காகின்றது. இராமாயணத்தில் இடம்பெற்ற ஒரு சம்பவத்தை திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் கதை யாகக் கூறியுள்ளார். அதனை நீங்களும் கேட்டுப் பாருங்கள்.

ஒரு சந்தர்ப்பத்தில் இராமர், இலட் சுமணர், விஸ்வாமித்திரர் மூவரும் படகொன் றில் ஏறி வருகிறார்கள். படகோட்டி இலட் சுமணரையும் விஸ்வாமித்திரரையும் படகில் ஏற்றிக்கொள்கின்றான். ஸ்ரீ இராமரை மாத் திரம் அவரது பாதத்தை ஆற்றில் கழுவி வரச் சொல்கிறான். தானே அவரது பாதத்தை நீரால் அபிஷேகம் செய்கிறான். "எதற்காக இந்த நிபந்தனை?" என்று கேட்கிறார் இராம பிரான். உமது பாதம்பட்டு கல் ஒன்று அழ கிய பெண் ஆனதைக் கேள்விப்பட்டுள்ளேன். எனது படகில் பாரத்துக்காக அடியில் கற் கள் வைத்திருக்கிறேன். தங்கள் பாதம் பட்டு அத்தனை கற்களும் பெண்களாகி விட்டால் நான் எப்படி அவர்களை வைத்துக் காப்பாற்று வேன்? வீட்டில் என் சம்சாரம் சண்டைக்கு வந்துவிட மாட்டாளா? என்கிறான் படகோட்டி. ஸ்ரீ ராமபிரான் சிரித்தார். பயணம் முடிந்து படகால் இறங்கும்போது தன்னிடம் இருந்த விலையுயர்ந்த மோதிரம் ஒன்றை ஸ்ரீ ராமர் படகோட்டிக்குப் பரிசாகக் கொடுத்தார்.

படகோட்டி அதனை வாங்க மறுக் கிறான். "தாங்களும் படகோட்டி அடியேனும் படகோட்டி. ஒரே தொழில் செய்யும் இரு வரும் ஒருவரிடம் மற்றவர் கைம்மாறு வாங் கக் கூடாது என்கிறான், அவன். இராமர் யோசித்தார். "ஒன்றும் புரியவில்லையே! சற்று விளக்கமாகத்தான் சொல்லேன். நீ கூறுவதன் அர்த்தம்தான் என்ன? என்கிறார் இராமபிரான்.

படகோட்டி பதில் அளித்தான். "இராம பிரானே! தாங்கள் சங்கடங்கள் நிறைந்த வாழ்க்கைப் பிரவாகம் என்னும் ஆற்றைக் கடந்து முத்தியை அடைய அடியார்களுக்கு உதவுகின்றீர்கள். அடியேனோ வெறும் ஆற் றைக் கடப்பதற்கு வாடிக்கையாளர்கட்கு உதவுகிறேன். ஆக, இருவருமே ஒரு தொழி லைச் செய்கின்றவர்கள்தான்" என்றான் படகோட்டி.

அறிவும், ஆழ்ந்த சிந்தனையும் எங்கெல்லாம் இருக்கின்றது பாருங்கள்! இதில் நீங்கள் எப்படி?

## முருகையனே!

ஆற்றங்கரை தனில் வீற்றிருந்தே - தொண்டைமான்
ஆற்றங்கரை தனில் வீற்றிருந்தே
அற்புதக் காட்சி அளித்திடும் ஐயனே முருகையனே
கீற்றுப் பிறை அணி நாதன் மைந்தனே சந்நிதி வேலனே
போற்றி உனையே நித்தம் பணிந்தேன் ஐயனே - முருகையனே
மாற்று மொழி யாதும் கூறிடாதே - நான்
கேட்கும் வரம் எல்லாம் தந்திடுவாய் ஐயனே முருகையனே
ஆற்றல் மிகு கூற்று(வன்) என்னை நோக்கி வரும் வேளையிலே
வேற்று மனிதன் போல் வாளா திருந்திடாது ஐயனே முருகையனே
தேற்றி எந்தனையே அன்பால் அரவணைத்தே - உன்
பொற் பாத கமலத்தில் சேர்த்திடுவாய் ஐயனே முருகையனே.

-திருமதி புனிதவதி சண்முகலிங்கம்-

*இயற்கை ஒரு வேலையை முடிப்பதற்காகவே ஓர் அறிஞனைப் படைக்கிறது.*

# சமய வாழ்வு

(தொடர் - 18)

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

இன்றைய இளம் தலைமுறையினர் துன்பப்படுவது ஏன்? என்ற சிந்தனையில் அடுத்ததாக வருவது நட்பு. இவ்வுலக வாழ்க்கையில் ஒரு மனிதன் உண்மையாக ஈட்ட வேண்டிய அரிய பொருள் நட்பேயாகும். நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் அதைப் போன்ற பெருந்துணை வேறு எதுவும் இல்லை. நட்பு இருவகை. ஒன்று அறிவுடையோர் நட்பு. மற்றொன்று அறிவிலார் நட்பு. அறிவுடையார் நட்பு, வளர்பிறை போல நாள்தோறும் வளரும்; அறிவிலார் நட்பு தேய்பிறைபோல, நாளுக்கு நாள் குறையும். அறிவிலார், அறிவுடையார் என்பது கல்வியால் மட்டும் தீர்மானிக்கப் படுவதில்லை எனக் கருதுகிறேன்.

பழகப் பழகப் பண்புடையார் நட்பு இனிமையை மகிழ்ச்சியைத் தந்துகொண்டிருக்கும். இலக்கியங்களைக் கற்க வேண்டும் என்று சொல்வதற்குக் காரணம் உயர்ந்த நூல்கள் நல்ல எண்ணத்தை உருவாக்கிக் கொண்டிருக்கும் என்பதேயாகும்.

உங்களுடைய நண்பர்களின் எண்ணிக்கையையும், உன் நண்பர்கள் யார் என்பதையும் நீ எப்போதாவது எண்ணிப் பார்த்ததுண்டா? மாலை நேர மகிழ்ச்சிக்கு தோள் கொடுப்பவர்களும், உணவருந்தும் போது வந்து ஒட்டிக்கொள்பவர்களும், தவறுகளைக் கூட நியாயப்படுத்துபவர்களுமே நண்பர்கள் என்று இளமையின் அகராதி எழுதுவது வழக்கம். ஆனால் அப்படியல்ல இளைஞர்களே!

பொருளாதார உறவுகளால் பின்னப் பட்டிருக்கும் நமது சமூக உறவுகளில் பணத்திற்கு உறவு கொண்டாடும் சுற்றத்தைவிட, குணத்திற்கு உறவு கொண்டாடும் நண்பர்களே நல்லவர்கள். பெரும்பாலும் இங்கே சுற்றம், சுகங்களில் மட்டும் பங்கு கேட்கிறது. சில நட்புத்தான் சுகங்களில் மட்டுமல்லாமல் துன்பங்களிலும் பங்கேற்கிறது.

நட்பு என்பது இன்பத்தை இரட்டிப் பாக்க வேண்டியது; துன்பத்தை பாதியாக்க வேண்டியது.

“சிலரிடம் உனது துன்பத்தைச் சொல்லாதே; அவர்கள் தரும் ஆறுதலைவிட அவர்கள் அடையும் ஆனந்தமே அதிகம்” என்ற சத்தான வாசகம் சத்தியமான வாசகம் ஆகும். ஆனால் உண்மையான நண்பன் அடி மனத்தின் கனங்களை வாங்கிக்கொள் வதன்மூலம் நூறு மருத்துவர்கள் செய்யமுடி யாத சிகிச்சையைச் செய்து விடுகிறான்.

நட்பு என்பது அரசியல் கட்சிகள் கூட்டணி மாறுவதுபோன்றதன்று.

“நட்பிலும், புத்தகத்திலும், மதுவிலும் பழையதே சிறந்தது” என்ற பழமொழியின் முதல் இரண்டு அம்சங்கள் மட்டும் இனியவை. ஒரு மனிதன் எப்போதுமே தன்னைத் தானே முழுமையாகப் பார்த்துக் கொள்ள முடியாது. அதுபோலத்தான், உன்னைப்பற்றி உன்னைவிட உன் நண்பனே நன்றாக அறிந்தவன். போலி நட்புகள் என்றும் அகத்துக்குள் சென்று ஆணிவேர் பிடிப்பதில்லை. அவை கடற்கரையில் எழுதும் எழுத்துக்களைப்போல் அழிந்தே விடுகின்றன. உதட்டில் பூக்களையும் உள்ளத்தில் புழுக்களையும் வளர்த்துக் கொண்டிருக்கிறவர்களின் நட்பு விடிவதற்குள் வெளிச்சமாகி விடுகிறது. “பட்டப் பகலில் நிலவு

*உனக்குத் தெரியாததை தெரியாது என்று ஒப்புக்கொள்வதே அறிவு.*

நன்றாகக் காய்கிறதே!" என்று ஒருவன் சொன்னால், ஆமாம்! நட்சத்திரங்களும் அழகாயில்லை!" என்பவன் நண்பனில்லை.

உனது குறைகளை உனக்குச் சுட்டிக்காட்டி மற்றவர்களிடம் மறைத்து விடுகிறவனே நம்பத் தகுந்த நண்பன். இதனைச் சொன்னது நானல்ல! ஐயன் வள்ளுவர்தான்! இதோ குறள்!

"நகுதல் பொருட்டு அன்று, நட்டல்; மிகுதிக்கண்
மேற் சென்று இடித்தல் பொருட்டு"

-குறள் 784-

சிரித்து விளையாடுவதற்காகச் செய்யும் நட்பு சிறந்ததல்ல; ஆனால் நண்பர் தவறு இழைக்க நேரும்பொழுது, தயங்காமல் கண்டித்து, அறிவுரை கூறுவதற்காக அமைவதே, உயர்ந்த நட்பாகும்.

நண்பன் ஒருவன் தவறு செய்து விட்டான். மற்றையவர்களிடம் எனது நண்பன் அப்படிப்பட்டவன் அல்ல! எந்தத் தவறும் செய்யமாட்டான் என்று கூறிவிட்டு, நண்பனிடம் வந்து "ஏன்டா இப்படிச் செய்தே! தெரிஞ்சு செய்தியா? தெரியாமல் செய்தியா? எது எப்படியென்றாலும் இனி ஒருக்கா இப்படி நடக்கக்கூடாது என்று இடித்துரை செய்பவன் தான் உண்மை நண்பன்.

நட்பு மலர்வதற்குப் பலநாள் பழக்கம் தேவையில்லை. உள்ளமும் உணர்ச்சியும் ஒன்றுபட்டாலே போதும். அவ் ஒத்த உரிமை நட்பென்ற உறவை வளர்த்து விடும். கண்ட இடத்தில், முகத்திற்கு முகம் மலரப் பழகுவது நட்பு ஆகாது. காணாத இடத்திலும், நேரத்திலும், அன்பாலே நெஞ்சம் மகிழப் பழகிப் பிரிவதே நட்பு ஆகும்.

நண்பனுக்கு துன்பம் நேர்ந்த உடனே, விரைந்து சென்று அதை நீக்க முயல்வதே நேரிய நட்பு.

"உடுக்கை இழந்தவன் கைபோல, ஆங்கே
இடுக்கண் களைவது ஆம் நட்பு" -குறள் 788-

இங்கு வள்ளுவப் பேராசான் தனக்கே உரிய முறையில் ஓர் உவமை சொல்கிறான். "உடுக்கை இழந்தவன் கைபோல" இடுப்பில் கட்டிய உடை நெகிழ்ந்தால் யாரும் சொல்லாமல் ஓடிச்சென்று உடையைப் பிடிக்கும் கைபோல என்று பொருள் கொள்வார்கள். உடை நெகிழ்கிறது- கழலுகிறது என்பதை உடை கழன்று விட்டது. இரு கைகளும் ஓடிச்சென்று உடல் உறுப்பை மறைத்து மானத்தைக் காப்பதுபோல என்று பொருள் கொள்ளும்போது நட்பின் ஆழம் நன்கு தெரியும்.

இளைஞர்களே சிந்தியுங்கள்! உங்கள் நண்பர்களில் யாராவது இத்தகைய பண்புகளைக் கொண்டிருக்கிறாரா? அப்படி இருந்தால் நட்பைத் தெரிவதில் நீ வெற்றி பெற்றிருக்கிறாய்! துன்பம் உன்னை அண்டாது.

ஒரு பெண்ணிடம் கொள்ளும் காதல் கூட உடல் வசப்பட்டது. ஆனால் நட்பு என்பது முழுக்க முழுக்க மன வசப்பட்டது. நல்ல நட்புக்கு தேய்பிறையே இல்லை. "நட்பு என்பது மாலை நிழல் மாதிரி; வாழ்க்கைச் சூரியன் அஸ்தமிக்க அஸ்தமிக்க அந்த நிழல் அடர்த்தியாகிறது; அழகாகிறது" என்று சொன்னவன் வாய்க்கு சர்க்கரை வாங்கிப் போடவேண்டும்.

திருவள்ளுவன் நட்புப் பேசிவிட்டு, நட்புக்கு ஏற்றவரை எவ்வாறு தெரிவு செய்வது என்றும் விளக்கியுள்ளார். நட்புச் செய்த பின்பு நண்பரைக் கைவிட முடியாது. ஆகையால், ஆராய்ந்து பார்த்தே நட்புச் செய்ய வேண்டும். ஆராயாமல், நட்புச் செய்வது போலக் கெடுதியானது வேறு எதுவுமே இல்லை. யாருடனும் நட்புச் செய்யமுன், அவன் குணத்தையும் குடும்பப் பண்பையும், குறையையும் குற்றத்தையும், அவனைச் சேர்ந்த சுற்றத்தையும், இனத்தையும் ஆராய்ந்து பார்த்தே நட்புச் செய்ய வேண்டும்.

*நம்பக் கற்றுத்தராதீர்கள், எதையும் சிந்திக்கக் கற்றுத் தாருங்கள்.*

"குணனும், குடிமையும், குற்றமும் குன்றா
இனனும், அறிந்து யாக்க நட்பு"
-குறள் 793-

ஒருவனுக்கு வாழ்வில் வரும் பெரு லாபம், அறிவற்றவர்களோடு அறியாமல் நட்புச் செய்திருந்தால், அதை உடனே கைவிட்டு விடுவதாகும்.

மனத்தில் மாசு இல்லாதார் நட்பையே, நாம் கைக்கொள்ள வேண்டும். நமக்கு ஒத்த பண்பு இல்லாதவருடைய நட்பை, எதைக் கொடுத்தாவது உதறித் தள்ளிவிட வேண்டும்.

பூம்புகாரைத் தலைப்பட்டினமாகக் கொண்டு ஆட்சி செய்த சோழமன்னன் ஒருவன் இருந்தான். மதுரை மன்னனின் அவைக்கள புலவராக இருந்த பிசிராந்தையன் எனும் பெரும் புலவருடன் நட்புக்கொண்டிருந்தான். ஆனால் மன்னனும், புலவரும் நேரில் கண்டு கொள்வதற்கு வாய்ப்பு இருக்கவில்லை. அந்தக்கால முறையில் ஓலைச் சுவடிகள் இருவருக்குமிடையே நட்பை வளர்த்தது. "உடல் இரண்டு உயிர் ஒன்று" எனும் உயரிய நட்பு இலக்கணத்திற்கு உதாரணமாக இருந்தனர். சோழ மன்னனின் மகன், இளவரசன் தந்தையை வீழ்த்தி ஆட்சியை விரைந்து பெறவேண்டுமெனச் சூழ்ச்சி செய்தான். (உட்கட்சிப்பூசல்) தனது மகனின் எண்ணத்தை, ஒற்றர்கள்மூலம் அறிந்துகொண்ட சோழன், அமைச்சர்களை அழைத்து தனது மகனுக்குப் பட்டம் சூட்டப் போவதாகவும், அவன் "வடக்கு இருக்கப் போவதாகவும்" அறிவித்தான். சொன்னபடி ஆட்சியை மகனிடம் ஒப்படைத்துவிட்டு, வடக்கு இருந்து விட்டான். வடக்கு இருத்தல் என்பது ஒரு விரதம். உயிர் விடும்வரை அன்ன ஆகாரம் இன்றி இருத்தல் என்பது அவ்விரதமாகும்.

சோழ மன்னன் வடக்கு இருக்கும் போது தனக்கருகில் ஒரு இடத்தை ஒதுக்கி வைக்குமாறு அமைச்சர்களுக்குக் கட்டளையிட்டான். அமைச்சர் ஏதும் அறியாது, சோழனிடம் கேட்டார், "மன்னா உங்கள் அருகில் வடக்கிருக்கப் போவது யார்? அரசியாரா" என்றார். சோழன் பதில் கூறினார். "அமைச்சரே! "எனது நண்பன் பிசிராந்தையன் வருவான்" என்றார். அமைச்சருக்கு ஆச்சரியம். இதுவரை காலமும் நேரில் வந்து பார்க்காத பிசிராந்தையரா வருவார் என நினைக்கிறீர்கள் எனக் கேட்டுவிட்டார். சோழ மன்னன் "நட்பின் ஆழம் அறியாமல் கேட்கிறீர், நான் இதுவரை இன்பமாக ஆட்சி செய்தேன். நண்பன், மதுரையிலிருந்து மகிழ்ந்தான். ஆனால் இன்று மரணத்திற்காக அமர்ந்து விட்டேன். இச் செய்தியறிந்ததும் துன்பத்திற்கு துணை செய்வதற்கு ஓடோடி வருவான்" என்றார்.

சோழ மன்னன் எண்ணப்படி, புலவர் ஓடோடி வந்து, மன்னனுடன் தானும் வடக்கிருந்து இருவரும் இறந்தனர் என்பது சரித்திரம். இந்தச் சரித்திரம் நட்பை, நல்ல நட்பை, உயிர் நட்பை எவ்வாறு படம்போட்டுக் காட்டுகிறது பார்த்தீர்களா! இளைஞர்களே! நல்லவற்றைப் படியுங்கள். இராமாயணம், மகாபாரதம்.... மற்றுமுள்ள இலக்கியங்கள் வாழ்க்கைத் தத்துவத்தை அறிந்துகொள்வதற்கு உதவும்.

ஒருவனுக்கு ஏற்படும் தீயோர் நட்பு, ஏற்படுத்தும் துன்பம் மிக அதிகமாகும். பயன் வரும்பொழுது நட்புப் பாராட்டிப், பயன் வராதபொழுது நட்பைக் கைவிடும் தீயோரின் உறவு இருந்தால் என்ன? போனால் என்ன? போர் புரியப் போகும்பொழுது, அமர்ந்திருப்பவனைத் தள்ளிவிட்டு ஓடும் அறிவற்ற குதிரைபோன்ற தீயவரின் உறவைவிட நாம் தனித்திருப்பதே சிறந்ததாகும்.

சொல்வது ஒன்றாகவும், செய்வது வேறாகவும் இருக்கும், வஞ்சகனின் நட்பைக் கனவில் நினைத்தாலும் கலக்கமே விளையும்.

*எங்கே உண்மை இருக்கிறதோ அங்கே தன்னலம் இருப்பதில்லை.*

இளைஞர்களே! உங்கள் துன்பங்களுக்கு பெரிதும் காரணம் உங்கள் தவறான நட்புத் தெரிவாகும். சிந்தித்துப் பார்த்துத் துன்பங்களில் இருந்து விடுபடுங்கள்.

இலக்கியங்கள் நட்பை அழகாகக் படம்பிடித்துக் காட்டுகின்றன. மகாபாரதத்தில் காட்டப்பட்டுள்ள நட்பைப் பார்க்கலாம் வாருங்கள்! (தொடரும்...

## இறைவனின் திருவடி நோகாதா?

ஒரு காலத்தில் பாண்டிய நாட்டை இராசசேகர பாண்டியன் என்ற அரசன் ஆண்டு வந்தான். மதுரையம்பதியாகிய வெள்ளியம்பலத்தில் திருநடனம் புரிகின்ற சிவபெருமான்மீது பேரன்பு கொண்டிருந்தான் அவன். அதனால் நாட்டியக் கலை தவிர்த்து ஏனைய அறுபத்து மூன்று கலைகளிலும் தேர்ச்சி பெற்றான். நீதிநெறி வழுவாது அரசாட்சி செய்து வந்தான்.

அப்பொழுது சோழ நாட்டைக் கரிகால் சோழன் என்பவன் ஆண்டு வந்தான். அறுபத்து நான்கு கலைகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தான் அவன்.

சோழநாட்டுப் புலவர் ஒருவர் பாண்டிய நாட்டிற்கு வருகை தந்தார். பாண்டிய அரசனை வணங்கிய அவர், "எம் அரசர் அறுபத்து நான்கு கலைகளிலும் நன்கு தேர்ச்சி பெற்றவர். நீரோ நாட்டியக் கலையைப் பற்றிச் சிறிதும் அறியாதவர்" என்று இகழ்ந்து உரைத்தார்.

இதைக்கேட்ட பாண்டியன் தன்மானம் மிக்கவனாய், "விரைவில் நானும் நாட்டியக் கலையில் தேர்ச்சி பெறுவேன்" என்றான்.

"எம்பெருமான் சிவபெருமான் ஆடுகின்ற நாட்டியக் கலையை நானும் கற்கவேண்டிய சூழல் வந்தது. இறைவனுடைய திருவருள்தான்" என்று நினைத்த அவன் நாட்டியக் கலையைக் கருத்தூன்றிப் பயின்று வரலானான்.

நாட்டியக் கலையில் தொடர்ந்து பயிற்சி பெற்ற அவன் சிறிது உடல் சோர்ந்தான். "இரவும் பகலும் இடையறாது வெள்ளியம்பலத்தே நாட்டியம் ஆடும் இறைவனுக்கும் இச்சோர்வு ஏற்படும் அன்றோ? அவருடைய திருவடி வருந்தும் என்பதை அறிந்தும் அடியவனாகிய நான் வாளா இருப்பதா? என்ன செய்வது?" என்று சிந்தித்தான் அவன். இதுவே நல்ல வழி என்ற முடிவுக்கு வந்தான்.

சிவராத்திரித் திருநாள் வந்தது. இறைவனுக்குச் சிறப்புப் பூசைகள் செய்த அவன் கண்ணீர் வழியக் கைகூப்பி வணங்கினான். "இறைவா! நின்ற திருவடியை எடுத்து வீசி எடுத்த திருவடியைக் கீழே ஊன்றிக் கால் மாற்றியாட வேண்டும். அதை அடியவன் காணவேண்டும். தாங்கள் அங்ஙனம் செய்யாது ஒழியின் அடியேன் இறந்து விடுவேன்" என்று தன் உடைவாளை உருவி அதன்மேல் குப்புற விழ முயன்றான்.

உடனே இறைவன் தனது வலது காலை எடுத்து வீசிக் கால் மாற்றி ஆடினார். இதைக் கண்ட பாண்டியன் மகிழ்ச்சியுடன் இறைவனைப் புகழ்ந்தான்.

*உண்மை, ஒழிவு மறைவு இல்லாத வெளிப்படையையே விரும்புகிறது.*

# கற்பனைகளும் காட்சிகளும்

– திரு இராமலிங்கம் ஜெயபாலன் அவர்கள் –

கற்பனையென்பது அகக்காட்சி, காணாத ஒன்றைக் காணுவதற்கு முன், அறிகின்ற அனைத்து விடயங்களையும் கொண்டு இவ்வாறு இருக்குமோ? அவ்வாறு இருக்குமோ? என்று கற்பனை செய்து பார்ப்பது. ஆனால் நேரில் நாம் கற்பனை செய்து பார்த்ததைக் காண்கின்றபோது நாம் கற்பனை செய்து பார்த்தது, அப்படியே இருக்க வேண்டும் என்பதில்லை. ஆனால் நிஜத்தைக் கண்டவுடன் கற்பனையை மறந்து விடுகின்றோம். எவ்வாறாயினும் எம் வாழ்வில் பல விடயங்கள் கற்பனைகளாகவே முடிந்து விடுகின்றன. அவை நிதர்சனங்களாவதில்லை. இந்தவகையில் மனிதன் கற்பனைக்குள்ளே தான் அதிக மகிழ்ச்சியாக வாழ்கின்றான். இருந்தாலும் கற்பனைதான் மொழியுட்பட மனித அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கெல்லாம் அடிப்படையாகும். காரணம் கற்பனை என்பது உருவகம், அதாவது நாம் ஒன்றை உருவாக்குவதற்கு முன் கற்பனையில் உருவகம் செய்து சிலவேளை மாதிரி உருவை வரைந்தோ, உருவாக்கியோ காட்சிப்படுத்தி மற்றவர்களையும், உருவாக்கக்கூடிய உண்மை உருவை கற்பனை செய்துபார்க்கத் தூண்டுகின்றோம். உதாரணமாக கட்டிடங்கள், வீடுகள், ஆலயங்கள் மற்றும் மாதிரிக் கிராமங்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள், தொழிற்சாலைகள் இன்னும் பலவற்றைக் குறிப்பிட முடியும்.

ஆகவே கற்பனைதான் ஆற்றலாகவும் அறிவாகவும் கலைகள் எல்லாவற்றிற்கும் காரணமாக அமைவதைக் காண்கின்றோம். இந்தவகையில் இயற்கையில் இயங்கியலைக் கொண்டு, இறைவனின் படைப்பாற்றலையும், படைப்பதற்கு முன்னான அவன் உருவகத்தையும் பரிணாமத்துக்குள்ளாகக் காண்கிறோம். உதாரணம் ஒரு கருவின் மரபணுவிலேயே பரிணாமத்தின் திட்டம் அடங்கியிருப்பதையும் ஒரு குழந்தை கருவில் உருவாகும்போது உள்ளுறுப்புக்களும், வெளியுறுப்புக்களும் திட்டமிடப்பட்டிருப்பதைச் சொல்லமுடியும். எவ்வாறாயினும் இறைவன் இந்த உலகைப் படைத்த விதத்தை யாரும் நேரடியாகக் கண்டோ அல்லது புகைப்படம் எடுத்தோ வைக்கவில்லை, இப்படித்தான் இறைவன் உலகைப் படைத்தான் என்று நம்புவதற்கு, ஆகவே அவை எப்போதும் கற்பனையாக மட்டுமே, எம்மால் காணமுடியும் என்பதால், பல கற்பனைகள் பலரால் இயற்கையின் படைப்புக்கள் பற்றிச் சொல்லக் காரணமாகும். ஆனாலும் கற்பனைகள் என்பது பொய்கள் அல்ல. அவரவர் அறிவின் கனதியைக் கொண்டே அவை உண்மையாகவும் பொய்யாகவும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றனவாகும். மேலும் இன்றைய நவீன அறிவியல்கள் புதிய வகையில் படைப்பையும் பரிணாமத்தையும் கற்பனை செய்து பார்க்க உதவுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தவகையில் கற்பனையென்றால் பொய் என்று சொல்லாவிட்டாலும் கூட கற்பனை என்பது அகக்காட்சி, மற்றும் உருவகம் மட்டுமே. அவை நிஜமாகி விட்டால் கற்பனை என்ற அந்தஸ்தை இழந்து விடுகின்றது, அதற்காக கற்பனையென்றால் பொய்யென்று

*தோல்வி மனச் சோர்வைத் தருவதில்லை, மாறாக ஊக்கத்தையே தருகின்றது.*

மட்டும் அர்த்தங் கொள்ளாதவிடத்தும், கற்பனை கற்பனையாக மட்டும் இருக்கும் வரை அவை உண்மையாக இருக்கவேண்டிய அவசியமும் இல்லை. தவிர கற்பனைதான் அழகியலாகவும், நிஜத்தைவிட மக்களைக் கவர்வதாகவும் இருந்தாலும் இன்றும் இருப்பதாலும் கலைகளும் கற்பனைகளும்தான் மனங்களை ஆற்றுப்படுத்த உதவுகின்றன. மேலும் நிர்வாணமாக இருக்கிற அறிவியல்களுக்கு உடையாகவும் அழகியலை ஏற்படுத்துவதால் மிகைப்படுத்தப்பட்டவைகளாகவும் உண்மைகளைப் பல மடங்கு பெருப்பித்தும் காட்டியும் விடுகின்றன. இதனால் இவை பொய்யாகவும் மாறிவிடுகின்றது. எவ்வாறாயின் பொய்கள்கூட மக்களை நல்வழிப்படுத்தும் கருவிகளாக, கற்பனையின் பல் நோக்கங்களை புராண இதிகாச இலக்கியங்களில் இருந்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

## கடவுளும் கற்பனைகளும்

கற்பனை கடந்த ஜோதி கருணையே உருவமாகி என்ற வாக்கியத்தில், இறைவன் கற்பனைக்குள் அடங்கமுடியாதவனாகக் காட்டப்பட்டமையானது இறைவனின் பேராற்றல் எல்லாமே மனிதனுக்குப் பயன்படுபவை அல்ல. இதனால் அவன் கற்பனைக்கு அடங்காது இருந்தாலும், மனிதர்களுக்கும் ஏனைய ஜீவராசிகளுக்கும் அவை அவைக்கு ஏற்ற விதத்தில் பயன்படுகின்ற, கருணையை உருவகம் செய்து கடவுளாக வழிபடுதலே, கடவுளும் கற்பனையும் ஆகும். உதாரணம் மழை பெய்கின்றது. நிலம் விளைந்து உயிர்களுக்கு உணவு கிடைக்கின்றது. ஆனால் மழை நிலத்திற்கு மட்டுமா பெய்கின்றது. கடலிலும் பெய்கின்றது, அதேபோல் இறைவன் பூமியைப் படைத்து உயிரினங்கள் வாழ வழிசமைத்துள்ளான், ஆனால் இறைவன் படைப்பில் பூமி மட்டுமா இருக்கின்றது. உயிரினங்கள் வாழாத எத்தனையோ கோள்களையும் அல்லவா அவன் படைத்துவிட்டுள்ளான். மேலும் இறைவன் விருப்பு வெறுப்பு இன்ப துன்பம் பற்றுப் பாசம் இல்லாது இயந்திரத் தன்மையாக இயற்கையை இயக்கினாலும் படைப்பின் வழி நாம் அனுபவிக்கின்ற கருணையின் பரிணாமம் அனைத்து உயிருக்கும் தாயின் அன்பு பொதுவாக இருப்பதைக் காண முடியும். மனிதரில் தந்தையின் அன்பு, அண்ணன் தம்பி அன்பு, மாமன் மச்சான் அன்பு, நண்பன், காதலன் காதலி அன்பு என பல்வகை அன்பை, கடவுளாகக் காண்பது கற்பனையின் முக்கிய விடயமாகும்.

## அறிவியல்களும் கற்பனைகளும்

கற்பனைதான் அனைத்து அறிவியல்களின் தோற்றங்களுக்கு அடிப்படையானது என்பது நாம் கண்ட உண்மை. ஆனால் மனித நாகரீக காலத்தில் மனிதர்கள் மரபியல் சிந்தனைகள் காரணமாக, புதிய கருத்துக்களை அறிய ஆர்வம் காட்டாமையால், புனைவுக் கற்பனைகளால் அவர்களைத் திசை திருப்பி அறிவியல்களை ஏற்றுக் கொள்ளச் செய்யும் முயற்சியாகவும் கற்பனைகள் பயன்பட்டும் இருக்கின்றன. இந்த வகையில் நாட்களையும் நாட்காட்டியையும் கண்டுபிடிக்குமுன் பிறைகளைப் பார்த்தே தமது சகல கடமைகளையும் செய்து வந்தனர். ஆனால் பிறை பார்ப்பதில் ஏற்படும் முரண்பாடு காரணமாக மனிதர்கள் ஒற்றுமையாகச் செயற்படும் சந்தர்ப்பங்களைத் தவற விட்டு பெரும் இழப்புக்களுக்கும் கஷ்ட துன்பங்களுக்கும் காரணமானார்கள். இதனால் நாட்களை வேறுபடுத்திக் கண்டறியும் முறையை உருவாக்கிக் கொள்ள மனிதன் நிர்ப்பந்திக்கப்பட்டான். இதனால் அவனது

*சொந்தக் காலில் நிற்க உதவுவதே கல்வி.*

அறிவு பரிணாமமடைய, பிறையைப் பார்க் காமலேயே நாட்களைக் கணக்கிடக் கற்றுக் கொண்டான். இருந்தாலும் சில மரபியல் சிந்தனைவாதிகள் அந்த முறைக்கு தடை போட்டனர். இதைக் கடவுள் பெயரால் வெற்றிகொள்ள, உருவகம் செய்யப்பட்ட கதைதான் சந்திரனைப் பிள்ளையார் சபித் தமை காரணமாக நாலாம் பிறையைப் பார்ப் பது, துன்பம் ஏற்படும் என்ற கருத்தைச் சொல்லும் கதையாகும். தவிர காலங்களை யும் விரத நாட்களின் எண்ணிக்கையையும் கணக்கிடுவதற்காக சாணத்தினால் பிள்ளை யாரின் உருவங்கள் பலவற்றைச் செய்து பாதுகாத்து வைத்தார்கள். ஆனால் எண் கணிப்பீடு உருவான பிற்பாடு அவற்றைக் குளங்களில் கரைத்து விரதத்தை முடித்துக் கொள்ளும் விழாக்கள் மனிதர்கள் எண் களைக் கணக்கிட உருவங்களின் தேவை இல்லை என அறிவிக்கவே அவ்வாறு செய் தார்கள்.

## மறைபொருளும் கற்பனைகளும்

நேரடியாக புனைவு கற்பனையாக வும் மறைமுகமாக உண்மைக் கருத்தை சொல்வதாகவும், சொல்லப்படுகின்ற புராணங் கள் பற்றி ஆராய்ந்தால் முக்கியமாக பிள்ளையார் புராணத்தில் பிள்ளையாரின் வரலாற்றைக் குறிப்பிட முடியும். அதாவது இந்து மதத்தின் அறுவகைச் சமயமுமே இறக்குமதி செய்யப்பட்டவையல்ல. மாறாக அவை இயற்கை சார்ந்த வெவ்வேறு நிலப் பண்புகளுக்குரியவையாகும். இருந்தாலும் வெவ்வேறு கால ஆட்சிகளினால் அவை உலகம் முழுவதும் பரப்பப்பட்டு, அந்தந்த சமயங்களின் முழுமுதல் கடவுளாக வழி பாடு செய்யப்பட்டமையால் நிலக்கடவுளாக அந்தந்தக் கடவுளர்களைச் சொன்னால் தரம் தாழ்த்துவதாக அமைந்துவிடும் என்பதால் மறைத்துச் சொல்லப்பட்ட மறை பொருள் கற்பனைதான் மருதநிலக் கடவுளான இந்திர னின் பட்டத்து யானையே பிள்ளையாரின் தலையாகச் சொல்லப்பட்டமையாகும்.

காரணம் யானையும் எலியும் வயல் நிலங்களில் தொல்லை தரும் பிராணிகளாக இருந்தமையால் அவற்றை வசியப்படுத்தி கட்டுப்படுத்த இடம்பெற்ற வழிபாட்டு முறை தான் பிள்ளையார் வழிபாட்டின் தோற்றம் ஆகும்.

இந்தவகையில் பூமியின் புதல்வர் கள் என்று சொல்லப்படுகின்ற அரக்கர்கள் அசுரர்கள் மண்ணின் மைந்தர்களாகவும், பொதுமக்களாகவும், சூரியவம்சம் எனப்படு வது மூத்த ஆண்வழி அரச அம்சங்களை யும் சந்திரவம்சம் எனப்படுவது பெண்வழி அரச வம்சங்களையும் பிரம்மனின் வம்சமாக பிராமணர்களையும், இன்னும் பல வம்சங் களையும் புராண இதிகாசங்கள் சொன்னா லும் பிராமண வம்சங்களில் இருந்தே அதிக அசுரர்கள் அரக்கர்கள் உருவாகி அனைத் துக் குலக் கடவுளர்களுக்கும் பலியாகி வழிபாடுகள் அனைத்தையுமே தமது கட்டுப் பாட்டில் கொண்டு வந்தாலும் அந்தந்த குலத் தவராலும் பாரம்பரியமாக இடம்பெறுகின்ற வழிபாடுகளும் இன்றும் காணப்படுகின்றது.

## அதீத கற்பனைகள்

பல்வேறு வழிபாட்டு முறைகளும் மூட நம்பிக்கைகளும் வளக்கொழிந்து போகச் செய்யவும், அறிவியல்களை மனிதர் கள் அறிந்துகொள்ள ஆர்வத்தை தூண்ட வுமே அதீத கற்பனைகள் பயன்படுத்தப்பட் டன. காலப்போக்கில் அதுவே அறியாமை யாகி மத நம்பிக்கைகளிடையே தீர்க்கப்பட முடியாத பிணக்குகளையும் உருவாக்கியும் விட்டிருந்தாலும் இந்துமதம், அனுபவம் மற்றும் அறிவினால் பிணைக்கப்பட்டு

*வாழ்க்கையை ரசிப்பவர்களே நீண்டகாலம் வாழ்கின்றார்கள்.*

இருப்பதால் தன்னை புதுப்பிக்கும் ஆற்றலைப்பெற்று இருக்கின்றமை குறிப்பிடத் தக்கது.

## படிமக் கற்பனைகள்

ஒன்றை விரிவாக எழுதுவதற்கும் சுருக்கி எழுதுவதற்கும் இடையே வேறுபாடு ஏற்பட்ட வண்ணம் அனைத்தையும் உள்ளடக்கி சுருக்கி எழுதும்போது, விளங்கிக் கொள்வதில் சிரமம் ஏற்படுகின்றது. இது கட்டுரைக்கு ஏற்படும் நிலையாக இருக்கும் போது அறிவியல்களை வெளிப்படையாக பேசமுடியாத காலத்தில் கவிதை வடிவிலான கதைக்குள் படைப்பையும் பரிணாம வரலாறையும் கொள்கை கோட்பாடு அறநெறிகள் வழிபாடு, எனப் பல நோக்கை இறைவன் ஒரு சிறு கருவுக்குள் அல்லது வித்துக்குள் மிகப்பிரமாண்டமான உருவத்தை உருவாக்கும் மரபணுபோலே, கண்களுக்குப் புலப்படாது மறைத்து வைத்தது போல், பல நோக்கை பல படிகளை மடித்து ஒரே படிமத்துக்குள் வைத்திருக்கின்ற அற்புதம் புராண இதிகாச இலக்கியங்களில் காணப்படுகின்றது.

இந்தவகையில் ஆணாதிக்க வம்சம், பெண்வழியால் மாறாது தொடர்ந்து வருவதை காட்டுவதாக, கௌரவர்கள் நூறுபேர் பெண்ணின் வயிற்றில் வளராது, பிறக்கும் குழந்தைகளாகக் காட்டப்படுவதை நோக்காகக் கொண்டிருந்தாலும், படைப்பையும் பரிணாமத்தையும் கூட அது காட்டுவதாக அமைக்கப்பட்டுள்ளமை படிமக் கற்பனை ஆகும்.

இதேபோல் முருகனுடைய தோற்றமும் அமைகின்றது. அதாவது படைப்பையும் பரிணாமத்தையும் கூடவே ஆண்வழி அரசாட்சிப் பரம்பரையையும் குறிக்கின்றது. மேலும் தமிழரின் முன்னோர்கள் உலகெங்கும் தமது ஆட்சிப் பரப்பை விரிவாக்கியாண்டார்கள். ஆனாலும் அவர்கள் ஆண்ட பிரதேசத்தில் எல்லாம் மண்ணின் மைந்தர்களாக இருக்க வில்லை. இதைக் குறியீடாகக் கொண்டே "கல்தோன்றி மண் தோன்றுமுன் வாளுடன் தோன்றிய மூத்த குடி" என்ற வாசகம் குறிப்பிடுகின்றது.

அடுத்து மகாபாரதம் சந்திர வம்ச அரசாட்சி பற்றிக் குறிப்பிட்டாலும் பெண்வழி பரிணாமம் அனைத்தையுமே, ஒரே படிமத்துக்குள் காட்டுவதால், மனித நாகரீகத்தின் உயர் விழுமியங்களை மட்டுமல்ல, அடித்தட்ட மக்களின் வாழ்வின் விழுமியங்களையும் கூட மறைத்தும் வரலாற்றையும் இணைத்துப் படிம முறையில் சொல்கின்றது. மேலும் ஆன்மீக புராணங்களையும் கூட சொல்கிறது. உதாரணம் பெண் தெய்வ வழிபாட்டில், நாம் ஒரு பெண் தெய்வத்தை முதன்மைப் படுத்தி வழிபடும்போது, அனைத்து பெண் தெய்வங்களும் அந்த ஒரே பெண் தெய்வத்தில் காட்சி தரும்போது, அனைத்து ஆண் தெய்வங்களின் மனைவிமாரும் ஒரே உருவுக்குள் மறைந்து காட்சி தருவதையும் குறிப்பிடலாம். இருந்தாலும் படிம முறையில் பரிணாமமே சொல்லப்படுகின்றமை, மறுப்பதற்கும் இல்லை. அதற்கான சான்று வாழ்வு முறைகள் இந்தியாவில் இன்றும் இருக்கிறது.

## கட்டவிழும் கற்பனைகள்

புராண இதிகாச இலக்கியங்கள் கற்பனையில் பின்னப்பட்டவையாக இருந்தாலும் ஒரு நேர்த்தியான வரலாறு அதற்குள் ஒளிந்து இருக்கின்றது. அதைச் சரியாக விடுவிக்க வேண்டுமாகில் இறைஞானம் கிடைக்கவேண்டும். அடுத்து அதற்குரிய சரியான அனுபவங்கள் கிடைக்கவேண்டும். மேலும் சிக்கல்படுகின்ற அனுபவங்கள் தான் சிக்கலை விடுவிக்கவும் உதவுகின்றது.

*தாங்கிக்கொள்வது நம் விதியை வெல்ல சிறந்த வழியாகும்.*

தவிர மேலோட்டமாக அறிகின்றவற்றை மட்டுமே நம்பி அனைத்தையும் ஆராய முற்பட்டால் முதலில் நூல் விடுபட்டாலும் அடியில் அது அதிகமாக சிக்கல்பட்டுப்போகும். எவ்வாறாயினும் வரலாறுகள் மட்டுமல்ல புராண இதிகாசங்கள், கொள்கை கோட்பாடு அறநெறிகள் எதிர்கால ஜனநாயகம் பற்றிய கனவுகள், விண்வெளி ஆராய்ச்சி, மருத்துவம், ஆன்மீகம், கலைகள் எனப் பற்பல உள்ளடக்கங்களை உடையது. உதாரணம் இராவணனின் புஸ்பக விமானமும், சடாயு என்னும் பறவையும் வானில் மோதிக் கொள்ளும் கற்பனை மனிதன் ஒருநாள் வானிலும் பயணம் செய்வான் என்பதையும் அதற்குரிய ஒப்பீட்டையும் செய்கின்றமை குறிப்பிடத்தக்கது. அதாவது பறவை வானில் பறக்க முடியும் என்றால் மனிதன் ஏன் வானில் அதற்குரிய கருவிகள்மூலம் பறக்கமுடியாது என்ற ஆராய்ச்சி அறிவும், அங்கு புலப்படுகின்றது. ஆனால் இது ஒன்றைக் காரணமாகக் கொள்ளமுடியாது என்பதற்கு, கற்பனைகள் சமகாலத்தில் பல்நோக்கை வெளிப்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

## செல்வர்களுக்கு மகிழ்ச்சி இல்லை

மக்கள் எல்லோரும் போற்றும் துறவி ஒருவர் அந்த நகரத்திற்கு வருகை தந்தார். அவருடைய அருளைப் பெறுவதற்காகக் கூட்டம் கூடியிருந்தது. பெருஞ் செல்வர் ஒருவரும் அந்தக் கூட்டத்தில் இருந்தார்.

துறவியை வணங்கிய செல்வர் "சுவாமி! என்னிடம் ஏராளமான செல்வம் உள்ளது. இருந்தாலும் நான் மகிழ்ச்சியாக இருக்க முடிவது இல்லை. என்ன காரணம்?" என்று கேட்டார்.

அதற்குத் துறவி ஏதும் பதில் பேசவில்லை. தன் அருகில் இருந்த மூன்று வயதுச் சிறுவனை அழைத்தார் அவர். காணிக்கையாக வந்திருந்த ஆப்பிள் பழக் கூடையிலிருந்து ஒரு பழத்தை அவனிடம் தந்தார். சிறுவன் மகிழ்ச்சியுடன் அந்தப் பழத்தை வாங்கிக் கொண்டான்.

துறவி இன்னொரு பழத்தை எடுத்துத் தந்தார். இன்னொரு கையில் அதை வாங்கினான் அவன். மூன்றாவதாக ஒரு பழத்தை அவனிடம் நீட்டினார்.

இரண்டு பழத்தையும் தன் நெஞ்சில் அணைத்துக்கொண்ட அவன் தன் கையை நீட்டி அந்தப் பழத்தை வாங்கினான்.

அப்போது அவன் அணைத்திருந்த பழம் ஒன்று நழுவித் தரையில் உருண்டது. அதை எடுக்கக் குனிந்தான் அவன். இன்னொரு பழமும் உருண்டு ஓடியது.

கிடைத்த ஆப்பிள் பழங்கள் நழுவிவிட்டதே என்ற ஏக்கத்தில் அந்தச் சிறுவன் அழத்தொடங்கினான்.

செல்வரைப் பார்த்துத் துறவி, "நடந்ததை எல்லாம் கவனித்தீரா? இரண்டு ஆப்பிள் பழம் போதும் என்று அந்தச் சிறுவன் நினைத்திருந்தால் மகிழ்ச்சியோடு இருந்திருக்கலாம். மேலும் ஆசைப்பட்டதால் துன்பப்பட வேண்டி வந்தது. செல்வர்கள் ஏன் மகிழ்ச்சியாக இல்லை என்பதற்கான காரணம் இப்பொழுது உங்களுக்குப் புரிந்திருக்கும்" என்றார்.

*சொல் என்பது மனித ஆற்றலை ஒழுங்குபடுத்துவதாகும்.*

# சந்நிதியான் ஆச்சிரமமும் சன்மார்க்கப் பணிகளும்

– திரு இராசையா ஸ்ரீதரன் அவர்கள் –

ஆற்றங்கரையில் அமர்ந்திருந்து அடியார்க்கருளும் பெருமானாக அருள்பாலிக்கும் அறுமுகன் சரவணன் திருவருளால் சீரோடுஞ் சிறப்போடும் அறப்பணி செய்து வருகின்ற சந்நிதியான் ஆச்சிரமம் ஒரு பாராட்டுக்குரிய பெருமைமிக்க ஆச்சிரமமாகும். இந்த ஆச்சிரமத்தின் பல்வேறு துறைசார்ந்த நன்மை தரும் பொதுப்பணிகள் ஏராளம். தாராள மனதுடன் ஏராளமான நல்ல பணிகளைச் செய்துவரும் சைவ சமயஞ் சார்ந்த சந்நிதியான் ஆச்சிரமம் செல்வச்சந்நிதியில் அமைந்திருக்கின்றமை சைவ சமயிகள் செய்த புனித புண்ணியப் பேறாகும்; தவப்பயனும் ஆகும்.

இந்தச் செல்வச்சந்நிதி ஆலயம் அமைந்திருக்கும் தொண்டைமானாறுப் பதியானது புனித முனிசிரேஷ்டர்கள் முனிபுங்கவர்கள் தோன்றிய ஒரு புண்ணியப் பதி ஆகும். இங்கே கோயில்கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் ஆற்றங்கரை வேலவனின் அருட்டிறம் சொல்லில் அடங்காது; சொல்லிமுடியாது.

உண்மையான பக்தியுடன் வழிபட்டு நிற்கும் அடியார் பெருமக்களுக்கு வேலவன் வேதனை தீர்த்தே ஆட்சி புரிகின்றான். வழிபடும் அடியார்களுடைய துன்ப துயரங்களைச் சோதித்து நின்று பார்த்து முறையாகக் களையச் செய்து அருள்புரியும் அழகே தனி. இது முருகனுக்கேயுரிய கருணைத்திறனாகும்.

இந்தத் தொண்டைமானாறு கோயில் அமைந்திருக்கும் இடம் தனி விசேடமானது; எங்கு திரும்பினாலும் அடியார் திருக்கூட்டம்; பார்க்கும் இடமெங்கும் நீக்கமற நெகிழ்ந்து இரண்டறக் கலந்து இருக்கும் கடவுள் ஆத்மாக்களுக்கு உண்மை நிலையை எடுத்துக் கூறுகின்ற தன்மை மிகவும் விசேடமாக உள்ள ஒரு தனித்துவமான உணர்வாகும். அக் கருணைக் கடவுள் முருகனேயாவான்.

முருகப்பெருமானுடைய அருட்பிரவாகத்தில் மூழ்கித் திளைப்பதற்கும் பூர்வ ஜென்ம புண்ணியம் செய்திருக்க வேண்டும். இல்லையேல் தொண்டைமானாற்றுக்கு வரவும் முடியாது. அந்த அருள் நிறைந்த பக்தி கலந்த மண்ணை மிதிக்கவும் முடியாது. அன்னதானக் கந்தனின் திருவருளுக்குப் பாத்திரமாகவும் முடியாது.

ஏனென்று கேட்டால் செல்வச்சந்நிதி ஆற்றங்கரை வேலவன் அருள்வசத்தாலேயே சந்நிதியான் ஆச்சிரமம் தனித்துவம் நிறைந்த நேர்மையான பாதையில் சென்று கொண்டு இருக்கின்றது. அதனுடைய பரந்த நோக்குள்ள புண்ணியப்பேறு நல்கும் அறப் பணிகள் நாட்டு மக்களுக்குப் பெரிதும் பயன் தருகின்ற நல்ல திருமிகு பணிகளாகும். இதனை ஆற்றங்கரையானின் திருவருளை

*வாய்ப்புக்களை உருவாக்கிக் கொள்கிறவனே சிறந்த அறிவாளி.*

முன் வைத்து, "நான் ஒன்றுமே செய்யவில்லை; எல்லாம் முருகனின் செயலே" என்று சேவை ஆற்றி வருகின்ற உயர்திரு மோகனதாஸ் சுவாமிகளின் நற்பண்பு போற்றுதற்குரியது.

"எல்லாம் நான் செய்கிறேன். என்னால் இது முடிந்தது" என்று மார்தட்டிச் சொல்லித் திரியும் மாந்தர் வாழ்கின்ற இன்றைய காலகட்டத்திலே, தன்னைத் தாழ்த்திக் கூறும் பண்புள்ள அவருக்கு நிகர் அவரே எனில் மிகையாகாது.

முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கும் கருணையுள்ளங்கொண்ட கந்தக் கடவுளின் திருவருள் வசத்தால் மோகன தாஸ் சுவாமிகள் செய்து வருகின்ற பயன் மிகு பணிகள் நல்லமுறையில் தொடர அருள்புரியுமாறு முருகனைப் பணிவதைவிட வேறு நம்மால் என்ன செய்ய முடியும்? சன்மார்க்க நெறி வழி நின்று அதிக எண்ணிக்கையிலான அறப்பணி செய்து வருகின்ற சந்நிதியான் ஆச்சிரமத்தைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. காந்தக் கண்களும் சாந்தப் பார்வையும் அமைதியான சுபாவமும் கொண்டு விளங்குகின்ற மோகனதாஸ் சுவாமிகள் இன்னும் நீண்ட நாட்களுக்கு வாழ்ந்து சமயப்பணியாற்ற வேண்டுமென்று பிரார்த்திக்கின்றோம்.

தொண்டைமானாறு செல்வச்சந்நிதியானுடைய பேரருட் கருணையால் சந்நிதியான் ஆச்சிரம குரு திரு மோகனதாஸ் சுவாமிகளும் அவரைச் சார்ந்தவர்களும் "ஞானச்சுடர்" அச்சேற அருமைப் பணியாற்றும் அருட்தொண்டர்களும் நோயற்ற வாழ்வில் குறைவற்ற செல்வத்தைப் பெற்று நீடுவாழ எல்லாம்வல்ல சந்நிதி வேலவனைப் பணிந்து சிந்தித்து வந்தித்துச் சேவித்து நிற்கின்றோம்.

## துறவியும் உழவனே

ஒருமுறை, புத்தர் பெருமான் கையில் பிச்சைப் பாத்திரத்துடன் ஓர் உழவனின் வீட்டின் முன் நின்றார். வெளியே வந்த உழவன் கோபத்துடன் "துறவியே! பிச்சை ஏற்கும் சோம்பேறி வாழ்வை ஏன் நடத்துகிறீர்? உமக்கே கேவலமாக இல்லையா? உடல் வலிமையோடு இருக்கின்ற நீர் ஏன் உழைக்கக் கூடாது? என்னைப் பார் நான் வயலில் உழுகிறேன். விதை விதைக்கிறேன். நெற்றி வியர்வை நிலத்தில் விழ ஓயாது உழைக்கிறேன். என் வாழ்க்கைக்குத் தேவையான உணவைப் பெறுகிறேன். என்னைப்போல நீரும் உழைத்தால் இப்படிப் பிச்சை எடுத்து அவமானப்பட வேண்டாம். என்னைப்போலப் பெருமையுடன் உணவு உண்ணலாமே" என்று கேட்டார்.

அதற்குப் புத்தர், "நானும் உழுது விதைத்த பின்தான் உணவு உண்கிறேன்" என்றார். "நீர் உழவரா? அதற்கான அடையாளம் ஏதும் உம்மிடம் இல்லையே. கலப்பை எங்கே? காளை மாடுகள் எங்கே? விதைகள் எங்கே?" என்று கேட்டான் அவன்.

"உழவனே! நான் சொல்வதைக் கவனமாகக் கேள். நம்பிக்கை என்னும் விதையை நான் விதைக்கிறேன். நான் செய்யும் நற்செயல்களை அந்த விதைக்கு மழை நீராகப் பாய்ச்சுகிறேன். விவேகமும் வைராக்கியமும் என் கலப்பையின் உறுப்புகள். என் உள்ளமே மாடுகளை வழிநடத்தும் கடிவாளம். தருமமே கலப்பையின் கைப்பிடி. தியானமே முள். மன அமைதியும் புலனடக்கமுமே எருதுகள். நான் மனம் என்னும் வயலை உழுது ஐயம், மயக்கம், அச்சம், பிறப்பு, இறப்பு ஆகிய களைகளை எடுத்து எறிகிறேன். அறுவடை செய்து கிடைக்கும் கனி நிர்வாணம் என்னும் பிறப்பு இறப்பு இல்லா நிலையாகும். இப்படி அறுவடை செய்வதால் எல்லாத் துன்பங்களும் அழிந்துவிடுகின்றன" என்று விளக்கம் தந்தார்.

இதைக்கேட்ட உழவன் அறிவு பெற்றான். அவருடைய திருவடிகளில் விழுந்து தன்னை மன்னிக்குமாறு வேண்டினான்.

*நகைச்சுவை என்பது பக்க விளைவுகள் எதுவுமில்லாத அரிய மருந்தாகும்.*


# படங்கள் தரும் பதிவுகள்



மாசி மாத ஞானச்சுடர் மலரின் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்...




கல்வியே மனிதனைச் செம்மைப்படுத்துகிறது.



மாசி மாத ஞானச்சுடர் மலரின் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்...



வாழ்வது முக்கியமல்ல; சிறப்பாக வாழ்வதே முக்கியம்.



(மேலே): மாசி மாத ஞானச்சுடர் மலரின் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்...

(கீழே): சந்நிதியான் ஆச்சிரமத்தினால் வறுமைக்கோட்டுக்குக் கீழ்ப்பட்ட மக்களுக்கான மாதாந்தம் வழங்கப்படும் பொருட்கள் பொதி செய்யப்படுவதையும், அதைப் பெறுவதற்காகக் காத்திருக்கும் மக்களும்...







(மேலே): சமுதாயப் பணிகளின் வரிசையில் பரு/ சித்திவிநாயகர் வித்தியாலய மாணவன் து. தருண் என்பவருக்கு வழங்கப்பட்ட துவிச்சக்கரவண்டியினை அவரது தந்தையார் பெற்றுக்கொள்கின்றார். (கீழே): வலிகாமம் தந்தை செல்வா தொடக்க நிலைப் பள்ளி மாணவர்களுக்காக 265 புத்தகங்கள் வழங்கப்பட்டபோது...



*நாம் உண்மையாக வாழ்வதென்பது கடமையைச் சரியாகச் செய்வதாகும்.*



வாசகர் போட்டி முடிவுகளுக்கான பரிசில்கள் பெற்றுக்கொண்டோரும்
ஏனைய ஆச்சிரம ஆர்வலர்களும்...



*கோபமும் பொறாமையும் மனிதனைக் கொன்றுவிடும் சக்தி படைத்தது.*

# கடவுளின் மூன்று நிலைகள்

– திரு P. சோமசுந்தரம் அவர்கள் –

சித்தாந்த சாஸ்திரத்தில் உலகிலுள்ள எல்லாப் பொருட்களையும் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்துள்ளார்கள். அவை யாவன: பசு, பதி, பாசம். பதி என்ற சொல் லிற்கு கடவுள் என்பர். கடவுள் என்ற சொல் லிற்குள் உலகிலுள்ள உயிருள்ளவை, உயிரற்றவை நட்சத்திரங்கள் கோள்கள் முதலியனவெல்லாம் அடங்கும். பசுவை ஆன்மாவென்றும் பாசத்தை ஆணவம், கன் மம், மாயையெனப் பிரிக்கலாம். பசு, பதி, பாசம் என்று கூறப்படும் எல்லாம் இயல் பாகவே என்றும் உள்ளவை ஆகவே இவற்றை அனாதியான நித்திய பொருட்கள் எனலாம். திருமூலரும் இக்கருத்தை வலி யுறுத்தி 115ஆம் பாடலில் பசு, பதி, பாசம் என்பன நித்தியப் பொருள்கள் எனக் கூறு கிறார். கடவுளின் மூன்று நிலைகளைப் பற்றி பல சமயப் புத்தகங்களில் விபரிக்கப்பட்டு உள்ளன. அவையாவன: சொரூபநிலை, தடத்த நிலை, திரோதான நிலை.

### சொரூப் நிலை:

சொரூப நிலையை அதன் இயல்பு நிலை அதன் சிறப்பு நிலையெனவும் கூற லாம். இந்நிலையிலுள்ள கடவுளிற்கு குணம் குறி இருப்பதில்லை. இக் கடவுளை மனம் வாக்கு காயத்தால் அறியமுடியாது. இப்படிப் பட்ட அனாதி முத்த சித்தராய் இருப்பவரைப் பரமசிவன் எனக் கூறலாம்.

### தடத்தநிலை:

குணம் குறியில்லாத கடவுள் ஆன் மாக்களிற்கும் எல்லா உயிர்கள்மேலும் இரக்கம் கொண்டு தனது சொரூப நிலையில் இருந்து பல படிகள் இறங்கி தடத்த நிலையை அடைந்து அருள்புரிகின்றான். மனிதன் தான் செய்த நல்வினை தீவினைக்கு ஏற்ப பல இன்ப துன்பங்களை அடைகிறான். எல்லோர்க்கும் கடவுள் பற்றிய அறிவு வெவ் வேறு அளவிலுண்டு. அதற்கு ஏற்ப பல்வேறு கடவுள்கள் வெவ்வேறு நாமத்துடனிருந்து அருள் புரிகின்றனர்.

நாமமில்லாத கடவுள் தடத்த நிலைக்கு மாறி பல்வேறு தொழில்களைச் செய்யும் போது செய்யும் தொழிலிற்கு ஏற்ப பல்வேறு நாமங்களைப் பெறுகின்றனர். சில உதா ரணங்கள் பின்வருமாறு காணப்படுகின்றன. ஒன்றுடனும் சேராது சுயம் பிரகாசமாய் நிற் கும் நிலையை சிவம் எனப் பெயர் பெறுவர். உலகெலாம் ஆகி வேறாகி நின்று உயிர் களின் வழி உடனாய் நிற்றலை சக்தியென வும் ஐந்தொழிலைச் செய்யும் நிலையை அதாவது ஆக்கல் காத்தல் மறைத்தல் அருளல் பதி எனவும் கூறப்படும்.

நமது உடலிற்குள் உயிர் இருப்பது போல அந்த உயிரிற்குள் உயிராய் கடவுள் இருக்கிறார். அப்படி இருப்பதைக் கடவுள் அந்தர்யாமியாய் இருக்கிறார் எனக் கூறப் படும். இதனையே கலப்பினால் ஒன்றாய் இருக்கும் நிலையென்பர். கடவுளின் குணங் கள் பலவற்றை ஒன்று சேர்த்து எட்டுக் குணங்களில் அடக்கிவிடலாம். அதனை எண் குணத்தான் எனப்படும். ஆனால் அவன் சொரூப நிலையில் "குணாதீதன்" கடவுள் இருக்கும் எட்டு இடங்களை அஷ்ட மூர்த்தம் எனப்படும். இவ்வாறு தடத்த நிலையை

*இயற்கை என்ற புத்தகத்தின் ஆசிரியர் இறைவன்.*

மேலும் பலவாறாகப் பிரிக்கலாம். இதுவரையில் கடவுளின் சொரூப நிலையையும் தடத்த நிலையையும் பார்த்தோம். இவை இரண்டையும் தவிர மூன்றாவது நிலையை "நிராதரன்" நிலை எனப்படும்.

**நிராதர நிலை:**

இந்நிலைபற்றி சிவஞான சித்தியாரிலும் திருக்களிற்றுப்படியாரிலும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

திருக்களிற்றுப்படியாரில் உய்யவந்த தேவ நாயனார் இரண்டு பாடல்களில் குறிப் பிட்டுள்ளார். அவர் தனது 22ஆவது பாடலில் இரண்டு வகை யோகங்கள் உள்ளனவென்றும், அவற்றுள் ஆதாரயோகம் ஆக்கப்பட்ட பொருளானது எனவும் நிராதர யோகம் எங்கேயும் காணப்படாத பொருளால் உண்டானது எனவும் கூறுகிறார். மேலும் விளக்கம் 25ஆம் பாடலில் கூறியுள்ளார்.

ஆக்கப்படாத பொருளாய் அனைத்தினிலும்
தாக்கிதான் ஒன்றோடும் தாக்காதே நீக்கியுடன்
நிற்கும் பொருளுடனே நிற்கும் பொருளுடனாய்
நிற்கை நிராதாரமாம்.

ஒருவராலும் ஆக்கப்படாத பொருளாய் தான் எல்லாவற்றிலும் சேர்ந்தும் அதனை எல்லா வற்றிலிருந்தும் அன்னியமாக நீக்கி கூடிநிற்கும் திருவருளுடனே பொருந்தி நிற்றலே நிராதாரமாம்.

மேற்கூறிய கருத்தை மேலும் அதிக விளக்கமாக அருணந்தி சிவாச்சாரியார் நாங்கள் எந்த நிலையிலிருந்து எப்படிப்பட்ட நிலையில் அறியலாமென தனது சிவஞான சித்தியாரில் 30ஆம் பாடலாகத் தந்துள்ளார்.

அறியாமை அறிவு அகற்றி அறிவினுள்ள
அறிவுதனை அருளினான் அறியாதே அறிந்து
குறியாதே குறித்து அந்தக் கரணங்களோடும்
கூடாதே வாடாதே குழைந்தி ருப்பவையாகில்
பிரியாத சிவன் தானே பிறிந்து தோன்றி
பிரபஞ்ச பேதமெலாந் தானாய் தோன்றி
நெறியாலே இவ்வை எல்லாம் அல்ல வாகி
நின்றென்றுந் தோன்றிடுவன் நிராதரனாயே.

**அறியாமை:**

ஆணவம் ஆன்மாக்களுடன் அநாதியாகச் சேர்ந்த நிலையில் காணப்படுகிறது. மனிதன் தான் செய்த தொழில்களையெல்லாம் தான் செய்கிறதாகக் கருதுகிறான். ஒவ்வொரு வரும் தான் வைத்திருக்கும் பொருட்களையெல்லாம் தனது பொருட்கள் என்கிறான். இவை யாவும் மனிதனின் அறியாமையாகும்.

**அறிவு:**

அறிவைப் பெறுவதற்கு உதவுகின்றனவற்றைத் தத்துவங்கள் எனக் கூறப்படும். மனிதன் அறிவைப் பெறுவதற்கான தத்துவங்கள் முப்பத்தாறு (36) உள்ளன. அவையாவன,

*தோல்வியை ஒப்புக்கொள்ளத் தயங்காதே. தோல்வியில் இருந்து கற்றுக்கொள்ள நிறைய உள்ளது.*

24 ஆன்ம தத்துவங்கள், 7 வித்யா தத்துவங்கள், 5 சிவ தத்துவங்கள். நிராதரன் நிலையிலுள்ள இறைவனை உணர்த்துவதற்கு உணர்வதற்கு நாம் நம்மிடமுள்ள அறியாமையையும் அறிவையும் அகற்றவேண்டும். அதன் பின்புதான் அறிவினுள்ளே அறிவதனைப் பெறுவோம். அப்படிப் பெறுவதற்கு அறிவினான் ஆகிய கடவுள் உதவியினால் அறியாததை அறிகிறோம். அறிவைப் பெறுவதற்கு ஊனக் கண்கள் அந்தக் கரணங்கள் முதலியன உதவுகின்றன. உண்மையை அறிவதற்கு தற்போதத்தால் மட்டும் நிச்சயித்தல் முடியாது. இறை அருளால் நிச்சயிக்க வேண்டும் என்பதைக் குறியாதே குறத்து என்கிறார். அந்தக் கரணங்களோடு கூடிய இன்பநிலை மாற இடமுண்டு. அந்நிலையில் வாட்டம் உண்டாகாது இருப்பதற்கு தியான நிலையில் இறை ஞானத்துடனும் அருளுடனும் இருக்க வேண்டும். இந்நிலையில்தான் பொருட் தன்மையால் பேதமாகவிருக்கும் இறைவன் கலப்புப் பற்றிய நிலையில் அபேதமாயிருப்பவன் ஒற்றித்து நிற்பவன் ஒன்றலும் பற்றில்லாதவனாகக் காணப்படுவதே நிராதரன் நிலையாகும்.

## நலந் தருவான்!

அருள் தரும் ஆறுமுகன்
அழகு வேல் வடிவினிலே
அமர்ந்த இடம் செல்வச்சந்நிதி!
இருள் வினை நீக்கி எங்கள்
இடர் களையும் அந்த
இனியனே என்றென்றும் எமக்குக் கதி!

பண்ணெடுத் தவன் புகழைப்
பாடி மகிழ்ந் தேத்திடவே
பரிவு கொண்டெமை அணைப்பான் பார்வதி மகன்!
வண்ண மயில் மீது வந்து,
வணங்கிடும் அடியவர்க்கு,
வாரி அருள் வழங்கிடுவான் கந்தன்! குகன்!

"அஞ்சேல்!" என அபயம்
அளித்திடும் ஆண்டவனை
அண்டிவந்து தொழுபவரோ பல கோடி!
வெஞ்சமரில் சூரனையும்
வெற்றி கொண்ட வேலவனை
வேண்டித் தொழுவர் திருப் புகழ்பாடி!

கஞ்ச மலர் மீதுதித்த
கந்தன் புகழ் பாடுதல் போல்
களிப்பேதும் உண்டோ எம் வாழ்வினிலே!
நஞ்சுண்ட கண்டன் மகன்
நமக்கெல்லாம் தஞ்சம் அவன்!
நமைக் காத்து நலந்தருவான் பாரினிலே!

- கி. குலசேகரன் -

*உலகில் தன்னம்பிக்கையே நிகரில்லாத செல்வம்.*

# இறைவனின் உண்மை அன்பன் யார்?

– **திரு பு. கதிரித்தம்பி** அவர்கள் –

உலகத்துக்குக் கருத்தாவாகிய சிவ பெருமான் மனிதனை வினையை ஒழிக்க பூமியில் படைக்கின்றான். ஆறறிவு படைத்த மனிதன், இந்த உண்மையை உணர்ந்து, வினைகளை ஒழிக்க அறப்பணியாகிய கோவில், கோபுரம் இறைவனுக்கு அமைத்து தினமும் இறைவனை வழிபட்டு வரவேண்டும். அடியார் களுக்கு அன்னம் பாலித்து அறச்சாலை களையும் நாட்டிடலாம். இப்பணிகள்மூலம் வினைகள் களையப்பட்டு திரும்பவும் இறை வனடி சேரலாம். எனவே இறைவனின் உண்மை அன்பன், இறைபணி செய்பவன் என்பது வெள்ளிடைமலை.

பண்டைய மன்னர்களும் கோவில் கள், கோபுரங்கள், அறச்சாலைகள் பல நாட்டி தர்மஞ் செய்தார்கள். இந்தியாவை ஆண்ட சேரர், சோழர், பாண்டிய மன்னர்கள் அன்று அமைத்த கோவில்கள், கோபுரங்கள் இன்று வாழும் மனிதர்களுக்கு நினைவூட்டும் சின்னங்களாக காட்சியளிக்கின்றன. பிற சமயத்தவர்களும் நன்கு உணரத்தக்கதாக சைவ ஆலயங்கள் மிளிர்கின்றன. சைவத் தின் அடையாளத்தை கோபுரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. சமய அடியார்கள், திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்க வாசகர் தோன்றி பல அற்புதங்களைச் செய்து சைவத்தின் உண்மை நிலையை உலகுக்கு அறிய வைத்தனர். அரசர்கள் போட்டி போட்டுக்கொண்டு வானளாவிய பல கோபுரங்களை பல இடங்களில் அமைத்து சைவ ஆலயங்களின் மகிமையை உல கிற்கு உணர்த்தினர்.

அதே காலத்தில் இலங்கையில் திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் என்னும் பாடல்பெற்ற தலங்களுடன், சிலா பம் முன்னேஸ்வரம் ஆலயமும் அருள்பாலிக் கும் ஆலயங்களாக விளங்கின. இவ்வளர்ச்சி யைக் கண்ணுற்ற புத்த குருமார்கள் தமது புத்த சமயம் அழியப்போகின்றதென்று அச்சங் கொண்டனர். இதனால் புத்த பிக்கு கள் சிலர் அரசனை அணுகி எமது புத்த சமயம் உண்மையான சமயம் என்று வாதிட்டு தில்லைச் சிதம்பரத்தை புத்த விகாரை ஆக்குவோம் எனச் சூளுரைத்தனர். புத்த பிக்குகள் அரசனையும் அவன் மகள் பேச முடியாத ஊமைப் பெண்ணையும் அழைத்துக்கொண்டு, சிதம்பரத்தை அடைந் தனர். தங்களிடம் வாதிட வரும்படி மணிவாச கரை வேண்ட அவர் திரையிட்டு, திரையின் மறுபக்கத்தில் புத்த பிக்குகளை அமர வைத்து, வினாக்களைக் கேட்டார். என்ன அதிசயம் புத்த பிக்குகள் பேசமுடியாதவர் களாக நின்றனர். உடனே மாணிக்கவாசகர் அரசனின் ஊமைப் பெண்ணிடம் கேள்விகள் கேட்க, அவள் பேசும் திறன்பெற்று வினாக் களுக்குத் தகுந்த விடையளித்தாள். இதைக் கண்ணுற்ற அரசன் மணிவாசகரிடம் மன்னிப் புக்கேட்டு, தானும் சைவ சமயத்தில் இணைந்து கொண்டான். புத்த பிக்குகள் அரசனுக்கு அளித்த வாக்கின்படி கழுமரம் ஏறினர். இவ் வரலாறு திருவாதவூரர் புராண நூலில் கூறப்பட்டுள்ளது. புனிதமான கீரி மலைக் கேணியில் நீராடியதால் தனது மக ளின் குதிரை முகம் நீங்கப்பெற்றமையைக்

*ஒரு முள் குத்திய அனுபவம் கடலளவு எச்சரிக்கைக்குச் சமம்.*

கண்ட பரராஜசேகரன் எனும் மன்னன் மாவிட்டபுரம் கந்தனுக்கு ஒரு கோபுரம் அமைத்ததும், இதேபோன்று பல்வேறு அரசர் களும் ஆற்றிய கோயிற் திருப்பணிகளும் அவர்களெல்லாம் இறைவனின் உள்ளன் பான பக்தர்கள் என்பதை வெளிக்காட்டி நிற்கின்றது.

இருபத்தோராம் நூற்றாண்டில் இலங்கை யில் பல ஆலயங்கள் கோபுரங்கள் உடைய ஆலயங்களாகக் காட்சியளிக்கின்றது. கிழக்கு வாசல் கோபுரங்களுடையதாக பல ஆலயங் கள் யாழ்ப்பாணத்தில் விளங்குகின்றன. இரு வாசல்களுக்கு கோபுரங்கள் அமைந்த ஆல யங்களாக பல தோற்றமுறுகின்றன. நல்லூர்க் கந்தனுக்கு மூன்று வாசல்களில் கோபுரங் கள் கட்டப்பட்டுள்ளன. நான்கு வாசல்களுக் கும் கோபுரங்கள் அமைக்கப்பெற்று அன்னை பராசக்தி தெல்லிப்பழை துர்க்காதேவி விளங்குகின்றார். இக் கோபுரங்கள் மிகப் பெரும் செலவு செய்து கட்டப்பட்டதைப் பார்த்து இறை அன்பில்லாத சிலர் வீணே பணத்தைச் செலவு செய்வதாக குறை கூறு வோரும் உண்டு.

சைவ சமய அடியார்கள் கோவிலுக் குச் செல்லுமுன் கோபுரத்தை வணங்கி உள்ளே செல்கின்றனர். கோபுரத்தில் இறை வன் எழுந்தருளி நின்று அடியார்களுக்கு அருள் புரிவதாக ஆகமம் கூறுகின்றது. கோவிலுக்குள் செல்லமுடியாதவர்களும் கோபுரத்தை வணங்கினால், உள் சென்று வணங்கும் பலன் கிடைக்கும் என நம்புகிறார் கள். "அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்று மாணிக்கவாசகர் கூறுவதுபோல் இறையருள் உள்ளவர்கள்தான் கோபுரங்கள் கட்டுவார்கள், அறப்பணி செய்வார்கள் என்று உண்மை உரைக்கின்றது. அறப்பணிகளில் சிறந்த பணியாக விளங்குவது அன்னதானப் பணி. அன்னதானப் பணியைச் செய்ய தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான், சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகளைத் தூண்டு கின்றான், வழிகளையும் காட்டிக் கொடுக்கின் றான். அதனால் சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகள் பல்வேறு அறப்பணிகளை ஆற்றி வருகிறார். கலியுகத்தில் அடியார்களுக்கு அருள்புரிந்து, வினை தீர்க்கும் கடவுளாக சந்நிதியான் விளங்குகின்றான். அதனால் முருகன்,

"அருவமு முருவுமாகி
அநாதியாய்ப் பலவா யொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப்
பிழம்பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்க ளாறுங்
கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்
குதித்தன வுலக முய்ய"

ஆற்றங்கரையில் அமர்ந்திருக்கின் றான். மானுடப் பிறவி எடுத்த மானுடர்களே, உலகச் சிற்றின்பத்தில் மூழாது, பிற வினையை ஒழிக்கத் தினமும் அவன் ஆல யம் வந்து உங்கள் பாதஅடிபட வினைகள் ஓடிவிடும் என்பது உண்மையிலும் உண்மை. வீணே நிம்மதியில்லாது அலைந்து திரிவதை விட செல்வச்சந்நிதியான் ஆலயம் வந்து, வணங்கி வீடுபேறு அடையுங்கள்.

**இறைவனிடம் பிரார்த்தனை செய்வது, மக்களுக்குத் தொண்டு செய்வது ஆகிய இரண்டும் ஒருவரது வாழ்க்கையில் இடம்பெறவேண்டும். பிரார்த்தனையின் மற்றொரு வடிவம்தான் தொண்டு. தனக்காக வாழாமல் பிறர் நலனுக்காக வாழ்பவர்கள் தவம் செய்பவர்கள் என்றே கருதப்பட வேண்டியவர்கள். இறைவன் நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறான். இறைவன் நாம் செய்யும் பிரார்த்தனையைக் கேட்டுக்கொண்டிருக்கிறான் என்ற எண்ணத்தில் இறைவனிடம் நாம் பிரார்த்தனை செய்ய வேண்டும். குற்றங்களும் தீமைகளும் விலகி, தர்மங்களும், நன்மைகளும் உலகில் பெருகட்டும் என்று நாம் பிரார்த்தனை செய்யவேண்டும்.**

*நல்ல செயல்களே சமுதாயத்தை மாற்றும் காரணியாக உருப்பெருக்கிறது.*

# செல்வச் சந்நிதி முருகன் ஆலயம்

– திரு ஆ. விநாயகமூர்த்தி அவர்கள் –

சிவபூமி யென்னும் பேரிதற்கு உண்டு
சிவயோகர் சாமியார் சித்தரன்று
அவரெங்கும் லிங்கமா யிருக்கக்கண்டு
அவர்காலை வைக்கவே அஞ்சிநின்ற
தவயோக சித்தர்கள் வாழ்ந்த ஊராம்
தொண்டைமா னாற்றினி லிருந்துஐயன்
சிவகுரு நாதன்வாழ் பதியிதன்றோ!
சிந்தித்தே யித்தலம் தொழுதுவாழ்க!

ஆணவச் சூரனை யடக்கியச் சூரனோர்
அழகிய மயிலெனும் வாகன மாக்கினாய்
கானமா மயிலெனச் சுமந்தவன் செல்லவே
கந்தநின் கொடியெனச் சேவலாய்க் கூவுவான்
வானவர் சிறைவிடுத் தவர்களும் வாழவே
வைத்தவேல் முருக; நின் னடியாரைக் காக்கவே
ஞானவே லுருவிலே நின்றவா! சந்நிதி
நற்பதி யுறைகுவாய் நங்களுக் கருளுவாய்

எங்குமே லிங்கமா யிருப்பதா லெங்குநான்
அங்குகால் வைப்பதென் றேங்கியே யோகரும்
உங்குவந் துறையவே அரும்பெருஞ் சித்தரும்
அஞ்சிய பதியிதி லமர்ந்தவேல் முருகனே
கங்கைதங் குஞ்சடைப் பரமனார் நுதலெனும்
காய்கன லால்வருங் கடவுளே சந்நிதி
செங்கைவே லையனே சரணமாஞ் சேவடி
தோத்திரஞ் செய்யவா சந்நிதி வேலவா!

புத்தகங்கள் நிறைந்த வீடு மலர்கள் நிறைந்த தோட்டம் போன்றது.

ஆலயச் சூழலோ! அற்புதம் அதிசயம்
அங்குசெய் பூசனை அன்புகண் ணப்பனே
ஆலிலை யமுதினை வைப்பரெப் போதுமே
அடியவர்க் கதையளித் திடுவரே காலையில்
மாலவன் மருகனாம் முருகனின் சந்நிதி
மனநிறை வைத்தரும் அழகனி னருள்நிதி
நீலமா மயிலுறை வானருள் வேலனே
நினைத்தொழு தாலனு கானவன் காலனே.

ஆனைமுகன் சோதரனே! உப்புநீரை
எல்லையெனக் கொண்டமர்ந்த வெற்றிவேலா
ஞானவடி வேலுடனே தோன்றுமையா!
நல்லமயில் வாகனம்மே லேறிவாராய்
கானமகள் வள்ளிதெய்வ யானையோடே
காட்சிதர வேண்டுகிறோம் சந்நிதிக்கே
நானும்வரும் போததனைக் காணபதற்கே
நல்லவரம் தந்தருள்வா யெம்பிரானே.

## வேறு

சந்நிதியா னேமுருகா! சற்குருவே சரவணனே
என்நிதியே எம்மிறைவா என்றுமிளங்குமரனென
சந்நிதிவந் தேதொழுநோய் தீர்த்தருளு வாய்கந்தா
உன்னருளுக் கீடிணையே தெம்பெருமா னாறுமுகா

மந்திர மெதுவும்வேண்டாம் மௌனமாய்ப் பூசைசெய்தால்
உந்தனுக் குவப்பாமென்றே உள்மனப் பூசை செய்வார்
சுந்தரத் தமிழாற்பாடும் பாடலு முவந்தேற்பாயே
அந்தநற் பதியில்வந்தே னருட்பதம் பெறுதற்கன்றோ!

சோதனை அதிகமாக இருந்தால் சுகம் பெரிய அளவில் வரப்போகிறது என்று அர்த்தம்.

# மகாபாரதம்

– திரு எஸ்.எஸ். ரஜீந்திரன் அவர்கள் –

## காங்கேயன்

மகரிஷியான வசிஷ்ட முனிவரை வணங்குவதற்காக தேவர்கள், அஷ்ட வசுக்களும் சென்றார்கள். அங்கு சென்ற தேவர்களையும் அஷ்ட வசுக்களையும் வசிஷ்ட முனிவர் ஆதரித்து ஆசீர்வாதம் செய்து விருந்தளித்தார். அங்கு வந்த தேவர்களுக்கும் அஷ்ட வசுக்களுக்கும் உணவுகளையும், பலவகையான பண்டங்களையும் பாற்கடலைக் கடையும்போது தோன்றிய காமதேனு எனும் பசுவே வழங்கியது. உணவு அருந்திய அவர்கள் வசிஷ்ட முனிவரிடம் விடைபெற்று தமது இருப்பிடம் திரும்பினர்.

திரும்பிய அஷ்ட வசுக்கள் ஆகிய அனலன், அணிலன், ஆபச்சைவன், சோமன், தரன், துருவன், பிரத்தியூஷன், பிரபாசன் என்கின்ற எண்மரும் காமதேனுவின் பெருமைகள் பற்றி தமது மனைவிகளுக்கு கூறினார்கள். அதில் பிரபாசன் மனைவி அக் காமதேனுவின்மீது ஆசை கொண்டு அதனைப் பெற்றுத்தருமாறு கேட்டார். பிரபாசன் வசிஷ்ட முனிவர் இதற்கு ஒத்துக்கொள்ளார் என்று மறுக்க அவள் காமதேனுவைப் பெற்றுத் தந்தால் மட்டுமே உன்னுடன் இணங்குவேன் என்று கூறினாள்.

காமநோயினால் மயங்கிய பிரபாசன் மற்றைய வசுக்களை துணையாகக் கொண்டு வசிட்ட முனிவருக்கு தெரியாமல் திருடிக்கொண்டு வந்து தன் மனைவியிடம் கொடுத்தார். காமதேனுவைக் காணாத வசிட்ட முனிவர் ஞான திருஷ்டியால் நடந்தவற்றை அறிந்து அந்த அஷ்ட வசுக்களையும் "பூலோகத்தில் மானிடராய் பிறவுங்கள்" என்று சபித்தார். அதனை அறிந்த அஷ்ட வசுக்கள் வசிட்ட முனிவரிடம் சென்று காமதேனுவை அவரிடம் வழங்கி அவரையும் வணங்கி நடந்த நிகழ்ச்சியை உரைத்து சாப விமோசனம் கேட்டார்கள்.

அதற்கு வசிட்ட முனிவர், பூலோகத்தில் பாகீரதியாக பிறப்பெடுத்துள்ள கங்காதேவியின் புதல்வர்களாக அவதரித்து பிரபாசன் தவிர்ந்த ஏனையோர் பிறந்தவுடனே கங்காதேவியால் ஆற்றிலிடப்பட்டு தங்கள் இடம் சேர்வார்கள். பிரபாசன் திருமணம் செய்யாது பல சந்ததிகள் கண்டு இணையில்லா வீரனாக திகழ்ந்து மீண்டும் அவன் இடம் சேர்வான் என்று சாப விமோசனம் தந்தார். இதன் பயனாக சந்தனுமகாராஜாவுக்கும் பாகீரதிக்கும் ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. உடனே அவள் அக்குழந்தையை சாபத்தின் காரணமாக ஆற்றில் வீசினாள். சந்தனுமகாராஜன் பாகீரதிக்குச் செய்துகொடுத்த சத்தியத்தை நினைத்து ஒன்றும் பேசாமல் இருந்தான். இவ்வாறு ஏழு குழந்தைகளும் ஆற்றில் வீசப்பட்ட பின்னர், பாகீரதிக்கு எட்டாவதாகவும் ஆண் குழந்தை பிறந்தது. மனம் பொறுக்கமுடியாத சந்தனு மகாராஜன் பகீரதியிடம் "பெண்ணரசியே எனது சந்திரவம்சம் தழைக்க இந்த மகனையாவது எனக்குக் கொடு" என்று வேண்டினான். அதற்கு பகீரதி "அரசனே எனக்கு நீர் தந்த சத்தியத்தை மறந்தீரோ? ஆகவே இனிமேல் உன்னுடன் இருக்கமாட்டேன். இந்தக் குழந்தையை நான் கொண்டு சென்று அவனை சிறந்த கல்விமானாகவும் வீரனாகவும் உருவாக்கி 16 வயது வரும்போது மீண்டும் உன்னிடம் தருவேன்" என்று கூறி தன் புத்திரனுடன் மறைந்தாள்.

கங்கையைப் பிரிந்த சோகத்தில் 16 வருடங்களைக் கழித்தான் அரசன். 16 வருட நிறைவில் கங்கை கூறிய மொழிகளை நினைத்து கங்கை நதி அருகே சந்தனுமகாராஜன் வந்தான். கங்கா நதியிலே ஒரு சிறுவன் கங்கையாற்றை ஓடவிடாது தனது வில் அம்பு கொண்டு தடுப்பதைக் கண்டு அதிசயமுற்று அவனிடம் "நீ யார்?" என்று வினாவினான். அங்கே உடனே கங்கை அரசன் முன் தோன்றி "அரசனே இவனே உமது புத்திரன். இவன் வசிட்ட முனிவர், பரசுராமன், சனகாதி முனிவர்கள் ஆகியோரிடம் ஆண்களுக்கு உரித்தாகிய சகல லட்சணங்கள் யாவற்றையும் பயின்றுள்ளான். இவனால் சந்திரகுலம் சிறப்படையும். நான் இவனைப் பெற்றபடியால் இவனுக்குக் காங்கேயன் என்று பெயர் வைத்துள்ளேன். இனி இவன் உம்முடன் வாழ்வான்" என்று சொல்லி மறைந்தாள்.

அரசன் அளவில்லா மகிழ்ச்சி அடைந்து காங்கேயனுடன் அரசசபை சென்றான். காங்கேயனுக்கு எல்லா தேசத்து மன்னர்களின் முன்னிலையிலும் இளவரசு பட்டத்துக்குரிய முடி சூட்டினான். கங்கா தேவியைப் பிரிந்த துயரம் காங்கேயன் வரவால் மறைந்தது என்று அரசன் சுகமே வாழ்ந்து இருந்தான்.

*ஊக்கத்துடன் உழைத்தால் அதிஷ்டம் நம் வீட்டுக் கதவைத் தட்டும்.*

# ஞானச்சுடர் 2019 பங்குனி மலர்

## சித்திரை மாத வாராந்த நிகழ்வுகள்

05.04.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு:- "வாக்கு"

வழங்குபவர் :- செஞ்சொற் செல்வன் இரா. செல்வவடிவேல் அவர்கள்

---

12.04.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

விடயம் :- "முருகேசு சுவாமிகளின் குருபூசையுடன் சைவ இன்னிசை நிகழ்வு"

வழங்குபவர் :- முதுநிலைமாணி தெ. திருவேரகன் அவர்கள்

(பக்கவாத்திய சகிதம்)

---

19.04.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு:- "கந்தபுராணம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை)

---

26.04.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**ஞானச்சுடர் சித்திரை மாத வெளியீடு**

256ஆவது மலர்

வெளியீட்டுரை :- திரு க. ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள்

(இளை. கிராம சேவகர்)

மதிப்பீட்டுரை :- திருமதி தவமலர் சுரேந்திரநாதன் அவர்கள்

(இளை. அதிபர்)

பதிவு இல. QD/10/NEWS/2019

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

